
544

# பாலஸ்தீனம்

## ஓர் அரசியல் வரலாறு



கே.ரீ.கணேசலிங்கம்

சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No. 300.9933
Acc 544
GAN
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.9933
S44
GIAN

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனம்
# ஓர் அரசியல் வரலாறு

Class No. 300.9933
Acc 544
GAN

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

சேமமடு
2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | பாலஸ்தீனம் ஓர் அரசியல் வரலாறு |
| நூலாசிரியர் | : | கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம் © |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பதிப்பாண்டு | : | 2018 |
| எழுத்து | : | 10.5 புள்ளி |
| பக்கங்கள் | : | x + 146 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ.500.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11. |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை |
| சர்வதேச நியம நூல் இலக்கம் | : | **ISBN 978-955-685-053-6** |

| | | |
|---|---|---|
| Title | : | **PALESTINAM OOR ARASIYAL VARALAARU** |
| Author | : | Dr.K.T.Ganeshalingam © |
| Publisher | : | Stp.Pathmaseelan |
| Edition | : | 2018 |
| Price | : | Rs.500.00 |
| Published by | : | Chemamadu Poththakasalai<br>UG.50, People's Park,<br>Colombo -11.<br>Tel: 011-2472362, 2331475 |
| Printed by | : | Chemamadu Pathippakam, Colombo -11.<br>Tel : 0777 345 666, 071 2726778<br>Mail : *chemamadu@yahoo.com*<br>Web : chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN : 2018-01-02-154 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"பாலஸ்தீனம்: ஓர் அரசியல் வரலாறு" எனும் நூலானது கடந்த இரண்டு வருடகால முயற்சியின் பிரதிபலிப்பாக வெளிவந்துள்ளது. இந்த நூலின் ஏழு தலைப்புக்களுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் பின்னிணைப்பாகவும் தரப்பட்டுள்ளது. அனைத்து தலைப்புக்களும் பாலஸ்தீன அரசியல் வரலாற்றை வெளிப்படுத்துகிறது. இப்பகுதி அரபுலகத்தின் அரசியல் வரலாற்றினை ஆராய்ந்துள்ளது. ஆளுமை சார் அரசியல் எனும் பகுதிக்கூடாக பாலஸ்தீன அரசியல் வரலாறு உரையாடப்படுகின்றது.

இந்நூலின் ஆரம்ப பகுதி பாலஸ்தீன வரலாற்றினை மிகச் சுருக்கமாக விளங்கிக் கொள்ளும் விதத்திலும் அதன் மீதான பற்றுதல் எப்படி பாலஸ்தீன தேசம் பற்றிய அவாவை ஏற்படத்தியது எனும் அனுபவம் பகிரப்படுகிறது. உலகிலுள்ள அனைத்து தேசிய இனங்களுக்கும் பாலஸ்தீனர்கள் அணுகுமுறை ஒரு பாடமாக அமையும் என்ற எதிர்பார்க்கை மேலிட்டதன் பிரதிபல்ப்பாக இப்பகுதி ஆராயப்பட்டுள்ளது. அதே நேரம் யூதர்களின் மிலேச்சத்தனமான அணுகுமுறைகளால் பாலஸ்தீனர்கள் அடைந்த துயரமும் விபரிக்கப்படுகிறது. இது இலங்கை தமிழருக்கும் அதன் அரசியல் தலைமைகளுக்கும் அதிக செய்திகளை வெளிப்படுத்தும் என்ற எதிர்பார்க்கை கொண்டதாகும்.

இந்நூலின் ஏனைய பகுதிகள் பாலஸ்தீன தலைமைத்துவத்தின் ஆளுமைகளை சார்ந்ததொன்றாக உள்ளது. அத்தகைய அரசியல் ஆளுமைகள் ஒரு தேசத்தின், ஒரு தலைமைத்துவத்தின் வரலாற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி உருவாக்கி நிறுத்தியுள்ளன என்பதும் இனத்தின் தோல்வியானது தேசத்தின் தனித்துவத்தை அழிக்கும் என்பதும் முழுமையாக ஆராயப்படுகிறது. சில அனுபங்களும் அதன் பதிவுகளும் மனித சமூகத்தினை நவீன சிந்தனைக்கு வித்தாகின்றது. அரசறிவியலும் அத்தகைய ஆளுமைகளின் தனித்தன்மைகளை அடையாளம் கண்டு புதிய சமூகத்தின் மாறுதலுக்கு வித்திடுகின்றது. அரசறிவியலின் ஓர் ஆய்வுப் பகுதியாக ஆளுமைசார் அரசியல் அமைந்திருந்தாலும் அதுவே முதன்மையான எண்ணக்கருவாக உலக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. தனிமனித ஆளுமைகளே உலக வரலாற்றின் அடிப்படைகளாகவும் தேசங்களதும், தேசியங்களதும் உருவாக்கத்திற்கு மூலவேராக அமைந்துள்ளன. அரசறிவியலின் கோட்பாட்டு வடிவங்களுக்கு நடைமுறை அர்த்தம் கொடுக்கும் மிகப்பிரதான பகுதியாக ஆளுமைசார் அரசியல் விளங்குகிறது.

இந்நூல் அத்தகைய வியாசமான எண்ணத்துடன் உருவாக்கப் பட்டுள்ளது. இதனை உருவாக்குவதில் 2011/12 கல்வி ஆண்டு அரசறிவியல் மாணவர்கள் காரணமானவர்களாக அமைந்துள்ளமை மகிழ்ச்சியான விடயமாகும். அவர்களது மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு கற்றலில் ஒரு பகுதியான இஸ்ரேல் - பலஸ்தீனம் எனும் அலகில் குழு அளிக்கை *(Group Presentation)* யின் பதிவுகளை முறைப்படி ஒழுங்குபடுத்தி விரிவாக்கி தயார் செய்யப்பட்ட தொகுப்பாகவே இந்நூல் அமைந்தள்ளது. இதனை உருவாக்குவதற்கு குறித்த கல்வி ஆண்டு அரசறிவியல் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் அவர்களது வகிபங்கினை பராட்டுகின்றேன். இந்த முயற்சியை மேற்கொள்ள எடுத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 2011/12 ஆண்டு துறைசார் மாணவ பிரிதிநிதி கே.கஜீபன் மற்றும் ஆர்.தாரகன் ரி.விஜயராஜ் பி.குகவரதர் ஆகியோர் அதிகமான பங்களிப்பு செய்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றிகள். அவ்வாறே கணணி வடிவமைப்பிலும் எழுத்து திருத்தங்களை அவதானித்தலிலும் அதே பிரிவு மாணவர்கள் தற்போது உதவி விரிவுரையாளர்களாக பணிபுரியும் பி.லக்க்ஷனா எஸ்.புளோரிடா எஸ்.சுரேகா ஆகியோருக்கும் நன்றிகள். குறித்த கல்வி ஆண்டு மாணவர்கள் ஒவ்வொருவரதும் உழைப்பும் ஆ்ய்வு மீதான அவாவும் இந்நூலுக்கான முதலீடாகும். இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று மேலும் பல நூல்களை மாணவர்களுடன் இணைந்து வெளியீடு செய்யும் முயற்சி அவசியமானது.

கடந்த பத்து வருடங்களுக்கு மேல் இப்பாடநெறியை மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களுடன் இணைந்து இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியான தருணமாக உள்ளது. மாணவர்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வதே சிறந்த ஆய்வுக் கலாசாரத்தை ஏற்படுத்தும். அது எதிர்கால சந்ததிக்கு சரியான ஆய்வு பாரம்பரியத்தை பரிமாற்றுவதுடன் பல்கலைக்கழகத்திற்கு நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தும்.

நிறைவாக இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய சேமமடுப் பதிப்பகத்தினருக்கும் அதன் முகாமையாளருக்கும் நன்றிகள். எனது வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் பேராடும் எனது மனைவி சாந்தினிக்கும் பிள்ளைகளான க்ஷரோன், க்ஷாரங்கிக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

**கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்**
*நூலாசிரியர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எமது பதிப்பகம் சார்பில் கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம் எழுதிய நூல்களை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். இந்த வரிசையில் **"பாலஸ்தீனம் ஓர் அரசியல் வரலாறு"** என்னும் நூலையும் வெளியிடுகின்றோம்.

இந்நூல் பாலஸ்தீன தலைமைத்துவத்தின் ஆளுமைகளை சார்ந்ததொன்றாக உள்ளது. அத்தகைய அரசியல் ஆளுமைகள் ஒரு தேசத்தின், ஒரு தலைமைத்துவத்தின் வரலாற்றை எப்படிஉருவாக்கி நிறுத்தியுள்ளன என்பதும் இனத்தின் தோல்வியானது தேசத்தின் தனித்துவத்தை அழிக்கும் என்பதும் முழுமையாக ஆராயப்படுகிறது. அரசறிவியலின் ஓர் ஆய்வுப் பகுதியாக ஆளுமைசார் அரசியல் அமைந்திருந்தாலும் அதுவே முதன்மையான எண்ணக்கருவாக உலக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நூலின் எட்டு தலைப்புக்களுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் பின்னிணைப்பாகவும் தரப்பட்டுள்ளது

நூலாசிரியர் தொடர்ந்த நாம் இதுபோன்ற நூல்களளை வெளியிட சந்தர்ப்பம் வழங்கி வருகின்றார். இதற்காக அவருக்கு நன்றி. இந்நூலாக்கப் பணிகளில் எம்மோடு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

113, சேமமடு
பத்மகிரி
வவுனியா

சதபூ.பத்மசீலன்
சேமமடு பொத்தகசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | |
| பதிப்புரை | |
| பாலஸ்தீனம் | 1 |
| பாலஸ்தீன் ஆட்சித்துறை | 6 |
| பலஸ்தீன விடுதலை இயக்கம் | 12 |
| ஹமாஸ் அமைப்பு | 40 |
| இன்டிபாடா | 60 |
| அன்வர் சதாத் | 80 |
| யசீர் அர∴பாத் | 93 |
| மம்மூத் அப்பாஸ் | 109 |
| உசாத்துணை நூல்கள் | 120 |
| பின்னிணைப்பு | 125 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1
# பாலஸ்தீனம்

பாலஸ்தீன நாடு என்பது கிறிஸ்தவ வேத நூலில் கேனன் *(Canaan)* என அழைக்கப்படுகிறது. இது தென்மேற்கு ஆசியாவில் மத்திய தரைக்கடலின் கிழக்குக் கோடியில் சிரியாவிற்கும் எகிப்திற்கும் இடையே அமைந்துள்ள மிகச் சிறிய நிலப்பகுதி. இப்பகுதியானது இன்று இஸ்ரேல், ஜோர்டான் என இரு நாடுகளாக பிரிக்கப்பட்டு ஒரு சிறு பகுதி எகிப்துடன் இணைக்கப்பட்டு விட்டதால் பாலஸ்தீனம் என்னும் பெயரை உலகப் படத்தில் காண இயலாது. இதன் எல்லைகள் அடிக்கடி மாறிக் கொண்டே இருந்தாலும் வடக்கில் லெபனானும், வடகிழக்கில் சிரியாவும், கிழக்கில் டிரான்ஸ் - ஜோர்டனும், தென்மேற்கில் எகிப்தும், மேற்கில் மத்தியதரைக்கடலும் எல்லைகளாக உள்ளன. எனினும் இப்பகுதியின் அரசியல் அந்தஸ்தும், புவியியல் பரப்பளவும், அவ்வப்போது கணிசமான மாற்றங்களைக் கண்டுள்ளன. குறிப்பாக கிழக்கு பகுதி பெரும் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. பல சமயங்களில் ஜோர்டானுக்குக் கிழக்கில் உள்ள பகுதிக்கும் தொலை தூரத்தில் காணப்படும் பாலஸ்தீனக் கிழக்கெல்லை, அராபியப் பாலைவனம் வரை கூட நீட்டிக்கப்பட்டு இருந்தது.

### புவியியல் அமைப்பு

இது ஒரு வறண்ட வெப்பமான பகுதியாகும். மழை காலம் நவம்பர் முதல் ஏப்ரல் வரையான காலத்தில் வெப்பம் மிதமாக காணப்படும். மே முதல் அக்டோபர் வரையிலான கோடை காலத்தில் வெப்பம் அதிகரித்தும் மழையின்றியும் காணப்படும். அத்துடன் இதனைக் கடற்கரைப்பகுதி, மலைகள், ஜோர்டான் பள்ளத்தாக்கு, பாலைவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.இதன் கிழக்கில் நீண்ட மலைகளும், உயர் நிலைப் பகுதிகளும் உள்ளன. அவற்றில் வடக்கில் யேசுநாதர் வளர்ந்த இடமான கலீல் மலை விளங்குவதாக புராதன கால வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. மத்திய பாலஸ்தீனத்தில் சமாரியா மலை ( *Hill of Samaria*) யைக் காணலாம். மேல் கலிலீயில் உள்ள மலைகள் சிரியா, லெபனான் மலைகளின் தொடர்ச்சியாக உள்ளன. கீழ்க் கலிலீயில் வளமிக்க மண்ணும் தேவையான நீரும் உள்ளதால் பாலஸ்தீனத்தின் வளமிக்க பகுதியாக கருதப்படுகிறது. இங்கு தான் விவிலிய நூலில் குறிப்பிடப்படும் தைபீரியசு ஏரி உள்ளது.

மிக ஆழமான ஜோர்டான் பள்ளத்தாக்கில் சாக்கடல் *(Dead Sea)* மட்டத்திலிருந்து 397 மீ. ஆழமான பகுதியாக அமைந்துள்ளது. இதன் கடற்கரைப் பகுதி தான் உலகிலேயே மிகத் தாழ்ந்த இடமாகும். பாலஸ்தீனத்திலுள்ள ஒரே ஆறான ஜோர்டான் சாக் கடலில் கலக்கிறது. அப்பகுதியில் விலையுயர்ந்த தாது உப்புக்களும் *(Mineral Salts)* பிற வேதிப் பொருள்களும் பெறப்படுகின்றன. இவ்வாறு பாலஸ்தீனம் ஒரு புறம், இயற்கைப் புவிப்பரப்பின் மிகத் தாழ்மையான பகுதியான சாக் கடல் மற்றொரு புறம், கடல் மட்டத்திலிருந்து 2000 அடிக்கும் ( 610மீ ) மேற்பட்ட மலைச் சிகரங்கள் ஆகிய வேறுபட்ட தரை அமைப்புக்களைப் பெற்றுள்ளது.

**வரலாறு**

வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து, ஏறக்குறைய 100,000 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றாதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பாலஸ்தீனத்தின் வரலாறு ஏறத்தாழ கி.மு 1000 இல் தொடங்குகிறது. செமெடிக்கு இனத்தைச் சேர்ந்த கிபுருக்கள் *(Hebrews)* அல்லது இஸ்ரேலியர் எகிப்திலிருந்து கி.மு 1442 இல் புறப்பட்டு வந்து குடியேறி, கனான்களையும் *(Canaanites)*, பிளிசுதீனியர்களையும் *(Philistines)* வென்று தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினர். அப்பொழுது அவர்கள் 12 சுதந்திரமான குடும்பங்களாக பிரிந்திருந்தனர். சாலமன் என்னும் பேரரசுருடைய ஆட்சிக்குப் பிறகு பாலஸ்தீனம் இஸ்ரேல், ஜீடா என இரு நாடுகளாகப் பிரிந்தது. இஸ்ரேலின் தலைநகரம் சமாரியா, ஜீடாவின் தலைநகரம் ஜெருசலேம். கி.மு 750க்கும் கி.மு 550க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைப்பட்ட காலத்தில் இவ்வராச்சியங்கள் மெசப்பொட்டேமியாவிலிருந்து பரந்து வளர்ந்து வந்த பேரரசுகளால் அழிக்கப்பட்டன. இஸ்ரேல் சிரியாவின் கீழும் ஜீடோ பாபிலோனியாவின் கீழும் ஆளப்பட்டன. கி.மு 4ம் நூற்றாண்டில் அலெக்சாந்தர் பாலஸ்தீனத்தை வென்றார். மூன்று ஆண்டுகளுக்குப் பாலஸ்தீனம் கிரேக்கர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததுடன் ஹெல்லனிக் *(Hellenic)* நாகரீகமும் பரவலடையலாயிற்று. கி.மு 141 இல் மாக்கபீ கலகம் தோன்றிக் கிரேக்கர் ஆட்சி ஒழிக்கப்பட்டு 70 ஆண்டுகள் யூதர் ஆட்சி நிறுவப்படலாயிற்று.




*ஆதாரம்.Google Map 2017.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபது ஆண்டுகளுக்கு பிறகு இவ்வாட்சியும் ரோமானியப் பேரரசின் ஆதிக்கத்துக்கு அடங்க வேண்டியதாயிற்று. கிறிஸ்து பிறந்த காலத்தில் பாலஸ்தீனத்தில் ரோமானிய ஆளுனர் ஆட்சி நடைபெற்றது. யூதர்கள் ரோமானியருடைய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெறப் பலமுறை கலகம் செய்தனர். ஆயினும் அக்கலங்கள் எளிதில் அடக்கப்பட்டன. முதலாம் கான்ஸ்டன்டைன் ரோமானியப் பேரரசரான பிறகு, பாலஸ்தீனம் கிறிஸ்தவ சமயத்தவர்களுடைய புன்னியத்தலமாக மாறி, செழிப்பும் வளமும் பெற்றது. இதனை அரேபியர் கி.பி 640 இல் கைப்பற்றினர். பின்னர் கி.பி. 9 ம் நூற்றாண்டில் இது எகிப்தில் ஆட்சியின் கீழ்ச் சென்றது. எனவே புனித இடங்களை மீட்பதற்காகச் கிறிஸ்தவர்கள் இரு நூற்றாண்டுகளுக்கு சிறு, சிறு இடைவெளிகளுக்கிடையே, சிலுவைப் போர்களில் *(Crusades)* ஈடுபட்டனர். கி.பி 1099 இல் ஜெருசேலமில் இலத்தீன் பேரரரசு *( The Latin Kingdom Of Jerusalem )* ஏற்படுத்தப்பட்டு 100 ஆண்டுகளுக்கு நீடித்தது. பின்னர் மாம்லுக்குகளின் *(Mamlukes)* ஆட்சி ஏற்படுத்தப்பட்டு இப்பகுதியில் முகமதிய நினைவுச் சின்னங்கள் தோன்றின.

1516 இல் ஏற்பட்ட ஒட்டோமன் துருக்கியர்களுடைய ஆட்சி பொதுவாகப் பாலஸ்தீனத்திற்கு அனுகூலமாகவே இருந்தது. 1920 இல் முதல் உலக யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் பாலஸ்தீனத்தை துருக்கியிடமிருந்து கைப்பற்றினர். இப்பிரதேசம் அப்போருக்கு பிறகு ஏற்பட்ட சர்வதேச சங்கத்தின் பிரகடனத்தின் ஏற்பாட்டின் படி ஆங்கிலேயர் வசம் விடப்பட்டது. 1917 இல் பிறந்த பால்பர் *(Balfour )* அறிக்கைப்படி பாலஸ்தீனம் யூதர்கள் குடியேறுவதற்கான ஒரு நாடாக அமைய வேண்டும் என்று ஏற்பட்டது. பாலஸ்தீனத்தில் இஸ்லாமியர்களும் யூதர்களும் சேர்ந்து வாழும் நிலை ஏற்பட்டதனால் அவர்களுக்கிடையே தகராறுகளும் ஏற்படத் தொடங்கின. அத்துடன் 1933 இலிருந்து பெரும்பாண்மையான யூதர்கள் பாலஸ்தீனத்தில் வந்து குடியேறிய வண்ணம் இருந்தனர்.

பாலஸ்தீனத்தை அராபியருக்கும் யூதருக்குமாக பங்கு பிரித்துவிடலாம் என்று 1936 இல் ஆங்கிலேயர் ஒரு யோசனை கூறினர். இந்த யோசனை யூதர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தரராயினும் அராயியர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. எனினும் ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் சபை 1947 இல் பாலஸ்தீனத்தை இவர்களிடையே பிரித்துக் கொடுப்பது என்றும் ஜெருசலேத்தினை மட்டும் அதன் கட்டுப்பாட்டில் பன்னாட்டுப் பகுதியாக *( International Zone )* வைப்பது என்றும் முடிவு செய்தது. இங்கிலாந்து அரசு 1948 இல் அப்பகுதியைவிட்டு விலகிக் கொள்வது என அறிவித்ததால் 1948 மே 14 இல் இஸ்ரேல் சுதந்திரம் பெற்றதாக அறிவித்தது. மறுநாளே சிரியா, லெபனான், எகிப்து, ஜோர்டான், ஈராக் ஆகியவை இப்பகுதியிலிருந்த அரேபியருடன் சேர்ந்து கொண்டு இஸ்ரேலை எதிர்த்தன. அரேபியரின் பல தாக்குதல்களையும் இஸ்ரேல் முறியடித்தது. அப்போர்களின் பொழுது இஸ்ரேல் கைப்பற்றிய வடக்குச் ஜோர்டான் பள்ளத்தாக்கு, கலிலீ, எசுடரலான் சமவெளி *( Plain of Esdraelon)*, கடற்கரைப்பகுதி நெகேவின் *(Negev)* பெரும் பகுதி ஆகியவற்றை அந்நாடு பெற்றது. இதனால் பாலஸ்தீனத்தை விடுவிக்கப் பல போரட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

தொடர் போராட்டத்தின் விளைவாக 15 நவம்பர் 1988ம் ஆண்டு பாலஸ்தீன் சுதந்திர அரசாக தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டது. இது உடனடியாகவே அரபு லீக் நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட போதும் ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்படவில்லை. 2012 ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் நாள் ஐ.நா பாலஸ்தீனத்தை பார்வையாளர் நாடு *(Observer state)* என்னும் நிலைக்கு உயர்த்தியது. இவ்வாறு பாலஸ்தீனம் இறையாண்மை கொண்ட நாடு என்பது உள்முகமாக ஏற்கப்பட்டுள்ளது. இவ் ஐ.நா பொதுப் பேரவை வாக்கெடுப்பின் விளைவாக உலகின் மிகப் பெரும்பான்மையான நாடுகள் பாலஸ்தீன நாடு முழு இறையாண்மை கொண்ட நாடாக உருவாகிட ஆதரவு தெரிவிக்கின்றன. அத்துடன் பாலஸ்தீனத்துக்கு பார்வையாளர் நாடு என்றும் நிலை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஐ.நா பேரவை மன்றத்தில் அந்நாட்டின் தேசிய கொடி உயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# பாலஸ்தீன ஆட்சித்துறை

### பாலஸ்தீன பாராளுமன்றம்

பாலஸ்தீன் பாராளுமன்றம் சட்ட மேலவை *The Palestinian Legislatire Council (PLC)* என அழைக்கப்படுகிறது. இது மேற்குகரை மற்றும் காஸா உட்பட 16 தேர்தல் மாவட்டங்களில் இருந்து தேர்தெடுக்கப்பட்ட 132 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையாகும் இது 1996 மார்ச் 07 இல் முதன்முதலாக நடைமுறைக்கு வந்தது. இச் சட்டமன்றத்திற்கு பயன்படுத்தப்படும் சின்னமாக சலாடிக் கழுகை *(Eagle of Saladin)* பயன்படுத்துகின்றன்.

பாலஸ்தீன் சட்டசபையானது ஒஸ்லோ உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்டு இற்கு அமைவாக அதிகாரங்களும் பொறுப்புக்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பராளுமன்றத்தின் உறுப்பினர்களில் அரைவாசிபேர் (50%)மக்களினால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மிகுதி உறுப்பினர்கள் (50%) அரைவிகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலமாக 16 தேர்தல் தொகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர். 2005 யூனில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 88 இல் இருந்து 132 ஆக அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது பாலஸ்தீனின் சட்டத்துறைக்கு பொறுப்பாக பாராளு மன்றம் உள்ளது. இது முக்கியமாக சட்டங்களை இயற்றுதல் நிர்வாகத் துறையின் செயற்பாட்டை மேற்பார்வை செய்தல் போன்ற பொறுப்புக் களைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றம் ஆரம்பத்திலிருந்து சிறப்பாக செயற்படாமைக்கு பல காரணங்கள் தாக்கம் செலுத்துகின்றன. அதாவது பத்தா -கமாஸ் இடையிலான மோதல் உறுப்பினர்களை இஸ்ரேல் சிறை வைத்தமை தனிமைப்படுத்தப்பட்ட நிலை ஒஸ்லோ உடன்படிக்கையின் பிரகாரம் பாலஸ்தீனத்தின் வரைபடம் பிரிக்கப்பட்டமை போன்றன அதன் செயற்பாட்டிற்கு தடையாக உள்ளது.

## ஜனாதிபதி

பாலஸ்தீனில் அதிகாரம் மிக்கவராக ஜனாதிபதி காணப்படுகின்றார். இவர் மக்களினால் நேரடி தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்படுகின்றார். இவர் தன்னகத்தே பல அதிகாரங்களைக் கொண்டுள்ளார். அவையாவன

படைகளின் தலைமை தளபதியாக விளங்குகின்றமை அனைத்து வெளிநாட்டு தூதுவர்களையும் ஏற்று வரவேற்றல். அவசரகால அரசினை அமைக்கும் உரிமை இராணுவ நீதிமன்றம் மாநில பாதுகாப்பு போன்றவற்றினைக் கட்டுப்படுத்தும் உரிமை என்பன காணப்பட்டாலும் சட்டசபையை கலைக்கவோ மற்றும் முன்கூட்டியே தேர்தல் அமைக்க அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை.

பிரதம மந்திரியினை நியமித்தல் அமைச்சரவையை கூடுமாறு பிரதமருக்கு ஆணையிடல் விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் சட்டபேரவை அமர்வு இல்லாத காலத்தில் சட்டத்தின் அதிகாரத்தின்படி உத்தரவு கட்டளை பிறப்பித்தல் அதிகாரம் உண்டெனினினும் இவ் கட்டளை யானது சட்ட பேரவையில் விரைவில் கூட்டபடுமென ஒப்புதல் வழங்கப்படும் போது இவ் சட்டத்தின அதிகாரம் கட்டுபபடுத்தப்படு கின்றதையும் காணலாம். இந்த வகையில் பாலஸ்தீன் முதலாவது ஜனாதிபதியாக 1994 யூலையில் 05 இல் யசீர் அர∴பாத் தெரிவு செய்யப்பட்டார் தொடர்ந்து யசீர் அர∴பாத்தின் மரணத்தின் பின்னர் 2005 ஜனவரியில் மஃமூத் அபாஸ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு தற்போது பதவி வகித்து வருகின்றமையைக் காணலாம்(2018).

## அரசாங்கம்

பாலஸ்தீனமானது இரண்டு தனி நிர்வாகங்களாக பிரிந்துள்ளது. அதாவது மேற்கு கரையானது ஹமாஸின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே பாலஸ்தீன அரசாங்கம் எனப்படுகிறது. ஆயினும் 2007 இல் இருந்து காசா பகுதியை ஹமாஸ் அமைப்பு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது அதனால் ஃபத்தா பிரதிநிதிகள் வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது

**ஹமாஸ் அரசாங்கம்**

பாலஸ்தீன ஆட்சித்துறையானது இஸ்மாயில் தலைமையில் யூன் 2007 இல் ஃபத்தா அரசாங்கத்தை வெளியேற்றி ஹமாஸ் அரசாங்கத்தை நிறுவியது. அதற்கு போட்டியாக மாற்று அரசாங்கம் ஒன்று பத்தா தலைமையில் மேற்கு கரையில் நிறுவப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் காஸா என மூன்று நிர்வாக பகுதிகளாக பிரிக்கப்பட்டது அவை முறையே.

* பொதுஜன பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் கட்டுப்பாட்டு பகுதி

* பாலஸ்தீன பொதுமக்கள் மற்றும் இஸ்ரேலிய கட்டுப்பாட்டிலுள்ள பகுதி

* இஸ்ரேலின் முழு கட்டுபாட்டிலுள்ள பகுதி

என்பனவே அவையாகும்.

மேலும் 2012 செப்ரெம்பரில் இரண்டாவது ஹமாஸ் நிர்வாகம் அறிவிக்கப்பட்டது 2007 இல் பாலஸ்தீன தேசிய நிர்வாத்திலிருந்து பிரிந்த பின்பு காஸா மீது ஹமாஸ் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கமாக அமைந்தது.

**மேற்கு கரை அரசாங்கம்**

ஃபத்தா தலைமையில் மேற்கு கரையில் உருவாக்கப்பட்டதே மேற்குக் கரை அரசாங்கமாகும். மேற்கு கரை 11 ஆட்சி அமைப்புக்களைக் கொண்டுள்ளது. ஜெனின், டுபாய், நப்லஸ், எரிக்கோ, ஜெருசலேம், பெத்லேகேம், துல்ஹராம், சிப்சிரமடல்லால், பிரிஸ், குவல்யா ஆகிய பிரதேசங்களை தன் கட்டுபாட்டில் வைத்து ஆட்சி புரிந்து வருகிறது. இதுதவிர காஸா பிரதேசம் பீர்ஆர் பிரதேசம் என பிரிக்கப்பட்டு ஆட்சி புரிகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றை விட நெருக்கடியான காலங்களில் சில ஏற்பாடுகளை செயல்படுத்தும் போக்கும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டரசாங்கம் - *Unity Government*

இது குறுகிய கால அரசாங்க அமைப்பை குறிக்கின்றது 2006 ன் பாராளுமன்றத் தேர்தலுக்கு அமைவாக 2007 இல் நிறுவப்பட்டது. இது 09 ஹமாஸ் மற்றும் 06 ஃபத்தா அமைச்சுக்களினை உள்ளடக்கியிருந்தது. ஹமாஸ் ஃபத்தா பிரச்சினையின் பின்னர் இவ் ஒற்றுமை அரசாங்கம் கைவிடப்பட்டது

## இடைக்கால அரசாங்கம் - *Intrem- Government*

பாலஸ்தீன சட்ட அமைப்பு அவசரகால அரசாங்கம் 30 நாட்களுக்கு மட்டுமே நீடிக்க முடியும் எனக் கூறியது இதன்படி ஜனாதிபதி அபாஸ்னால் புதிய தேர்தலின் மூலம் புதிய அரசாங்கம் பதவி ஏற்கும் வரை பொறுப்பு இருக்கும் வகையில் புதிய இடைக்கால அரசாங்கத்தை நியமித்ததை காணலாம்

## அவசரகால அரசாங்கம் - *Emergency Government*

இது 2007 இல் நிறுவப்பட்டது குறிப்பாக ஹமாஸ் ஃபத்தா ஒற்றுமை அரசாங்கத்தின் உடைவிற்கு பின்னர் 2007 இல் நிறுவப்பட்டது பாலஸ்தீன சட்ட விதியானது பராளுமன்றத்தின் ஒப்புதல் இன்றி ஜனாதிபதி அவசரகால அரசாங்கத்தினை நியமிக்க முடியும் எனக் கூறுகின்றது இதன் பிரகாரமே 2007 இல் அவசரகால அரசாங்கம் உருவாக்கப்பட்டதைக் காணலாம்.

## பிரதம மந்திரி அரசாங்கம்

அப்பதவியானது 2003.03.19 இல் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு அமைவாக உருவாக்கப்பட்டது. இந்த வகையில் *Mahmoud Abbas* முதலாவது பிரதம மந்திரியாக 2003.4.30 இல் பதவி ஏற்றார் பொதுவாக பிரதமர் மக்களினால் நேரடியாக தெரிவு செய்யப்படுவதில்லை மாறாக ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றார். அவர் தன்னகத்தே சில அதிகாரங்களையும் கொண்டுள்ளார். எடுத்துக்காட்டாக,

அமைச்சரவை உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் பதவி நீக்கம் செய்தல் இனைக் குறிப்பிடலாம். இந்த வகையில் பிரதம மந்திரி அமைச்சரவையை கட்டுப்படுத்தும் பிரதி நிதியாக உள்ளார் என்றால் அதுவே பொருத்தமுடையதாகும். இதுவரை காலமும் பதவியிலிருந்த பிரதமர்களது விபரம்.



Arasady Public Library Municipal Council Batticaloa
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mahmeud Abbas –Fatah- 2003 April 30 -07 Oct 2003

Ahmad Qurei- Fatah-07.Oct.2003-15 December 2005

Nabil Shaath-Fatah-15 Dec.2005-24Dec 2005

Ahmad Qurei- fatah=24.Dec.2005-19.Feb .2006

Ismail Haniyeh-Hamas-19.Feb 2006-14 June. 2007

Salam Fayyed-Independent-14.June.2007-06.June.2013

Rami Hamdellah –fatah-06.June-2013- 02 June 2014

**அமைச்சரவை**

பாலஸ்தீன அமைச்சரவைக்கான உறுப்பினர்களை பிரதமர் நியமிக்கிறார். இவ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 24ற்கு மேலாக இருக்க கூடாதென கூறப்படுகிறது. இந்த வகையில் முதலாவதாக யசீர் அர.்.பாத் தலைமையிலான அமைச்சரவை 2002 தொடக்கம் அர.்.பாத்தின் மரணம் வரை இயங்கி வந்தது. பின்னர் அபாஸ் தலைமையில் ஜலாம் ரய்யட் பிரதமர் அரசாங்கம் இயங்கியது எனினும் ஊழல் எதிர்ப்பு போராட்டம் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்ய 2013.06.06 இல் இருந்து இன்றுவரை ரமிஹம்டில்லா தலைமையிலான அமைச்சரவை பாலஸ்தீனத்தில் இயங்கி வருவதைக் காணலாம்

**நீதித்துறை**

பாலஸ்தீன நீதிதுறை ஒரு சிக்கலான வரலாற்றினை கொண்டது. குறிப்பாக பல நாடுகளின் சட்டங்களின் ஆட்சியில் இருந்து வந்துள்ளது அதாவது *Ottomon Law , British Law , Jordanian Law, Egyption Law ,Israel Law* என இருந்தது 1993 இல் மேற்கொண்ட ஒஸ்லோ உடனபடிக்கையின் மூலம் பெறப்பட்ட அதிகாரங்கள் அடிப்படையில் ஒரு சீரான சட்ட அடித்தளம் இடப்பட்டது. இதன் விளைவாக தாமான அடிப்படை சட்டம் *(Basic Law)* 2002 இல் உருவாக்கப்பட்டது. இந்த வகையில் பாலஸ்தீன பகுதிக்குள் மொத்தமாக 37 நீதிமன்றங்கள் உள்ளன. குறிப்பாக பாலஸ்தீன சட்டத்தின்படி உயர்நீதிமன்றக் குழுவின் பரிந்துரைக்கு பின்னர் பொது வழக்கறிஞர்கள் நீதிபதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். பாலஸ்தீனத்தின் நீதிதுறை கட்டமைப்பபை கீழ்வருமாறு நோக்கலாம்.

உயர் நீதிமன்றம்

சிவில் நீதி மன்றம்

மேல்நீதி மன்றம்

மேல்முறையீட்டு நீதிமன்றம்

குற்றவியல் நீதிமன்றம்

மாவட்ட நீதிமன்றம்

என்பன.

இது தவிர மத நீதிமன்றங்களும் உள்ளன. அதாவது தனிப்பட்ட நீதிமன்றம் மூலம் முஸ்லிம்களின் விவாகரத்து மற்றும் வேறு பிரச்சினைகள் ஷரியா நீதிமன்றத்தினாலும் தீர்ப்பு வழங்கப்படுகிறது. இந்த வகையில் பாலஸ்தீனின் நீதித்தறை கட்டமைப்பானது சிறப்பான ஒன்றாகவே செயற்பட்டு வருகின்றது.

எனவே பலஸ்தீனம் நெருக்கடி மிக்க நாடாக விளங்கினாலும் சட்டவரைபுகளை பேண முயலுவதனை காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# பாலஸ்தீன விடுதலை இயக்கம்[1] (PLO)

## அறிமுகம்

"யூதர்கள் தமக்காகவோ தமது குடும்பத்திற்காகவோ கவலைப்பட்டதில்லை மாறாக தமது இனத்துக்காகவே சரித்திரம் முழுவதும் கவலைப்பட்டு உழைத்து வந்திருக்கிறார்க்ள். உலகில் வேறெந்த ஓர் இனமும் இப்படி இருந்தது கிடையாது. ஒரு நாடு கைப்பற்றப்பட்டு மக்கள் அடிமையாக்கப்பட்டவுடன் அம் மக்களை இழிவானவர்களாகவும் வரலாறு அற்றவர்களாகவும் ஆக்குவது வென்ற இனம் தொடர்ந்து கடைப்பிடிக்கின்ற நடைமுறை"[2]

இவ்வாறான சூழலில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தோற்றம் பற்றி நோக்குவதற்கு முன்னர் இஸ்ரேல்- பலஸ்தீன முரண்பாடு பற்றிய ஓர் தேடல் அவசியமாகின்றது.

இதன்படி இன்றைய வரைபடங்களில் மத்திய தரைக்கடலுக்கும் ஜோர்தான் ஆற்றிற்கும் இடையில் காணப்படும் காஸா, இஸ்ரேல், மேற்குக்கரை என்கின்ற மூன்று பகுதிகளும் ஒரு காலத்தில் பாலஸ்தீன என்கின்ற ஒரே பகுதியாக அறியப்பட்டன. பலஸ்தீன அராபியர்கள் மற்றும் யூதர்கள் இதனைத் தமக்குரிய நிலம் என்கின்றனர்.

---

[1] எஸ்.யாழினி எஸ்.கஜேந்திரன் கே.வனஜா கே.கஜந்தன் ஆர்.கோபிகா ஆகிய மூன்றாம் வருட அரசறிவியல் துறை மாணவர்களால் முன்வைக்கப்பட்ட அளிக்கையின் தொகுப்பு-2017.

[2] ராகவன் பா.(2005), "நிலமெல்லாம் இரத்தம்", கிழக்குப்பதிப்பகம். பக்கம் -265



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு முதலாம் நூற்றாண்டுகளில் இங்கு வாழ்ந்த யூதர்கள் பெரியளவில் புலம் பெயர்ந்து சென்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்தனர். யூத வெறுப்பு அரசியல் ஒன்று எழுந்ததை ஒட்டி 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வாழ்ந்த யூதர்கள் தமது பூர்வீக நிலமான பாலஸ்தீனத்திற்கு புலம் பெயர்வதென முடிவு செய்தனர். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அங்கு வந்து பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்த பலஸ்தீனர் மத்தியில் குடியேறத் தொடங்கினர். புனித பைபிளைச் சான்று காட்டி இறைவனால் தங்களுக்கு "வாக்களிக்கப் பட்ட நிலம்" இது என உரிமை கோரினார்.

1882 இல் பாலஸ்தீனத்திற்குள் இப்படி முதல் யூதக் குடியரசு உருவானது. 1884 இல் இதை நியாயப்படுத்தும் நோக்கில் சியோனிச கோட்பாட்டையும் உருவாக்கினர். இதற்கு முன் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள் 4 சதவீதத்தினர் மட்டுமே. இரண்டாம் உலகப்போர் ஹிட்லரின் யூதப் படுகொலைகள் ஆகியவற்றை ஒட்டி பெரியளவில் அகதிகளான யூதர்களை சியோனிஸ்ட்டுக்கள் பாலஸ்தீனத்திற்குள் வற்புறுத்தி அனுப்பி வைத்தனர்.

1947 இல் ஐ.நா. அவை இதில் தலையிட முடிவு செய்தது. அப்போது அங்கு குடியிருப்பை அமைத்திருந்த யூதர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 30 சதவீதம் அவர்களின் வசமிருந்த நிலம் 7 சதவீதம் மட்டுமே. எனினும் பிரிட்டனில் கட்டுப்பாட்டிலிருந்த பாலஸ்தீனின் 55 சதவீதமான பகுதியில் யூதர்களுக்கென "இஸ்ரேல்" எனும் நாட்டை உருவாக்க ஐ.நா. பரிந்துரைத்தது. மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட யூதர்கள் பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாட்டுக்காலம் முடியும் போது சுதந்திர இஸ்ரேலைப் பிரகடனம் செய்தனர். பாலஸ்தீனர்கள் அதனை எதிர்த்தனர்.

## பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தோற்றமும் பின்னணியும்

"பாலஸ்தீன அரசை அமைக்க முயலும் மக்கள் அனைவரையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அவர்களுடைய பிரதிநிதியாக விளங்கும் அரசியலமைப்புப் பல்வேறு குழுக்களின் தலைமையை மையப்படுத்துவதற்காக பாலஸ்தீன விடுதலை அமைப்பு என்பது 1964 யூன் 02 தோற்றுவிக்கப்பட்டது"[3] பாலஸ்தீன தேசிய கவுன்ஸில் என்கின்ற

[3] ராகவன் பா(2005), "நிலமெல்லாம் இரத்தம்", கிழக்குப்பதிப்பகம், பக்கம் 271



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பின் அரசியல் பிரிவு தான் (பி.எல்.ஓ) என்கின்ற பலஸ்தீன விடுதலை இயக்கம். இதன் பின்னணியில் எகிப்தின் நாசர் இருந்தார். அவர் அரபு மக்கள் எல்லோரையும் இணைத்து ஐக்கிய அரபு எனும் ஒரே நாடாக வேண்டுமென்பதே அவரது விருப்பமாக இருந்தது. இதனால் சிரியாவுடன் இணைந்து ஐக்கிய அரபு குடியரசு எனும் அமைப்பை உருவாக்கினார். இருப்பினும் எகிப்தின் ஆதிக்கம் இதில் அநேகமாக இருந்தபடியால் இதனை விரும்பாத சிரியா அதிலிருந்து மூன்று வருடங்களில் விலகிக் இருந்தது.

1964 அளவில் அரபு மகாநாடொன்றை நாசர் நடத்தினார். இந்த மகாநாட்டில் உருவான அமைப்பே (பி.எல்.ஓ)ஆகும். இவர்களே பலஸ்தீன மக்களின் பிரச்சனைகளில் தீவிரமாகச் செயல்பட வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டது. பாலஸ்தீன அரபு மக்களின் சுதந்திர நாடாக வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். (பி.எல்.ஓ) தான் "பாலஸ்தீன மக்கள் அனைவருக்குமான பிரதிநிதி" என்று அராபிய மக்கள் இதனை ஆதரித்தனர். (பி.எல்.ஓ) பாலஸ்தீனத்திற்கு வெளியே பல நாடுகளில் தஞ்சம் புகுந்து வசித்து வந்த பாலஸ்தீனியர்களால் உருவாக்கப்பட்து. அவர்களால் பாலஸ்தீனத்துக்குள் நுழைந்து போராட முடியாத காரணத்தால் (பி.எல்.ஓ) வை தோற்றுவித்தார்கள். வாய் வார்த்தைக்கு அரசியல் பிரிவு என்று சொல்லப்பட்டாலும் (பி.எல்.ஓ) முழுக்க முழுக்க ஒரு இராணுவ அமைப்பு தான் பிற்பட்ட காலத்தில் தனியானதொரு அரசியல் பிரிவும் உருவானது இன்னொரு சிறப்பாகும்.

1964. மே இல் ஜெருசலேமில் நடைபெற்ற பாலஸ்தீன தேசிய கவுன்ஸிலின் கூட்டத்தில் (பி.எல்.ஓ) அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட தோடு அகமது அல்சக்ரி என்பவர் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட் டார். இவர் லெபனானைச் சார்ந்தவர். இவரது தந்தை பாலஸ்தீனியர் தாய் - துருக்கியர் ஜெருசலேமில் சட்டம் படித்துவிட்டு 1949-51 வரை ஐ.நாவிற்கான சிரியாவின் பிரதிநிதியாக பணியாற்றினார். பின்னர் அரபுலீகின் துணைச் செயலாளராகவும் அரபு நாடுகள் தமக்காக அல்சக்ரி பணியாற்றமாட்டாரா என ஏங்கும் அளவிற்கும் அரேபிய தேசங்களின் மதிப்பிற்குரிய அரசியல் வல்லுனராகவும் விளங்கினார். சக்ரி பதவியேற்ற பிறபாடு (பி.எல்.ஓ) இற்கான 300 பேர் கொண்ட முதல் நிலை ஆட்சிக் குழு ஒன்று அமைத்தது. பின்னர் 15 பேர் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Municipal Council
Batticaloa.

செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஒரு இராணுவப் பிரிவினையும் (பி.எல்.ஓ) ஏற்படுத்திக் கொண்டது.

பல்வேறு அரசியல் சித்தாந்தங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் இணைந்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை தோற்றுவித்தார்கள். அதே போல பல்வேறு போராளிகள் குழுக்களை ஒருங்கிணைத்தே பி.எல்.ஏ. என்கின்ற *Palestine Liberation Army* தோற்றுவிக்கப்பட்டது. அந்தக்குழுக்களின் "தனிப்பட்ட நோக்கமும் செயல்பாடுகளும் என்ன மாதிரியாக இருந்தாலும் அரபு தேசியம் என்ற கருத்தாக்கங்களிலும் பாலஸ்தீனத்தை ரேலிடமிருந்து விடுவிப்பது என்கின்ற நோக்கத்திலும் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது மட்டும் தான் ஒரே நிபந்தனையாக இருந்தது."[4]

பி.எல்.ஓ.வின் தோற்றமும் ஆரம்ப வேகமும் பெரும்பாலான பாலஸ்தீனியர்களுக்கு மிகுந்த நம்பிக்கையளிப்பதாக இருந்தது. எடுத்த உடனையே துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு அவர்கள் ஒடவில்லை. மாறாக இஸ்ரேலுக்கு வெளியே அகதிகளாக வாழும் பாலஸ்தீனிய மக்கள் அத்தனை பேரையும் நேரில் சந்தித்துப் பேசினார்கள். இழந்த பாலஸ்தீனைப் போராடித்தான் பெறவேண்டுமென்பதையும் போரட்டத்திற்கு மக்கள் எந்தெந்த வகையில் பங்களிக்கலாம் என்பதையும் விளக்கிச் சொன்னார்கள். இதன் படி பி.எல்.ஓ. ஆனது 1969 இல் யசீர் அரபாத்தின் தலைமையின் கீழ் கொண்டு வரப்பட்டது. பி.எல்.ஓ விற்கு கொரில்லா போர் முறை பற்றிய அனுபவம் ஆரம்பத்தில் இல்லாது இருந்தது. அரபாத் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னரே சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. பி.எல்.ஓ அமைப்பினர் 1971 இல் ஜோர்டானிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதன் தலைமையகம் லெபனபனுக்கு மாற்றப்பட்டது.

இந்த பி.ஏல்.ஓ இன் ஒரு பிரிவாக யசீர் அரபாத்தைத் தலைமையாக கொண்ட "அல்பதா" உருவாகியது. பிஏல்.ஓ இன் தலைவராக அரபாத் செயற்பட்ட போதும் அல்பதாவின் தனித்தன்மை கெடாது அதன் தலைமைப் பொறுப்பையும் சிறப்பாக முன்னெடுத்து வந்தார். அதாவது

[4] ராகவன் பாஇ(2005), "நிலமெல்லாம் இரத்தம்", கிழக்குப்பதிப்பகம். பக்:273

Class No: 300.9933
Acc No 544



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Municipal Council
Batticaloa.

ஆயுதப் போராட்டம் மூலம் பாலஸ்தீன விடுதலையை பெற வேண்டுமென்பதே இதனுடைய நோக்கமாக அமைந்தது.

இவ்வாறாகச் செயற்பட்ட பி.எல்.ஓ அமைப்பில் அல்பதா, அல்சைகா, பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி, பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் சனநாயக முன்னணி, பாலஸ்தீன மக்கள் விடுதலைப்படை, பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி, பாலஸ்தீன விடுதலைக்கான செயற்பாட்டு இயக்கம் ஆகிய இயக்கங்கள் சேர்ந்துள்ளன.

ஆரம்பத்தில் பி.எல்.ஓ அமைப்பானது பிரதான குறிக்கோளாக ஆயுதப் போராட்டம் ஒன்றில் மூலம் இஸ்ரேல் நாட்டை இல்லாதொழித்து அதற்கு எதிராகப் பாலஸ்தீன நாட்டை ஜோர்தான் ஆற்றிற்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடையில் உருவாக்குவதாக இருந்தது. ஆனால் அடிப்படையில் இப்போராட்ட அமைப்பின் எழுகை பாலஸ்தீன அரபுக்களை தமது சொந்த நிலப்பரப்பின் மீது உரிமையையும் சுய நிர்ணயம் கோரும் எண்ணமும் கொண்டதாகவும் வன்முறையற்ற சமாதான வழிமுறை மூலமாக அதனைப் பெறுவதாகவும் அமைந்தது. பி.எல்.ஓ அமைப்பானது பாலஸ்தீன தேசிய அதிகாரக் குழுவின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாயிற்று.

## பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கட்டமைப்பும் அதன் துறைகளும்

"துயரம் நிறைந்த பாலஸ்தீனத்தில் யூத வெறியர்களின் ஆபத்துக்களை அகற்றுவதற்கும் பாலஸ்தீன மக்கள் தங்கள் தாயகத்தை விடுதலை செய்து தங்களுடைய எதிர்காலத்தை தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் பொருட்டும் ஒரு அமைப்பை உருவாக்குவதற்காக 1964 ஜனவரி 09ம் திகதி எகிப்தில் அலெக்சாண்ட்ரா மாநிலத்தை எகிப்திய தலைவர் நாசரின் தலைமையில் ஓர் கூட்டம் கூட்டப்பட்டது. அதன் அடிப்படையில் 1964 மே மாதம் நடந்த பாலஸ்தீன தேசிய காங்கிரஸ் கூட்டத்தின் 04 நாள் விவாத்தின் பின்பு "பலஸ்தீன விடுதலை அமைப்பு உருவாக்கப்பட்டது."[5]

இந்த மாநாடு நிறைவேற்றிய அடிப்படைச் சட்டம் பாலஸ்தீன மக்களுக்க பி.எல்.ஓ ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றும்

[5] ஜவஹர்லால் நேரு, "உலக சரித்திரம்" அலைகள் வெளியீட்டகம் பக்கம் - 112

Class No:
Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு தேசிய அமைப்புகளை உருவாக்கியது. இந்த அமைப்புக்கள் ஒரு அரசாங்கத்தைப் போன்றே பாலஸ்தீன மக்கள் எதிர் நோக்கியுள்ள சமூக அரசியல் பிரச்சினைகளைக் கவனிக்க கூடியதாயிருக்கும் வகையில் அமைக்கப்பட்டன.

1. பாலஸ்தீன தேசிய கவுன்சில் (நாடாளுமன்றம்)

2. நிர்வாகக் குழு

3. பாலஸ்தீன விடுதலைப்படை

நிர்வாகக் குழு எடுக்கும் முடிவுகளையும் உருவாக்கும் திட்டங்களையும் பி.எல்.ஓ. அமைப்பு ஒரு அரசாங்கத்தைப் போன்று நிறைவேற்றும் பொருட்டு பின்வரும் துறைகள் உருவாக்கப்பட்டன.

1. அரசியல் துறை

2. வெகுஜன அமைப்புக்கள் துறை

3. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சமூக வடிவங்களுக்கான துறைகள்

4. தகவல் மற்றும் கலாசார துறை

பி.எல்.ஓ. வின் அரசியல் சட்டப்படி கவுன்சில் என்பது அதனுடைய சட்டமியற்றும் அமைப்பாகும். அது தான் பி.எல்.ஓ வின் கொள்கைகளையும் திட்டங்களையும் தீர்மானிப்பதோடு அதன் நிர்வாகக் குழுவையும் தேர்ந்தெடுக்கும். இந்த கவுன்சிலானது ஒரு தலைவரையும் இரண்டு உதவி தலைவர்களையும் ஒரு செயலாளரையும் நேரடியாக தேர்ந்தெடுக்கும். இது இரண்டு வருடத்துக்கு ஒரு முறை கூடும்.

சாதாரண தேசியக்கவுன்சில் கூட்டமானது அரசியல் நிலைமை குறித்துப் பி.எல்.ஓவின் சாதனைகள் குறிக்கும். அதன் அமைப்புக்கள் குறித்துப் பாலஸ்தீன தேசிய நிதி குறித்தும் நிர்வாக குழு அளிக்கும் அறிக்கைகளை ஆராயும். அதே போல பல்வேறு குழுக்கள் அளிக்கும் பரிந்துரையையும் தனது பரிசிலனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் ஆராயும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கவுன்சில்

தேசிய கவுன்சிலானது 1973ம் ஆண்டு ஜனவரி நடைபெற்ற தனது கூட்டத்தின் போது தனது உறுப்பினர்களிலிருந்து ஒரு மத்திய கவுன்சிலை உருவாக்கியது. தான் எடுக்கும் முடிவுகளை தொடர்ந்து பின்பற்றி அமுலாக்குவதற்காக இந்த மத்திய கவுன்சிலை தேசியக்கவுன்சில் உருவாக்கியது. இது 75 உறுப்பினர்களைக் கொண்டதாகும். இது நிர்வாகக் குழு எழுப்பும் பிரச்சினைகள், கேள்விகள், குறித்த தேவையான முடிவுகள் எடுக்கும். பி.எல்.ஓ வின் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஆராயும் சட்டமியற்றும் அதிகாரமும் சில நிர்வாகப் பணிகளும் அதற்குண்டு. அது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி பாலஸ்தீன தேசிய தீர்மானங்களை எந்தளவு அமுலாக்கப்பட்டுள்ளன என்பதை பரீசிலிப்பதோடு அரசியல் நிலைமை மற்றும் பாலஸ்தீன பிரச்சினை மீதான போக்குகள் குறித்து விவாதிக்கும். பாலஸ்தீன தேசியக் கவுன்சிலின் தலைவர் இதன் கூட்டங்களுக்குள் தலைமை வகிப்பார். 75 உறுப்பினர் கொண்ட இந்த அமைப்பின் பிரதிநிதித்துவம் பின்வருமாறு இருக்கும்.

| | |
|---|---|
| பி.எல்.ஓ நிர்வாகக் குழுவிற்கு | - 15 உறுப்பினர்கள் |
| பாலஸ்தீன தேசிய கவுன்சில் அலுவலகம் | - 04 உறுப்பினர்கள் |
| சுயேச்சைக் குழுக்கள் | - 25 உறுப்பினர்கள் |
| நிரந்தர குழுக்களின் தலைவர்கள் | - 04 உறுப்பிளர்கள் |
| போராளிகள் குழுக்களின் பிரதிநிதிகள் | - 14 உறுப்பினர்கள் |
| தொழிற் சங்கப் பிரதிநிதிகள் | - 12 உறுப்பினர்கள் |

## நிர்வாகக் குழு

தேசிய கவுன்சில் தனது உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் நிர்வாகக் குழு என்ற இந்த அமைப்பானது அமைச்சரவை போல் செயல்படும் மிக உயர்ந்த நிர்வாக அமைப்பாகும். இந்தக் குழு தனது தலைவரை தேர்ந்தெடுக்கும் இதன் உறுப்பினர் எண்ணிக்கை அதிகபட்சம் 15 ஆகும். அதன் ஒவ்வொரு உறுப்பினரும் பி.எல்.ஓவின் ஒவ்வொரு துறைக்கும் தலைவர்கள் என்பதுடன் நிர்வாகக் குழு உருவாக்கும் திட்டங்களையும் நடவடிக்கை காரியங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுலாக்கும். இந்த குழுவின் பணிகளாவன, பாலஸ்தீன மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவது, பி.எல்.ஓவின் பல்வேறு அங்கங்களையும் அமைப்புக்களையும் மேற்பார்வையிடுதல், கட்டளைகள், பிறப்பித்தல் நடவடிக்கை திட்டங்கள் உருவாக்குவது, பி.எல்.ஓவின் தாபனம் மற்றும் செயல்பாடுகள் குறித்து முடிவுகளை எடுத்தல் (ஆனால் இது தேசிய சாசனத்திற்கு முரண்படக் கூடாது) பி.எல்.ஓவின் நிதியாதாரக் கொள்கையை நிறைவேற்றுதல் ஆகியவையாகும். இந்தக் குழுவானது தனியாகவும் கூட்டாகவும் தேசிய கவுன்சிலுக்கு பொறுப்பான தாயிருக்கும்.

## தேசிய நிதி

அடிப்படைச் சட்ட விதிகளின் படி இந்த நிதி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது இயக்குனர் குழு ஒன்றினால் நிர்வாகிக்கப்படும் இதன் வருமானம் பின்வரும் வழிகளில் கிடைக்கின்றது.

* பல்வேறு அரபு நாடுகளில் பணியாற்றி வரும் பாலஸ்தீன மக்கள் மீது விதிக்கப்படும் நிரந்தரமான வரி (இது வருமானத்தில் முதல் 10 சதவீதமாகும்)
* அரபு மக்களுக்கும் அதன் அரசாங்கங்களுக்கும் அளிக்கும் பண உதவி
* அரபு நாடுகளிடமிருந்தோ அல்லது நட்பு நாடுகளிடமிருந்தோ பெறப்படும் கடன்களும் நிதி உதவிகளும்
* அரபு நாடுகளின் தபால் முத்திரை மூலம் கிடைக்கும் வருமானம்.
* பாலஸ்தீன தேசிய கவுன்சில் அங்கீகாரம் மூலம் பெறப்படும் கூடுதல் நிதி ஆதாரங்கள்
* பி.எல்.ஓ அமைப்பு பல நேரங்களில் சிக்கலான பொருளாதார நிலைமையை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

பாலஸ்தீன மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அது மிக விரிந்தளவிலான பொறுப்பகளை ஏற்க வேண்டியுள்ளது. பி.எல்.ஓ அமைப்பிற்கு தாங்கள் அளிக்க வேண்டிய மானியங்களை பி.எல்.ஓ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பதில் தவறி விடுவதாலும் சில அரபு நாடுகளில் பி.எல்.ஓ அமைப்பிற்காக அங்கு வேலை செய்யும் பாலஸ்தீன மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தை சில சமயங்களில் அந்த அரசாங்கங்கள் பறிமுதல் செய்து விடுவதாலும் சிக்கலான நிலைமை ஏற்படுகின்றது. இத்தகைய நிலைமை ஏற்படுவது தான் இந்த நாடுகளுடனான உறவுகளில் சிரமத்தை ஏற்படுத்துகின்றது. இந்த நாடுகள் பி.எல்.ஓ வை நிர்ப்பந்திப்பதற்கு இதை ஒரு காரணமாகப் பயன்படுத்துகின்றார்.

## பாலஸ்தீன விடுதலைப்படை

பாலஸ்தீன அடிப்படைச் சட்டத்தின் 23வது ஷசரத்தின் கீழ் பாலஸ்தீன விடுதலைப்படை உருவாக்கப்பட்டுள்ளது. இது பி.எல்.ஓ. நிர்வாகக் குழுவின் மேற்பார்வையில் இயங்கும்"[6] இதன் பணி பி.எல்.ஓ வின் திட்டவட்டமான மற்றும் பொதுவான கட்டளைகளையும் தீர்மானங்களையும் அமுலாக்குவது என்பதாகும். அதனுடைய தேசியக் கடமையானது பாலஸ்தீன விடுதலைக்கான போரில் முன்னணிப் படையாக விளங்குவது என்பதாகும். விடுதலைப்படையின் ஊழியர்களுக்கு பல்வேறு ராணுவ பயிற்சி நிலையங்களிலும் ஸ்தாபனங்களிலும் நவீன ஆயுதங்களைக் கையாள்வதும் ராணுவப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

பாலஸ்தீன விடுதலைப் படையானது 1967 ஜீன் மாதத்தில் நடைபெற்ற இஸ்ரேல்- எகிப்து யுத்தத்தின் பொழுது எகிப்துக்கு ஆதரவாகவும் 1973 அக்டோபரில் நடைபெற்ற யுத்தத்தின் பொழுது சிரியாவுக்கு ஆதரவாகவும் போரில் குதித்தன. லெபனானிலும், ஜோர்டானிலும் இஸ்ரேல் நடத்திய ராணுவ தாக்குதல்களையும் ஊடுருவல்களையும் பாலஸ்தீன விடுதலைப்படை போரிட்டது. 1982 இல் பெய்ரூட் முற்றுகையிடப்பட்ட போதும் 1983 இல் திரிபோலியில் நடைபெற்ற யுத்தத்தின் பொழுதும் பி.எல்.ஓ வின் சட்டபூர்வ தலைமையை ஆதரித்து விடுதலைப்படை போரிட்டது. பாலஸ்தீன மக்களுக்காக இந்த விடுதலைப்படை வீரஞ்செறிந்த முறையில்

---

[6] ஜவஹர்லால் நேரு. "உலக சரித்திரம்" அலைகள் வெளியீட்டகம் பக்கம் - 112



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுவதை அங்கீகரிக்கும் பொருட்டே பாலஸ்தீன தேசியகவுன்சிலில் அதற்கு 44 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## பி.எல்.ஓ வின் இதர துறைகள்

ஒரு அரசாங்கம் என்ற முறையில் பி.எல்.ஓ தனது நிர்வாகக் குழுவின் முடிவுகளையும் திட்டங்களையும் அமுலாக்குவதற்காகவும் பாலஸ்தீன மக்களின் தேவைகளை கவனிக்கும் பொருட்டு பல்வேறு துறைகளை உருவாக்கியுள்ளது. அவைகளில் பிரதானமானவை

* அரசியல் துறை
* பொருளாதார மற்றும் சமூக உறவுத் துறை
* தகவல் கலாசாரத்துறை

போன்றவையாகும்.

## அரசியல் துறை

அரசியல் துறையானது மிக முக்கியமான துறையாகும். பாலஸ்தீன மக்கள் தங்கள் தேசிய உரிமைகள் பெறுவதற்காக சுதந்திர பாலஸ்தீன நாட்டை அடைவதற்காக நடத்தும் போராட்டத்தைப் பாதுகாத்து வளரச் செய்யும் பிரதான கடமையை இந்த அரசியல் துறை கொண்டுள்ளது. இந்த கடமை மிகவும் சிரமமானதாகையால் அரசியல் துறை பெரும் கடமையாற்ற வேண்டியுள்ளது. பாலஸ்தீன மக்களின் ஒரே சட்டபூர்வ பிரதிநிதி பி.எல்.ஓ தான் என்ற முறையில் உலக நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக இது பெரும் பணியாற்றி வருகிறது. "ஒரு புரட்சிகர உணர்வுடன் இடைவிடாத ராஜதந்திர முயற்சி காரணமாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 125 நாடுகள் பி.எல்.ஓ. வை அங்கீகரித்துள்ளன. இதனுடைய இடைவிடாத முயற்சி காரணமாகவே 1984 ஆம் ஆண்டில் ஐ.நா. சபை பாலஸ்தீன மக்களின் தேசிய உரிமைகளை அங்கீகரிக்க முடிவெடுத்ததோடு, பாலஸ்தீன மக்களின் சட்ட பூர்வ பிரதிநிதியாக ஐ.நா. சபையில் பி.எல்.ஓவிற்கு பார்வையாளர் அந்தஸ்து அளிக்க முடிவு செய்தது." ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பு (O.A.U) கூட்டுச்சேரநாடுகள் இயக்கம் (N.A.M) இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு போன்றவை பி.எல்.ஓ ஏற்கனவே அங்கீகரித்து விட்டன. 1976 ஆம் ஆண்டில் கூட்டுச்சேரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் இயக்கத்திலும் அரபு லீக்கிலும் இஸ்லாமிய மாநாட்டு அமைப்பிலும் பி.எல்.ஓ முழு உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டது.

சர்வதேச மாநாடுகளில் பங்கெடுப்பது இதர நாடுகளுடன் பி.எல்.ஓ விற்கு உள்ள உறவுகளைப் பலப்படுத்துவது, தூதர்களையும், பிரதிநிதிகளையும் நியமிப்பது அன்னிய நாடுகளில் தூதரங்களையும் பி.எல்.ஓ அலுவலங்களையும் நிர்வகிப்பது போன்றவற்றையும் அரசியல் துறையே கவனிக்கிறது. உலகின் பல்வேறு நாடுகளில் 92 தூதரங்களும் அலுவலங்களுமாக செயல்பட்டு வருகின்றன. பல இடங்களில் இவை தூதரங்களாகவும் சில இடங்களில் இவை நிரந்தர பிரதிநிதி மற்றும் பொது அலுவலங்களாகச் செயல்படுகின்றன. நீயூயோர்க், மற்றும் ஜெனிவாவில் ஐ.நா. வினால் அங்கீகரிக்கப்பட்ட இரு அலுவலங்கள் செயல்பட்டு வருகின்றன. மூன்றாவது அலுவலகம் பாரீசில் யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் துறையில் டிரக்டர் ஜெனரல், டிரக்டர்கள் ராஜதந்திரிகள் நிர்வாகத்தினர் என்று ஏராளமானோர் செயல்பட்டு வருகின்றனர்.

வெகுஜன அமைப்புகள் துறையானது மாணவர்கள் தொழிலாளிகள் மற்றும் பெண்களின் சங்கங்களை நடத்தி அவைகளை பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் இணைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். சுரண்டல் பொருளாதார மற்றும் நிதியாதார பாரபட்சம் ஆகியவைகளுக்கு ஆட்பட்டுள்ள உழைக்கும் மக்களின் பொருளாதார சமூக நலன்களை பி.எல்.ஓ.வின் பொருளாதார வரையறைக்குள் பாதுகாத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். இந்தத் தொழிலாளிகளின் அறிவுத்திறன் மற்றும் தொழில் திறனை மேம்படுத்துவதையும் இந்த துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் துறையோடு இணைக்கப்பட்டுள்ள பாலஸ்தீன தொழிற்சங்கங்களின் ஏராளமான உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளிகள், பெண்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள், மருத்துவ ஊழியர்கள், விவசாயிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், வாலிபர்கள், ஓவியர்கள், ஆகிய பகுதியினர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் செலுத்தும் கட்டணம் மூலமும், நிதி உதவி மூலமும், பாலஸ்தீன தேசிய கவுன்சில் முடிவுப்படி பாலஸ்தீன தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியிலிருந்து கொடுக்கப்படும் ஒரு குறிப்பிட்டளவு நிதி உதவியைக் கொண்டும் இந்த சங்கங்களின் வரவு செலவு திட்டங்கள் சரிக்கட்டப்படுகின்றன. வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு பாலஸ்தின நாடாளுமன்றத்தில் 26 சதவீதம் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## கல்வித்துறை

1948 ஆம் ஆண்டு யுத்தத்திற்குப் பிறகு பல்வேறு அரபு நாடுகளுக்கு அடைக்கலம் தேடி ஓட வேண்டியிருந்த பாலஸ்தீன மக்களுக்கு அவர்களுடைய கலாசார சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் பெரும் இழப்பு ஏற்பட்டது. ஏராளமானோர் கொல்லப்பட்டனர். அளவிட முடியாத அளவுக்கு உடமைகள் நாசமாக்கப்பட்டன.

1968 இல் பி.எல்.ஓ. சீரமைக்கப்பட்டதிலிருந்து வெளிநாடுகளிலும், அகதி முகாம்களிலும் தங்கியுள்ள பாலஸ்தீன மக்களின் வேதனைகள் ஆற்றி அவர்களுக்கென்று தரமிக்க ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்து வதற்காக கல்வித்துறையும் இதர துறைகளும் செயல்படுகின்றன.

கல்வித் துறையானது பாலஸ்தீனியர்களுக்கென்று கல்வித் திட்டங்களை உருவாக்கும் கடமையை ஏற்றுள்ளது. பாலஸ்தீன சிறுவர்களுக்கென்று அகதிகள் முகாம்களிலும் பாலஸ்தினீயர்கள் கூட்டமாக வாழும் இடங்களிலும் அது பள்ளிக் கூடங்களை நடத்தி வருகின்றது. பாலஸ்தீனியர்களுக்கென (பி.எல்.ஓ.) தொழில் பயிற்சி மையங்களை நடத்தி வருகின்றது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள மேற்குக்கரையிலும் காஸா பகுதியிலும் பல்கலைக் கழகங்களை உருவாக்கும் படி பாலஸ்தீனர்களுக்கு ஊக்கமூட்டியது. இதன் விளைவாக இன்று இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியுள்ள ஹெப்ரான், நப்ளஸ், காஸா, பெத்லஹேம், அபுதீஸ், ஆகிய இடங்களி லும், ஜெருசலேம் அருகிலும், ஆக ஆறு இடங்களில் பல்கலைக் கழகங்கள் உள்ளன.

பாலஸ்தீனியர்களின் உயர்கல்வியை கவனிக்கும் பொருட்டும் அதை மேம்படுத்தல் பொருட்டும் நிர்வாகக் குழு உறுப்பினர் ஒருவர் தலைமையில் உயர் கல்விக்கான ஒரு சிண்டிகேட் ஏற்படுத்தப்பட் டுள்ளது. அன்னிய பல்கலைக்கழகங்கள் பாலஸ்தீனியர்கள் இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வி பெறும் பொருட்டும் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக் கானோருக்கும் சலுகை நிதி வழங்கப்படுகின்றன.

## சுகாதாரத்துறை

சுகாதாரத்துறையானது பாலஸ்தீன மக்களுக்கு மருத்துவ சேவைகள் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 1969 ஆம் ஆண்டில் பலஸ்தீன செம்பிறைக் கழகம் *(Palestine Red Cross Society)* உருவாக்கப்பட்டது. அகதிகள் முகாமிலும் வெளியிடங்களிலும் குடியேறியுள்ள பாலஸ்தீன மக்களுக்கு இது மருத்துவ வசதிகள் அளித்து வருகின்றது. நிரந்தரமான மருத்துவமனைகள் அதைப்போன்றே நகரும் மருத்துவமனைகள், மருந்தகங்கள், புனர்வாழ்வு மையங்களை நடத்தி வருகிறது. இந்த செம்பிறைச் சங்கமானது பல அரபு நாடுகளில் தனது கிளைகளைக் கொண்டுள்ளதோடு அனைத்து உபகரணங்களும் நிரம்பிய மருத்துவ மனைகளை நடத்தி வருகின்றன. அது கூட்டு சேவைத் திட்டத்தின் அடிப்படையில் ஆபிரிக்க நாடுகளுக்கு மருத்துவ குழுக் களை அனுப்பி வருகின்றது. உலக சுகாதார அமைப்பிலும் (WHO) இதர சர்வதேச மற்றும் பிராந்திய மாநாடுகளிலும் அது பி.எல்.ஓ.வை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## பொருளாதாரத்துறை

பொருளாதாரத்துறையானது பாலஸ்தீன மக்களின் அதிகரித்துவரும் தேவைகளைச் சமாளிக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றது. "பாலஸ்தீன போராட்டங்களில் உயிரிழந்த தியாகிகளின் குடும்பங்களைக் கவனிப்பதற்கென்று சாமெட்(SAMED) என்ற அமைப்பு நிறுவப்பட்டிருந்தது."[7] அது படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று பி.எல்.ஓ.வின் பொருளாதார தளமாக விளங்குகிறது. பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பாக விளங்கிவரும் சாமெட், இன்று ரெடிமட், துணிகள், ஐவுளித் துணிகள், கம்பளிகள், மேசைவிரிப்புகள், நாற்காலிகள், கட்டுமான சாதனங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், உணவு, பொருட்கள் தயாரிக்கும் தொழில்களை நடத்தி வருகிறது. அது ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலுமாக 30க்கும் மேற்பட்ட நாடுகளில் அதன் பொருட் தயாரிப்பையும் விரிவுபடுத்தியுள்ளது. பல

[7] ஜவஹர்லால் நேரு. "உலக சரித்திரம்" அலைகள் வெளியீட்டகம் பக்:117



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் வர்த்தக திட்டங்களில் முதலீடு செய்துள்ளது. சாமெட், 14க்கும் மேற்பட்ட ஆபிரிக்கா, அரபு நாடுகளில் 26 கிளைகளையும் விற்பனை நிலையங்களையும் திறந்துள்ளது.

அத்துடன் இந்த சாமெட் அமைப்பானது பல அரபு ஆபிரிக்க நாடுகளில் விவசாயத் திட்ட அமைப்புகளையும் முன் மாதிரிப் பண்ணைகளையும் உருவாக்கியுள்ளது. இந்த நாடுகளில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் பண்ணைகளை ஏற்படுத்தி உள்ளது. இந்த அமைப்பு திரைப்பட தயாரிப்பையும் செய்து வருகின்றது. பாலஸ்தீனம் குறித்து பல குறும்படங்களை வெளியிட்டு வருகின்றன.

## தகவல் மற்றும் கலாசாரத்துறை

தகவல் மற்றும் கலாசாரத் துறையானது யூத வெறியர்களால் நாசப்படுத்தப்பட்டு வரும் பாலஸ்தீன கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் கடமையையும் செய்து வருகின்றது. பாலஸ்தீனர்களின் தொன்மைக்கால நாகரீகத்தையும் அதன் வரலாற்று புகழ்மிக்க இடங்களையும் நாசம் செய்வதை நோக்கமாகக் கொண்டு இஸ்ரேல் செயல்பட்டு வரும் நேரத்தில் அதை எதிர்த்து அந்தக் கலாசார மாண்புகளைப் பாதுகாக்கும் பணியை இத்துறை செய்கின்றது. பாலஸ்தீனிய கிராமியப் பாடல்கள் கதைகள், பாரம்பரிய உடை அமைப்பு, உணவு வகைகள், ஆகியவற்றை யூதர்கள் தங்களுடையது என்று திட்டமிட்டு திசை திருப்பும் பிரச்சாரம் செய்து வருவதை அம்பலப்படுத்தி தங்களுடைய கலாசாரத்தைப் பாதுகாக்கும் பணியை இந்த அமைப்பு செய்யவேண்டியுள்ளது.

பாலஸ்தீன தேசிய கலாசார தனித்தன்மைக்கு வலிமையூட்டி அதை மேம்படுத்தவும் பாலஸ்தீன மக்கள் தங்கள் ஆழமான கலாசாரத்தையும் அதன் மரபுகளையும் தொடர்ந்து பின்பற்றச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பு செயல்படுகின்றது. தனி நபர்களின் அறிவார்ந்த திறமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும், பாலஸ்தீனியர்களின் கலாசாரத்தைப் பாதுகாத்து பலப்படுத்தவும் பல அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அவையாவன கலை மற்றும் தேசிய கலாசாரத்திற்கான கழகம், பாலஸ்தீன சினிமா கழகம், கிராமியப் பாடல், மற்றும் நடனக்குழு ஓவியம், மற்றும் சிலை வடிப்பு கல்விக்கழகம் அரங்கம் மற்றும் ஜனரஞ்சக கலைகளுக்கான அமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காட்சிப் பிரிவு மற்றும் ஆய்வுமையம், ஒரு தகவல் நிலையம் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தான் பி.எல்.ஓ வின் தகவல் அறிவிப்பு கொள்கைகளை உருவாக்குகிறது. யாசீர் அராபத் இதன் தலைவராவார். இந்த அமைப்பின் கீழ் அன்னிய தகவல் பிரிவு செய்தி நிறுவனம் *(WAFA)* வானொலி நிலையங்கள், சினிமா, புகைப்பட பிரிவு போன்றவை இயங்குகின்றன.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் இத்துறையும் பி.எல்.ஓவின் கீழ் உள்ளது. இது இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள பகுதிகளில் உள்ள பாலஸ்தீன மக்கள் குறித்த கடமைகளை பி.எல்.ஓவின் அனைத்துப் பிரிவுகளும் நிறைவேற்றும் பொருட்டு ஒருங்கிணைப்பு குழுவாக இது செயல்படுகின்றது.

இவையே பி.எல்.ஓ வினுடைய துறைகளாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக பி.எல்.ஓ வானது பாலஸ்தீனர்களினுடைய விடுதலையைப் பெறுவதற்கான போராட்ட அமைப்பாக இருந்தாலும் அது சமூக நலனினையும் அடிப்படையாகக் கொண்டு தனது செயற்பாடுகளை விஸ்தீரணப்படுத்தியிருக்கின்றது.

## யசீர் அரபாத்தும் பலஸ்தீன விடுதலை இயக்கமும்

1969ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி அரபாத் பி.எல்.ஓவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பிற்பாடு பாலஸ்தீன விடுதலைப் போராட்டமானது புதிய திசையில் நகரத் தொடங்கியது. அரபாத்தின் தலைமைக்குப் பின்னர் பி.எல்.ஓ வின் தாக்குதல்கள் பல்மடங்காகியது. தனியே கொரில்லாத்தாக்குதல்கள் மட்டும் மேற்கொள் ளாமல் கார்குண்டு தாக்குதல்கள், சுரங்கவழி தாக்குதல்கள், நூதன முறையிலான தாக்குதல்கள் போன்றனவும் மேற்கொள்ளப்பட்டது.

யசீர் அரபாத் மிகச்சிறந்த திட்டமிடலாளர் ஆவார். போர்க்களத்தில் உடனுக்குடன் திட்டங்களை வகுக்கும் திறன் உடையவர். அதுமட்டுமன்றி போராளிகளுடன் நின்று போர் புரியும் தலைவனாகவும் காணப்படுகின்றார். இவரது சிறந்த திட்டமிடல், வழிகாட்டல் செயற்பாடுகள், கொரில்லா தாக்குதல் உத்திகள் போன்றன இஸ்ரேலிய இராணுவத்தை கிலிகொள்ளச் செய்தது எனலாம். இதைவிட "இஸ்ரேல் என்ற சிறிய தேசத்தை வேரோடு ஒழித்துவிட்டு அகன்ற பாலஸ்தீனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஸ்தாபிக்க நாங்கள் திட்டம் தீட்டுகின்றோம். இதில் எந்த ஒழிவுமறைவுமில்லை. ஆயுதங்கள் மூலம் அச்சமூட்டுவது தவிர்க்க முடியாதது, இனமோதல் மூலம் கலவரம் ஊட்டுவோம். யூதர்களை தூங்கவிட மாட்டோம், ஜெருசலேம் உட்பட இஸ்ரேல் எம்மிடமிருந்து அபகரித்து கொண்ட அனைத்தையும் மீண்டும் பெறாமல் ஓயமாட்டோம்."[8] போன்ற அரபாத்தின் பிரகடனம் பலஸ்தீனர்களது உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்தது. இதன் பின்னர் பல போராளிகள் பி.எல்.ஓவில் இணைந்து இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

யசீர் அரபாத் "இன்ரிபதா" என்ற தன்னெழுச்சிப் போராட்டத்தையும் மக்கள் மத்தியில் பரப்பினார். இப் போராட்டத்தின் நோக்கம் இஸ்ரேலிய அரசையும், இராணுவத்தையும் உலுப்புதலாகும். இதன் தொடர்ச்சியானது இன்றுவரை பாலஸ்தீன அரபுக்களிடம் காணப்படுகின்றது. இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீன ஜிகாத் போராளிகள் 7பேரை சுட்டுக் கொலை செய்த பின்னர் பாலஸ்தீன மக்கள் பெரும் கலவரம் ஒன்றை காஸாப்பகுதியில் நிகழ்த்தினார்கள். பேரூந்துகளை எரித்தும் அரசு உடமைகளுக்கு நாசம் விளைவித்தனர். இஸ்ரேலிய அரசு கலவரத்தை அடக்குவதற்காக இராணுவத்தை இறக்கியது. பாலஸ்தீன மக்கள் இராணுவம் மீது ஏற்கனவே ஆத்திரம் கொண்டிருந்தமையால் அவர்கள் மீது கற்களை வீசியும் தம்மிடம் அகப்படும் பொருட்களைக் கொண்டும் இராணுவம் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

யசீர் அரபாத் இஸ்ரேல் - அரபு பிரச்சனையை மதப்பிரச்சனையாக கருதாது அரசியல் பிரச்சனையாக கருதி செயற்பட்டார். பி.எல்.ஓவின் அரசியல் சித்தாந்த விதியிலே சமதர்ம சமூகத்தை கட்டி எழுப்புவதற்கான போராட்டமாகவும் அதற்கான அமைப்பாகவும் கருதி செயற்பட்டார். பிராந்திய மட்டத்திலிருந்த பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்திற்கு கொண்டு சென்றவராக அரபாத் விளங்குகின்றார். இவருடைய ஐ.நா உரையானது உலகிலுள்ள தலைவர்களையும், மக்களையும் பலஸ்தீனம் நோக்கி திரும்ப செய்தது.

---

8 கணேசலிங்கம்.கே.ரீ.(2011) "பலஸ்தீனம் ஒரு சமகால நோக்கு", சேமமடு பதிப்பகம், கொழும்பு பக்கம் - 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் சர்வதேச மயமாக மாறியது.

பி.எல்.ஓ ஆனது மேற்காசியாவுக்கு வெளியிலும் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. ஜோர்டான் பிரதம மந்திரியை கொலை செய்ததுடன் பல விமானங்களையும் கடத்தியது. "1972 ஆம் ஆண்டு அரபாத் ஒரு பேட்டியிலே இஸ்ரேலை ஒழிப்பது தான் எங்களின் இலக்கு" என குறிப்பிட்டார். 1973ல் சிரியாவும், எகிப்தும் இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் மேற்கொண்டது. இதிலே இஸ்ரேல் வெற்றி கொண்டது. இதன்பின் இஸ்ரேலுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் சிரியாவும், எகிப்தும் பி.எல்.ஓவை கலந்தாலோசிக்கவில்லை. இது பி.எல்.ஓ வுக்கு எதிரான சதி என பி.எல்.ஓ எண்ணியது. இதனால் அரபாத் 1974 இல் பாலஸ்தீன தேசிய கவுன்சிலினை கூட்டி பாலஸ்தீன அதிகார மையம் என்ற அமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் அதன் பிறகு அதனூடாக இஸ்ரேலை ஒழிக்க வேண்டும் எனவும் கூறினார். இதன் பின்னணியில் 1974 ஆம் ஆண்டு பி.எல்.ஓவின் ஒரு பகுதியினர் இஸ்ரேலிய "மாலாட்" பகுதியிலுள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றின் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொண்டு 21 குழந்தைகளை கொன்று குவித்தார்கள். இச் செயற்பாடானது பின்பு பி.எல்.ஓ விற்கும், அரபாத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது.

பாலஸ்தீன விடுதலை இயக்கமானது 1983ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து படிப்படியாக வீழ்ச்சி காணத் தொடங்கியது. அரபாத் பி.எல்.ஓவில் யாரையும் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக செயற்படுகின்றார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. ஈரானுக்கும், ஈராக்கிற்கும் இடையில் இடம்பெற்ற போரால் அரபுநாடுகளின் கவனம் அங்கு ஏற்பட்டமையால் பி.எல்.ஓ வை புறக்கணித்தன. 1979 இல் இடம்பெற்ற இஸ்ரேல் - எகிப்து உடன்படிக்கை, 1982 ஆம் ஆண்டு போர், 1983 இல் ஏற்பட்ட பிளவுகள் போன்றவற்றால் பி.எல்.ஓ அரபு நாடுகளின் நட்பை இழந்துகொண்டது.

இஸ்ரேலை தாக்குவதற்கு இஸ்ரேலின் எல்லையிலுள்ள எந்தவொரு அரபுநாடும் பி.எல்.ஓவிற்கு முகம் கொடுக்காமையால் அரபாத் தன் வழிமுறையை மாற்ற எண்ணினார். இதன்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.எல்.ஓவிற்கு பல திசைகளிலும் எதிர்ப்பு ஏற்பட்டது. சிரியா, ஈராக், லிபியா ஆகிய நாடுகள் பி.எல்.ஓவை அரபாத்திடமிருந்து அபகரிக்க திட்டம் தீட்டினர். இதைவிட 40 வருடங்களுக்கு மேலாக இஸ்ரேல் தொடர்ந்தும் நிலைத்திருப்பதும் 25 ஆண்டுகளாக பி.எல்.ஓ போராடியும் பின்பு 1987 இல் பலஸ்தீனர்களது எழுச்சி தோன்றியும் எந்தப் பலனும் ஏற்படாமையால் அரபாத் எதிர்காலம் பற்றி வித்தியாசமாக சிந்தித்தார். சர்வதேசத்தில் அரசியல் நெருக்கடி ஏற்படும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்வது வழமையானதாகும். இருப்பினும் இவ் உடன்படிக்கைகள் பெரும்பாலும் முழுமை பெறுவதில்லை. அந்த வகையில் காஸா - ஜெரிக்கோ உடன்படிக்கையினை நோக்கும் போது 1989இல் சோவியத்யூனியனின் வீழ்ச்சியின் பின் அமெரிக்கா உலகில் தன்னை நிலைநாட்டிக் கொண்டது.

இதன்படி உருவான புதிய உலக ஒழுங்கின் விருப்பிற்கமைய உருவாகியதே "காஸா - ஜெரிக்கோ உடன்படிக்கையாகும்." இவ் உடன்படிக்கையிலே பேச்சுவார்த்தைகளே தொடர்ச்சியாக காணப்பட்டது. இத்தகைய நிலையில் இவ் உடன்படிக்கை ஏன் சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை என்பதை நோக்கும் போது அமெரிக்கா தனது விருப்பின்படியே போராட்ட அமைப்புக்களை மாற்றியமைக்கின்றது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமானது மேற்காசியாவில் 1991இல் இடம்பெற்ற ஈராக் மீதான யுத்தத்தை முதற்கட்டமாகவும், பாலஸ்தீன போராட்ட அமைப்பு மீதான நடவடிக்கையை 1993ஆம் ஆண்டு 2வது கட்டமாகவும் பயன்படுத்திக் கொண்டது. இச் செயற்பாடு பாலஸ்தீன ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.

அடுத்ததாக பனிப்போர் காலத்தில் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் மறைமுகமாக பாலஸ்தீன விடுதலைப் போராளிகளுக்கும், பாலஸ்தீன மக்களுக்கும் நிதி உதவிகளையும், சமூக உதவிகளையும் வழங்கி வந்தன. இதனைக் கொண்டு பாலஸ்தீன இயக்கம் தமது போராளிகளின் நலனைப் பேணிவந்தது. இதன் பின்னர் அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய நாடுகள் தமது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டன. இதனால் பாலஸ்தீன விடுதலை அமைப்பு உள்ளார்ந்த ரீதியில் பலவீனமடையத் தொடங்கியது. இதை விட ஈராக் யுத்தத்திற்கு பின்பு அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய நாடுகளும், நீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு வழங்கி வந்த நிதி உதவியினை நிறுத்திக் கொண்டமையும் இவ் அமைப்பை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியது.

அந்த வகையில் காம்டேவிட் உடன்படிக்கை பற்றி நோக்குவோமாயின் 1979 ஆம் ஆண்டு காம்டேவிட் உடன்படிக்கை அடுத்து அதன் விடுதலை பயணத்தில் சரியான ஒரு எல்லையை அடைவதற்கு தடையாக காணப்படுகின்றது. அது மட்டுமன்றி அரபுலகத்தின் அரபு தேசிய வாதத்தை ஏற்படுத்தி தீவிரமாக வளர்ப்பதில் முனைப்புக் காட்டிய நாடாக எகிப்து அதன் முன்னாள் தலைவர் நாசரும் காணப்படுவர். இஸ்ரேலை தோற்கடிக்க முனைப்பு மிக்க தலைமை தாங்கிய நாடாகவும் தலைவராகவும் எகிப்தும், நாசரும் விளங்கினர். ஆனால் பாலஸ்தீன போராட்டத்தை நாசரின் சந்ததியினர் அரசியலில் தமது நிலையை உறுதி செய்த காம்டேவிட் உடன்படிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கினார். இதன் விளைவு ஒவ்வொன்றும் சிரியா, ஜோர்டான் லெபனான் போன்றதை எகிப்து பாணியில் பி.எல்.ஓவை பாதுகாக்க வாய்ப்பை ஏற்படுத்தியதுடன் பாலஸ்தீன விடுதலையின் எழுச்சி மிக்க இராணுவ நடவடிக்கையை சந்தித்தது.

இவ்வாறு பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியை அழிக்கும் விதத்தில் காம்டேவிட் உடன்படிக்கை ஒரு முன் அணுகுவதை ஏற்படுத்தியது. அதனை பின்பற்றி சிரியா, ஜோர்டான், எகிப்து போன்ற நாடுகள் பாலஸ்தீன அகதிகளையும் அவர்களின் பொருளாதார அரசியலை கட்டுப்படுத்தும் விதத்தில் உபாயங்களை வகுத்து தனித்துவமாக பிரயோகப்படுத்தினர். அவ்வகையில் நிகழ்ந்து முடிந்த பிரதான யுத்தம் ஒவ்வொன்றும் அரபுகளுக்கு எதிராக இஸ்ரேல், அமெரிக்காவை அறிமுகப்படுத்தினாலும் அது பாலஸ்தீனத்தில் மையப் படுத்தப்பட்டது. "யுத்தம் பாலஸ்தீன மக்களையும், பாலஸ்தீன நிலத்தையும் எதிர்கொண்டது. வெளிப்படையாக அரபு யுத்தம் எனக் கூறி பாலஸ்தீன இஸ்ரேல் யுத்தத்தை பி.எல்.ஓ வை பலியிடும் பாணியில் நிகழ்த்தி முடித்தனர்."[9] இது போல் பாலஸ்தீன அகதியை தமது நிலப்பரப்பில்

---

[9] கணேசலிங்கம்.கே.ரீ.(2011) "பலஸ்தீனம் ஒரு சமகால நோக்கு". சேமமடு பதிப்பகம். கொழும்பு பக்கம் - 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாம் அமைத்து புகலிடம் வழங்கிய பாரிய அளவிலான நிதி உதவிய அகதிகளுக்கு உரித்துடைய நிவாரணத்தை பொருளாதார லாபத்துக்கு அமைவாக மாற்றுவதில் அரசுகள் வெற்றி பெற்றது. பாலஸ்தீனம் அந்தந்த அடையாளத்தை மறைக்கும் போக்கிலும் அதனைக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் இருந்ததோடு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை தூண்டிவிடுவதாகவும் பிராந்திய அரசுகள் காணப்படுகின்றன. அமெரிக்கா பிராந்திய அரசை பகைத்துக் கொள்ளாமல் பாலஸ்தீன அரசை முதன்மைப்படுத்தாமல் பிராந்திய அரசை முன்நிறுத்தி ஒரு அரசியல் தந்திரோபாயத்தை பிரயோகப்படுத்தியது. இவை அனைத்தும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை புறம் தள்ளியது.

எனவே ஒவ்வொரு உடன்படிக்கையின் பின் தந்திரோபாயம் அல்லது இராஜதந்திரம் அரசுகளால் தீர்மானிக்கப்படும் முழு உலக ஒழுங்கையும் நிர்வகிக்கும் சக்திக்கு கட்டுப்படுவதாக அமைகிறது. இவ்வாறு பாலஸ்தீன இஸ்ரேலுக்கிடையில் நடந்து முடிந்த உடன்படிக்கை விளைவுகளை பரிசீலிப்பது அவசியமான ஒன்றாகும்.

பி.எல்.ஓ ஆனது மதச்சார்பற்ற பாலஸ்தீனத்தை உருவாக்க முன் வைத்த கொள்கையை இஸ்லாமிய அமைப்புக்கள் இஸ்லாத்துக்கு எதிரானது எனக்கூறி யசீர் அரபாத்தின் தலைமைக்கு மாற்றாக புதிய தலைமையின் அவசியத்தை வலியுறுத்தி வந்தன. 1969 இல் அரபாத் பி.எல்.ஓ விற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது மதச்சார்பற்ற நாட்டை உருவாக்க ஆயுதம் தாங்கி போராட வேண்டுமென தீர்மானித்தார். ஆனால் பின்னர் இந்த முடிவிலிருந்து விலகிக் கொண்டார் என்றும் முதலாளி வர்க்கத்தின் நலனை பாதுகாத்ததுடன் சொந்த தொழிலாளர்களை பி.எல்.ஓ ஆனது சுரண்டத் தொடங்கியது என்ற விமர்சனமும் தவிர்க்க முடியாததாக எழுந்தது.

அடுத்ததாக இருநாட்டுத் தீர்வுத்திட்டத்தினை நோக்குமிடத்தில் இவ் தீர்வுத் திட்டம் 30 ஏப்ரல் 2003ம் ஆண்டு அமெரிக்கா ஐ.நா.சபை ஐரோப்பிய யூனியன் என்பவற்றுக்கு முன்னிலையில் பாலஸ்தீன தலைமையும், இஸ்ரேலிய தலைமையும், இரு நாட்டுத் தீர்வுத்திட்டத்தில் பாலஸ்தீன இஸ்ரேலிய எல்லை, பாதுகாப்பு மற்றும் பாலஸ்தீனத்தின் ஜனநாயக அரச நிறுவனத்திற்கான கட்டுமானம் என்பன முதன்மைப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அமுலாக்கத்தில் மேற்குறிப்பிட்ட சர்வதேச சக்திகள் பங்கெடுப்பதுடன் முதலாவது திட்டம் நிறைவடைய இரண்டாவது திட்டத்திற்கான விடயம் பற்றிய கலந்துரையாடலை இரண்டு தரப்புமே பேச்சுக்கள் மூலம் நிர்ணயித்துக் கொள்ளும். இதனை கண்காணிப்பவராக, நடுவராக தான் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு காணப்படும். இதனடிப்படையில் உடன்பாடு எட்டப்பட்டது. மேலும் வன்முறைக்கும் பயங்கரவாதத்திற்கும் முடிவு கட்டவும் பாலஸ்தீன மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்கவும் பாலஸ்தீன அதிகார அமைப்பின் அரசியல் நிறுவனத்துக்கான கட்டுமானத்திற்கு தயார் செய்வதுமே இவ் உடன்படிக்கையின் இலக்காகும்.

பி.எல்.ஓ வின் வீழ்ச்சிக்கு உடன்படிக்கைள் காரணமாக இருந்தன. அந்தவகையில் காம்டேவிட், காஸா-ஜெரிக்கூா உடன்படிக்கைகள், இருநாட்டுத்தீர்வுத்திட்டம் போன்றவற்றை குறிப்பிடலாம். இந்த உடன்படிக்கையின் இராஜதந்திரமே பி.எல்.ஓ.வின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையிலும், சர்வதேசத்திலும் பி.எல்.ஓவிற்கு இருந்த ஆதரவானது பாலஸ்தீன நிலப்பரப்பில் இருந்த மக்களிடம் குறைவடைய ஆரம்பித்தது. பி.எல்.ஓ ஆனது உயர்நிலை அரசியலை முதன்மைப்படுத்தி செயற்பட்டது. இத்தகைய செயற்பாடுகள் பி.எல்.ஓவின் வீழ்ச்சிக்கான காரணங்களாக கொள்ளப்படுகின்றன. 1982 ஆம் ஆண்டு இஸ்ரேல் இராணுவம் லெபனானுக்குள் புகுந்து அங்கு பாலஸ்தீனத்திலிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் தங்கியிருந்த அப்பாவி மக்களை கொல்வதற்கு லெபனானின் கிறிஸ்தவ அமைப்பின் ஒன்று உதவி மேற்கொண்டது. அத்துடன் பி.எல்.ஓ வினையும் விரட்டியது. ஆக்கிரமித்துக் கொண்ட பகுதிகளில் பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் இழைத்த அநீதிகளை அரபாத் தட்டிக் கேட்ட போது அவரை தீவிரவாதி என இஸ்ரேல் கூறிக்கொண்டது.

"1979ம் ஆண்டு இஸ்ரேல் - எகிப்து சமாதான ஒப்பந்தம், 1982 லெபனான் போர், 1983ல் பி.எல்.ஓவில் ஏற்பட்ட பிளவுகள்" போன்றன அரபாத்தின் வழிமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதைவிட சோவியத்யூனியனின் பலம் இழந்து கொண்டு சென்றமையும் அரபாத்தின் வீழ்ச்சிற்கு இன்னொரு காரணமாகும். இஸ்ரேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்கள் ஊடாக அடிபணிய வைக்கலாம் என்று நினைத்த அரபாத் பின்னர் இராஜதந்திரத்தின் மூலமாக பாலஸ்தீனத்தின் சுயாட்சியை பெற்றுக்கொள்ள முடிவு செய்தார். இதனால் 1988ல் இஸ்ரேலை அங்கீகரிப்பது பற்றி சிந்திக்க ஆரம்பித்தார். இதன் விளைவாக அரபாத் பாலஸ்தீன மக்களிடமிருந்து அந்நியப்படத் தொடங்கினார். இருப்பினும் இவர் இஸ்ரேலை அங்கீகரித்தது. சர்வதேசத்தின் நெருக்கடியை தக்கவைப்பதற்காகும்.

காஸா - ஜெரிக்கோ சமாதான பேச்சுவார்த்தையின் பின்பு பலமான அமைப்பாக ஹமாஸ் வளர்ந்தது. இதன் ஆரம்ப நடவடிக்கைகள் பி.எல்.ஓ விற்கு எதிராக அமைந்திருந்தது. இதனால் அமெரிக்க - இஸ்ரேல் தரப்பு ஹமாலின் வளர்ச்சிற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. படிப்படியாக வளர்ச்சியடைந்த ஹமாஸ், காஸா - ஜெரிக்கோ உடன்பாட்டுக்கு பின்பு தீவிரம் பெற்றது. மக்கள் மத்தியிலும் ஹமாஸ் அதிக செல்வாக்கு பெறத்தொடங்கியது.

நெருக்கடியான சூழலில் சம்மந்தமேயில்லாத பி.எல்.ஓ உம் அதன் தலைவரான அரபாத்தும் சதாம் உசைனுக்கு தமது ஆதரவினை தெரிவித்தனர். அரபாத்தும் சதாமும் சந்தித்த புகைப்படம் ஒன்று வெளியாகி பி.எல்.ஓ மீது உலக நாடுகளுக்கு இருந்த அனுதாபத்தையும் அழித்துவிட்டது. உலகத்தின் பார்வையில் அன்று பி.எல்.ஓ ஒரு போராளி இயக்கம் தான். அரசியல் முகம் கொண்டதொரு போராளி இயக்கம். சதாம் உசைனை குவைத் யுத்தத்தில் அரபாத் ஆதரித்ததன் விளைவாக பாலஸ்தீன விடுதலைக்காக அவர் வகுத்த அத்தனை திட்டங்களையும் சர்வதேசம் நிராகரித்து விட்டது. எந்தவொரு தேசமும் அமைப்பும் பி.எல்.ஓ விற்கு ஆதரவினையோ அனுதாபத்தினையோ தெரிவிக்கத் தயங்கியது.

அது மட்டுமன்றி அரபாத் இரகசிய ஒப்பந்தமான ஒஸ்லோ உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமையும் இன்னொரு அம்சமாக உள்ளது. அதாவது இந்த ஒப்பந்தத்தை மக்களுக்கு அறிவிக்காமல் செய்ததே அரபாத் இழைத்த தவறாகும். ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னாவது பாலஸ்தீனியருக்கு அது தொடர்பாக விளக்கம் கொடுத்திருப்பின் அரபாத் மக்கள் ஆதரவை இழக்க நேரிட்டிருக்காது. அரபாத் செய்த ஒப்பந்தத்தால் பி.எல்.ஓ இன் முக்கிய உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட பி.எல்.ஓ விட்டு விலகினார். இதனால் பி.எல்.ஓ வின் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது.

2004 ஆம் ஆண்டு உடல் நலம் பாதிக்கப்பட்ட அரபாத் மரணத்தை தழுவிக்கொண்டார். முழுப்பாலஸ்தீனமும் கிடைக்கும் வரை போராட்டம் தொடர வேண்டும் என எண்ணிய அரபாத் பல ஏமாற்றங்களின் பின் 1993 இல் ஒஸ்லோ சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டார். இதன் மூலம் காஸாவையும், வெஸ்ட்பேங்கின் சில பகுதிகளையும் இணைத்து சிறிய பாலஸ்தீன நாடு உருவாக ஒப்புக்கொண்டார். இதன் பின்னர் வெஸ்ட்பேங் முழுவதும் பாலஸ்தீனர்களுக்கு கிடைக்கும் என நம்பினார். ஆனால் இஸ்ரேல் இவ் ஒப்பந்தத்தை சரியாக செயற்படுத்தமையால் சிறிய பாலஸ்தீன நாடு கூட உருவாகவில்லை.

அரபாத்தின் மரணத்திற்கு பின் ஜனாதிபதியான மம்முட் அபாஸ் பாலஸ்தீன விடுதலை அமைப்பையும், பாலஸ்தீன அதிகாரப் பிரதேசத்தையும் நிர்வகித்து வருகிறார். "அரபாத்தை ஏற்றுக்கொள்ளாத அமெரிக்காவும் இஸ்ரேலும் மம்முட் அபாஸை அங்கீகரித்து செயற்படுகிறது. மம்முட் அபாஸ் இஸ்ரேலுடனும், அமெரிக்காவுடனும் இணைந்து செயற்படுபவராக காணப்படுகிறார். இதனால் பாலஸ்தீனத்தை மீட்டெடுப்பதோ அல்லது அதை சுதந்திர தேசமாக மாற்றியமைப்பதோ கடினமானதாக உள்ளது. ஹமாஸ் மட்டுமே தற்போது தீவிரவாத அணுகுமுறையோடு போராட்ட உணர்வைக் கொண்டிருக்கின்ற பாலஸ்தீன அமைப்பாக உள்ளது."[10]

## பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் ஈழவிடுதலைப் போராட்டமும் ஓர் ஒப்பீடு

பாலஸ்தீனப் பிரச்சனையும் ஈழத்தமிழர் பிரச்சனையையும் ஒப்பீட்டு அடிப்படையில் நோக்குவோமாயின் பாலஸ்தீன விடுதலை அமைப்பாக இருந்தாலும் சரி விடுதலைபுலிகள் இயக்கமாக இருந்தாலும் சரி இந்த இரண்டு அமைப்புக்களும் "தமது மக்கள் சார்ந்த நலன்களையும் உரிமைகளையும் வென்றெடுக்கவே உருவாக்கப்பட்டது என்று கூறினால் மிகையாது" குறிப்பாக பாலஸ்தீன அரபுக்கள் எவ்வாறு தாயகத்திலிருந்து விரட்டப்பட்டார்களோ அதே போலவே

[10] கணேசலிங்கம் கே .ரீ (2013) "சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்" சேமமடு பதிப்பகம், கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலும் தமிழர்கள் பெரும்பான்மையினர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். அவ்வாறு விரட்டப்பட்ட போது இந்த இரண்டு அமைப்புக்களும் தங்களது மக்களின் உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புக்களாகும். இவ்விரு தரப்பினரும் தமது நிலத்தினை மீட்டு எடுப்பதற்கு ஆயுதப் போராட்டமே சிறந்த வழிமுறை என கருதி அந்த வழியில் செல்வது ஊடாக மட்டுமே தமக்கான தீர்வும் நியாயப்பாடும் கிடைக்கும் என கருதி இந்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

மேலும் 1948 தொடக்கம் இன்றுவரை சர்வதேச அரசியலில் தீர்க்கப்படாத ஒரு பிரச்சனையாக பாலஸ்தீனப் பிரச்சனையும் ஈழத்தமிழர் பிரச்சனையும் கொந்தளிப்புடனும் கொதிநிலையுடனும் காணப்படுகிறது. இதற்கான காரணங்களை ஒப்பு நோக்குமிடத்தில் பாலஸ்தீனப் பிரச்சனையும் இலங்கைத் தமிழர் பிரச்சனையும் ஒரு பயங்கரவாதப் பிரச்சனையாக முத்திரை குத்தப்பட்டுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். " 'மன்றோ கொள்ளை' என்பது அமெரிக்கா முதன்மைப்படுத்தும் கொள்கையாகும். வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் எந்தவொரு நாட்டிலும் அந்த பகுதியில் அமைதியை நிலைநாட்டிட அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். என ஆணவத்துடன் கூறுகின்றது. 1886 இல் கால்வே என்னும் இலத்தீன் நீதிபதி மன்றோ கொள்கை நல்ல கொள்கை அல்ல. அது நீதிக்கு புறம்பானது என்று கூறினார்."[11]

* 1886/87 இல் அமெரிக்கா கீறிஸ் நாட்டை முற்றுகை இட்டது
* 1884 இல் நிக்கரக்குவாவின் மீது அமெரிக்கா குண்டு மழை பொழிந்தது.
* 1858 இல் அமெரிக்க போர்கப்பல்கள் பராகுவே நாட்டின் நீர்ப்பரப்பில் புகுந்து அந்நாட்டை அச்சுறுத்தின.

இவ்வாறு பல போர்களையும் கோர அழிவுகளையும் ஏற்படுத்திய அமெரிக்கா அவற்றை எல்லாம் "ஜனநாயகத்திற்கான போர்" என தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. மாறாக இழந்த தாயகத்தை

[11] மேற்படி நூல் பக்கம் - 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்பதற்காக போராடும் ஹாமாஸ் அமைப்பை "பயங்கரவாதிகள்" என கூறினர்.

ஈழத்தமிழர் பிரச்சனையாக இருந்தாலும் பாலஸ்தீன பிரச்சனையாக இருந்தாலும் சரி நிலப்பரப்பே இப் பிரச்சனைக்கான பிரதான காரணமாக அமைகின்றது. அந்த வகையில் வாழ்விடம் இல்லாமல் புலம் பெயர்ந்து அயல் நாடுகளில் வாழ்ந்து கடைசியில் எல்லோராலும் நிர்கதியாக்கப்பட்ட போது பிரித்தானியாவின் உதவியுடன் தனியரசை அமைத்தனர். அதிபட்ச யூதர்கள் வந்து குடியேறியதனால் பாலஸ்தீனர்கள் சொந்த மண்ணிலிருந்து விரட்ட பாலஸ்தீனப் பிரச்சனை ஆரம்பமானது. இலங்கைத்தமிழர்களும் பெரும்பான்மையினரால் விரட்டியடிக்கப் பட்டனர். திட்டமிடப்பட்ட பல குடியேற்றதிட்டங்களாக கல்லோயா, கந்தளாய், மணலாறு, கொக்கிளாய், போன்ற பிரதேசங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறான குடியேற்றதிட்டங்கள் தமிழ் பேசும் மக்களின் இனவிகிதாசார முறையை மாற்றியமைக்கும் செயற்படாக மட்டுமன்றி அவர்களின் நிலப்பரப்பை கூறுபோடுவதாகவும் காணப்படுகிறது. குறிப்பாக வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் தென்னை மரவாடி, கொக்கிளாய், புல்மேட்டை போன்ற தமிழ் பேசும் மக்களின் இணைக்கப்பட்டிருந்த பிணைப்பை உடைத்து வெலியோ என்ற சிங்கள குடியேற்றம் உருவாக்கப்பட்டது. இது வடக்கு கிழக்கு தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநித்துத்தையும் குறைத்தது.எனவே பாலஸ்தீனரும் இலங்கை தமிழரையும் பொறுத்தவரை தொடர்ச்சியான நிலப்பரப்பினை தக்க வைத்திருக்க முடியாத சூழல் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

1979 இஸ்ரேல் பாலஸ்தீனப் யுத்தத்தின் பிற்பாடு ஐ.நா. சபையில் தலையீட்டதால் அமெரிக்காவின் மேற்பார்வையில் 'இஸ்ரேல் எகிப்து தரப்பினரிடையே' ஒப்பந்தம் எட்டப்பட்டது. உண்மையில் இதன் பங்காளரான பலஸ்தீனர்கள் கைவிடப்பட்டதுடன் அவர்களின் பிரச்சனைகள் அரைகுறை தீர்வே திணிக்கப்ட்டன. இவ்வாறு 'இலங்கை இந்திய ஒப்பந்தம்' மேற்கொள்ளபட்டது.

பாலஸ்தீனப் பிரச்சனையிலும் சரி இலங்கைத்தமிழர்கள் பிரச்சனையிலும் இவர்களுக்கான தீர்வு காணும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கினை காண முடிகிறது. பாலஸ்தீனர்களை பொறுத்தவரையில் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் லெபனான், சிரியா, ஜோர்டான், எகிப்து, போன்ற நாடுகளை நம்பியிருந்த இந்த நாடுகள் எல்லாம் இஸ்ரேல் - பாலஸ்தீனப்பிரச்சனை ஊடாக தமது நலன்களை வென்றெடுத்தனர். அது போல் இலங்கைத்தமிழரும் இந்தியாவையும் பிற்காலத்தில் நோர்வே போன்ற நாடுகளையும் நம்பியிருந்தனர்.

பாலஸ்தீனர்களை பொறுத்தவரையில் சோசலிசம் பாலஸ்தீனத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்ளையினை கொண்டவர்களாக இருந்தனர். இலங்கைத்தமிழரை பொறுத்தவரையிலும் ஆரம்ப காலத்தில் சோசலிசத்தை ஏற்றுக் கொள்ளப்படாலும் தீவிர முதலாளித்துவத்தால் கவரப்பட்டனர். உலகுக்கு முதலாளித்துவம் சோசலிசம் என்பதைவிட புவிசார் அரசியல் முதன்மையாக அமைந்தது. அத்துடன் பாலஸ்தீனப்பிரச்சனையும் இலங்கைத்தமிழர் பிரச்சனையிலும் தலைமை தாங்கிய போராட்ட அமைப்பில் ஏற்பட்டவுள்ள முரண்பாடுகள் பிளவுகள், பலவீனமான செயற்பாடுகள் போன்றவற்றாலும் இன்றும் தீர்க்கப்படாத பிரச்சனையாகவே நீண்டு செல்கிறது.

பி.எல்.ஓ வின் தோற்றமானது அரபு நாடுகளின் அமைப்புக்களினாலும் அரபு லீக்கினாலும் பாலஸ்தீன இளைஞர்களாலும் உருவாக்கப்பட்டது. குறிப்பாக எகிப்தினுடைய தலைவர் நாசரின் பங்கு அதிகமாகக் காணப்பட்டது. ஆனால் தமிழீழ ஆயுதப் போராட்டம் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட உணர்வுகளில் இந்திய நலன்களுடன் சேர்ந்து தமிழ் இளைஞர்களினால் உருவாக்கப்ட்டது.

இவ்விரண்டு இயக்கங்களினுடைய ஆரம்ப கால போரியல் முறைகளில் ஓர் ஒற்றுமைப்பாட்டினைக் காணலாம். இங்கு கொரில்லாயுத்த போர் முறைகள் பின்பற்றப்பட்டன. இந்தப் போரியல் முறையிலேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தினுடைய ஆரம்ப இருப்புக்கள் காணப்பட்டது. அதே போன்றே பி.எல்.ஓ விலும் யசீர் அராபத்தின் வருகைக்கு பின்பு அறிமுகப்படுத்தப்பட்ட கொரில்லா யுத்தத்தின் மூலம் இஸ்ரேலியப் படையினரை நிலைகுலைய செய்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் இரண்டு விடுதலைப் போராட்டங்களின் நோக்கமும் தாயகப்பிரதேசத்தினை மீட்டெடுப்பது ஆளுவதாகும். தமிழர்களினைப் பொறுத்தவரை தாம் சிங்கள இனத்தவர்களுடன் சேர்ந்து வாழ இயலாத நிலையில் அல்லது பெரும்பான்மை இனத்தினால் ஏற்படுத்தப்பட்ட அநீதிகளுக்கு எதிராக தம் தனித்து வாழ வேண்டும் என்ற உணர்வுக்கு உந்தப்பட்டவர்களாக தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்திருந்தார்கள். ஆனால் பாலஸ்தீனியர்களைப் பொறுத்தவரை தமது பிரதேசத்தினை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலியர்களை விரட்டி தமது நிலத்தினை மீட்ப்பதற்கான யுத்தமாகவே அவர்களுடைய யுத்தம் காணப்பட்டது.

தமிழரின் ஆயுதப் போராட்டமும் சரி பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் சரி அவை வீழ்ச்சியடைந்தமைக்கு அங்கு ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைககள் முக்கிய காரணமாகும். "உடன்படிக்கைகள் என்பவை விடுதலைப் போராட்டங்களின் உத்வேகத்தினையும் அதனுடைய வலுவினையும் இழக்கச் செய்வதற்கான உத்தியாகவே தேசிய அரசுகளும் பிராந்திய அரசுகளும் பயன்படுத்துகின்றன. அவ்வாறே பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் "காம்டேவிட், காசா - ஜெரிக்கோ உடன்படிக்கை , இருநாட்டுத் தீர்வுத்திட்ட உடன்படிக்கை" போன்றன விடுதலைப் போராட்டங்களின் வலுவினை மலுங்கடித்த செயற் பாடகவே காணப்படுகின்றது. குறிப்பாக ஒஸ்லோ உடன்படிக்கை யானது பி.எல்.ஓ. வின் தலைவர் யசீர் அரபத்தில் பாலஸ்தீன மக்கள் வைத்திருந்த நம்பிக்கையில் பலவீனத்தினை ஏற்படுத்தியிருந்து. இதே போன்றே தமிழரின் விடுதலைப் போராட்டத்திலும் "பிராந்திய அரசுகளி னாலும் மேற்குலக நாடுகளினாலும் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை கள்" பலவீனத்துக்கு காலாக அமைந்தது. நீட்சி பெற்றிருந்த யுத்த நிறுத்த ஒப்பந்தங்களானது போராளிகளை சமூக வாழ்வியல் தளத்துக்கு உள் வாங்கியது. இது அவர்களின் போராட்ட உணர்வின் உத்வேகத்தினை குறைந்திருந்தது. அத்துடன் போராட்ட அமைப்புக்குள்ளும் சிறிலங்கா அரசினால் ஏற்படுத்தப்பட்ட ராஜதந்திர ரீதியிலான பிளவுகள் என்பன யுத்தினை மேலும் பலவீனப்படுத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து நோக்குகின்ற போது பாலஸ்தீன மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் தமிழர்களினுடைய ஈழ விடுதலைப் போராட்டத்திலும் பலஒற்றுமை வேற்றுமைகள் காணப்படுகின்றன. இப் போராட்டங்களினுடைய தேசியப் தலைமைத்துவம் யுத்த நோக்கம் போரியல் முறைகள் பிராந்திய அரசுகளின் தலையீடு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் என்பவற்றில் அதிகளவான ஒற்றுமைப் பண்புகளை கொண்டு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# ஹமாஸ் அமைப்பு[12]

(Hamas Organization)

## அறிமுகம்

இஸ்ரேலிலும், பாலஸ்தீனத்திலும் ஏராளமான ஆயுத இயக்கங்கள் உருவாகத் தொடங்கின. இதில் பிந்திய காலப்பகுதியில் பாலஸ்தீனத்தில் தோற்றம் பெற்ற அமைப்புக்கில் ஒன்று தான் ஹமாஸ் ஆகும். தற்போது ஹமாஸ் அமைப்பானது பாலஸ்தீனர்களுக்கு இடையே மிகுந்த செல்வாக்கை கொண்டுள்ளதாக காணப்படுகின்றது.

ஹமாஸ் இயக்கம் தோற்றம் பெற்றதற்கு அடிப்படைக் காரணிகளாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் **(PLO)** தலைவராக தன்னை பிரகடனப்படுத்திக்கொண்ட யசீர் அரபாத்தின் விடுதலைக் கோஷம் பலவீனமடையத் தொடங்கிய போது ஹமாஸ் எழுச்சி ஆரம்பமானதெனலாம். அவரும் அவர் போன்றோரும் மேற்கு நாடுகளின் கைப்பொம்மைகளாக செயற்பட ஆரம்பித்தனர். ஆக்கிரமிப்பு இஸ்ரேலுடன் ஒப்பந்தங்கள், சமரசப் பேச்சுக்களை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் அவர்கள் அறியாமலே மேற்கின் சதி வலைக்குள் வீழ்ந்தனர். இதுவும் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன் விடுதலைக்காக தூய்மையாக போராடுகின்ற ஓர் இயக்கத்தின் தேவையை வலியுறுத்தியது. இது போன்ற பல நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு அறிஞர்கள் மற்றும் சமூகப்பற்றுக் கொண்டோர்கள் மத்தியில் பலமான ஒரு இயக்கத்தின் தேவை உணரப்பட்டதன் விளைவாக உருவானதே ஹமாஸ் எனும் விடுதலை அமைப்பாகும்.

---

[12] கே.துஷநந்தினி பி.ஜெருஸ்கா எமிதுனகாந் எஸ்.சுகந்தினி பிரினா குருஸ் ஆகிய மூன்றாம் வருட அரசறிவியல் துறை மாணவர்களால் முன்வைக்கப்பட்ட அளிக்கையின் தொகுப்பு-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹமாஸ் ஆனது இந்தப் பெயரில் அதிகார பூர்வமாக செயற்படத் தொடங்கிய வருடம் என நோக்கினால் அது 1987 ஆகும். ஆனால் இந்தக்குழுவானது அதற்கு முன்பே வேறு பெயர்களால் பல ஆண்டுகளாக இயங்கி வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. பின்னாட்களில் "ஹமாஸ்" என்று பெயர் கொண்ட இந்தக் குழு தோன்றுவதற்கு முக்கியமான காரணமாக "ஜமாத் அல் இக்வான் அல் முஸ்லிமின்" என்கின்ற இன்னோர் அமைப்பாகும். இந்த அமைப்பானது முழுமையாக முஸ்லிம் சகோதரத்துவத்திற்காகவே பாடுபட்டுக் கொண்டிருந்த அமைப்பாகக் காணப்பட்டிருந்தது. 1928ம் ஆண்டு எகிப்தில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பினுடைய நிறுவுனராக ஹசன் அல்பன்னா காணப்பட்டார். மேலும் இவ் அமைப்பானது முக்கியமான சில கொள்கைகளையும் கொண்டு காணப்பட்டது. அதாவது அல்லாவையும் இறைத்தூதுவரையும் போற்றுவது அவர்களின் வழி நடப்பது, குர்ரானை மதித்து பின்பற்றுவது, இறைவனுக்காக உயிரையும் கொடுப்பது போன்றனவாகும்.

குறித்த அமைப்பானது எகிப்திலும் பின்னர் 1930 களில் சிரியாவிலும் ஜோர்டானிலும் தொடங்கி மத்தியகிழக்கின் பல நாடுகளிலும் இதனுடைய கிளைகள் அமைக்கப்பட்டன. இதன் சகோதர பாலஸ்தீன கிளை 1946ம் ஆண்டு ஜெருசலத்திலும் அமைக்கப்பட்டிருந்தது. 1967ம் ஆண்டு நடைபெற்ற ஆறுநாள் யுத்தத்திலும் இஸ்ரேல் படைகள் வெற்றி பெற்றதனைத் தொடர்ந்து குறித்த அமைப்புக்கள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளும் முகமாக பல பாலஸ்தீன அராபியர்கள் இந்த அமைப்புக்களில் உறுப்பினர்களாக உள்வாங்கப்பட்டதுடன் காஸா மற்றம் மேற்குக்கரைப் பகுதிகளில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் கிளைகள் அமைக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில் குறித்த காஸா பகுதியினுடைய கிளைதான் பின்னர் ஹமாஸாக தோற்றம் பெற்றது. அதாவது ஷேக் அகம்மது யாசின் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்த காஸா பகுதி முஸ்லிம் அமைப்புத்தான் பின்னர் ஹமாஸாக தோற்றம் பெற்றமை குறிப்பிடத் தக்கது. குறித்த முஸ்லிம் சகோதர அமைப்பின் காஸா பிரிவின் தலைவ்ராக 1970 களில் இருந்தவர் ஷேக் அகமதுயாசின் ஆவார். அதனடிப்படையில் தனது கடைசிக்காலம் வரை ஹமாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினுடைய ஞான பிதாவாக இருந்தார். இவரது தகவல் மற்றும் இஸ்லாமிய ரீதியான அர்ப்பணிப்பு பற்றி சுருக்கமாக நோக்கினால்.

கெய்ரோவில் இருக்கின்ற அல்அஜர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பினுடைய கொள்கைகளால் கவரப்பட்ட இவர் உலகம் முழுவதும் இஸ்லாம் சாம்ராஜ்யம் அமைய வேண்டும் என உறுதியாக நம்பியிருந்தார் அந்த வகையில் படிப்பை முடித்துவிட்டு காஸா திரும்பிய பின்னர் இவர் குறித்த அமைப்பினுடைய நடவடிக்கைகளை ஆர்வமாக மேற்கொண்டார். பின்னர் சில காலம் கழிந்த 1973ம் ஆண்டு "அல் முஜம்மா அல் இஸ்லாமி" எனும் பெயரில் ஒரு இஸ்லாமிய மையம் இவரால் தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்புத்தான் முன்னே கூறப்பட்ட எகிப்தில் நிறுவப்பட்ட "அல் இக்வான் அல் முஸ்லிமின்" எனும் இயக்கம் செய்து கொண்டிருந்த அரசியல் நடவடிக்கைகளை காஸா பகுதியில் செயற்படுத்தி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் குறித்த அமைப்பின் நடவடிக்கையாக சமூக சேவைகளாக அமைந்திருந்தன.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் இஸ்ரேல் உருவாகிய பின்னர் பாலஸ்தீன மக்கள் போதுமான அடிப்படை வசதிகளைக் கூட பெற்று கொள்ள முடியாமல் திணறிக்கொண்டிருந்த அந்தக் காலப்பகுதியில் ஷேக் அகமது யாசின் தலைமையிலான "அல் முஜம்மா அல் இஸ்லாம்" என கூறப்பட்ட அமைப்புத்தான் பல்வேறுபட்ட சமூக சேவைகளைச் செய்து வந்தன. இதனால் பாலஸ்தீன மக்களிடையேயும் மிகுந்த வரவேற்பையும் பெற்றுக் கொண்டிருந்தன. குறித்த காலப்பகுதியில் ஷேக் அகமது யாசினினுடைய இஸ்லாமிய அமைப்பிற்கு இஸ்ரேலினுடைய நட்பு ஏற்பட்டிருந்தது. பாலஸ்தீனம் முழுவதும் வன்முறை மேலோங்கிக் கிடந்த நேரத்தில் யாக்ஷினின் அமைப்பு சாத்வீகமாக செயற்பட்டு வந்தது. அதனை ஆதரித்தால் தமக்கும் பாலஸ்தீன மக்களிடையே ஆதரவு கிடைக்கும் எனக்கருதிய இஸ்ரேல் அரசு யாஷினின் அமைப்பினை ஆதரித்தது. அது மட்டுமன்றி பி.எல்.ஓ விற்கு நேரெதிராக செயற்பட்டு வந்த அமைப்பே யாக்ஷினின் அமைப்பு. அதனால் நட்பினை இஸ்ரேல் விரும்பியது. .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.எல்.ஓ விற்கு எதிராக ஷேக் அகமது யாசினின் அமைப்பை முன்நிறுத்துவதே இஸ்ரேலது உள் நோக்கமாகவும் இருந்தது. குறித்த இஸ்ரேலது நட்பினை ஏற்படுத்திக் கொண்டமைக்கான காரணம் தமது இஸ்லாமிய அமைப்பை மேன்மேலும் வளர்ச்சி பெறச்செய்வதாகும்

1979ம் ஆண்டில் ஷேக் அகமது யாசினைத் தலைவராகக் கொண்ட "அல்முஜம்மா அல் இஸ்லாமி" என்ற இயக்கம் லாப நோக்கங்கள் அற்ற மத அமைப்பாக முறைப்படி பதிவு செய்யப்பட்டது. குறித்த அமைப்பு இஸ்லாமிய நீதியாக வளர்ச்சி கண்டதுடன் மசூதிகளினுடைய எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டதுடன் மசூதிகளை வழிபடுபவர் களின் எண்ணிக்கையம் அதிகரித்தது. அத்துடன் இளைஞர்களைக் கவரும் முகமாக பல்வேறுபட்ட இஸ்லாமிய நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த அமைப்பிற்கு பல இளைஞர்கள் உள்வாங்கப்பட்டனர்

இவ்வாறு வளர்ச்சிகண்டு வந்த அமைப்பானது பின்னர் அதனுடைய சாத்வீகமான தன்மையிலிருந்து குறைந்து சிறிது சிறிதாக வன்முறை வெளிப்படத் தொடங்கியிருந்தன. முக்கியமாக கூறினால் இஸ்லாம் அல்லாத விடயங்கள் தொடர்பில் தமது வன்முறையை பிரயோகிக்கத் தொடங்கினர். பின்னர் 1980களின் மத்தியில் இந்த அமைப்பில் வன்முறைள் அதிகரிக்கவும் தொடங்கிவிட்டிருந்தன.

இஸ்லாமிய அமைப்பினர் பி.எல்.ஓ அமைப்பின் செல்வாக்கு மிகுந்திருந்த பல பகுதிகளிலும் தாக்குதல்களை நடாத்தி ஆக்கிரமிக்கவும் தொடங்கினார்கள். எனவே குறித்த காலப்பகுதிகளில் பாலஸ்தீனம் முழுவதும் இந்த இரு அமைப்புக்களதும் மோதலில் மேலோங்கிக் காணப்பட்டிருந்தன. அந்தவகையில் குறித்த இரண்டு அமைப்பிற்கும் இடையே எதிர்ப்பு ஏற்பட முக்கிய காரணம் யாசுினின் இஸ்லாமிய அமைப்பானது மதம் தொடர்பானது மட்டுமே எனக்கருதினர். பி.எல்.ஓ குறித்த பிரச்சனையை மதக் கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை மதச்சார்பற்றே பி.எல்.ஓ இயக்கம் செயற்பட்டு வந்தது இதுதான் இரு அமைப்பிற்குமிடையேயான முரண்பாடாகும்.

எனவே இரு அமைப்பினதும் வன்முறை மேலோங்கின. அவ்வகையில் மேற்கூறிய இஸ்லாமிய அமைப்பு வன்முறை ரீதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைய மறுபுறம் பி.எல்.ஓ இன்டி.்.பதா *(Intifada)* எனும் போராட்டத்தை மேற்கொள்ள முயன்றது. பி.எல்.ஓ வின் போராட்டத்தை பாலஸ்தீனிய மக்கள் அனைவரும் ஏற்றனர். ஆயினும் குறித்த பி.எல்.ஓ விற்கு எதிராக செயற்பட்ட குறித்த இஸ்லாமிய அமைப்பு ஆதரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இஸ்லாமிய அமைப்பு ஆரம்பத்தில் இஸ்ரேலுடன் நட்பை ஏற்படுத்தி வந்திருந்தாலும் இஸ்ரேலின் பிடியில் இருந்து பாலஸ்தீனத்தை விடுவிப்பதுதான் அதனுடைய முக்கிய நோக்கமாகவே இருந்தது. அதற்கான சந்தர்ப்பத்திற்காகத்தான் அவர்கள் இதுவரை காலம் காத்திருந்தனர். அதுமட்டுமன்றி குறித்த பி.எல்.ஓ வின் *(Intifada)* போராட்டத்தை ஆதரிக்காதுவிட்டால் பாலஸ்தீனிய மக்களிடையே தமக்கிருந்த செல்வாக்கு குறைந்துவிடும் என்ற அச்சமும் தான் குறித்த இஸ்லாமிய அமைப்பு பி.எல்.ஓவை ஆதரிக்கக் காரணமாக இருந்தது எனலாம். அந்த வகையில் யாஷினின் இஸ்லாமிய அமைப்பின் அரசியல் நீட்சியாக இன்னொரு புதிய இயக்கத்தை தொடங்குவதாக முடிவு செய்தார்கள். இந்தப் புதிய இயக்கம் மேற்கூறிய இண்டி.்.பதா *(Intifada)* போராட்டத்திற்கு முழு ஆதரவு அளிக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வகையில் புதிய இயக்கத்திற்கு அவர்கள் தெரிவு செய்த பெயர்தான் "ஹமாஸ்" *(Hamas)* என்பதாகும்.

முதலாவது இண்டி.்.பதாவின் போது 1987 செப்டெம்பரில் இருந்தே "ஹமாஸ்" எனும் புதிய இயக்கம் பற்றிய தகவல்கள் பரபரப்பாக வெளியே தொடங்கினாலும் பின் அதே ஆண்டின் டிசெம்பர் 14ம் திகதி ஹமாஸ் முறைப்படி தொடங்கப்பட்டது.

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில்தான் குறித்த ஹமாஸ் எனும் இயக்கம் தோற்றம் பெற்றது எனலாம் முக்கியமாக ஹமாஸைத் தோற்றுவித்த நிறுவனத் தலைவர்களாக குறிப்பிடப்படுபவர்களாக

- *ஷேக் அகமது யாசின்*
- *அப்துல் அஜீஸ் அல் ரண்டிஸி (Abdul Aziz al Rantissi)*
- *அப்தெல் .்.பதா துகான் (Abdel Fattah Dukhan)*
- *முகம்மது ஷாமா (Mohammed Shama)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *இப்ராஹிம் அல்யாசர் (Ibrahim al – Yazour) (Issa – al-Najjar)*
- *ஈஸா அல் நஜ்ஜர் (Issa – al-Najjar)*
- *ஸலா ஷாஹித் (Salah Shahade)*
- *மெஹமூத் அல் ஸஹர் (Mahmud al Zahar)*

போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களைத் தவிர அந்தகாலகட்டத்தில் ஹமாஸின் உருவாக்கம் வளர்ச்சியில் பங்கேற்றிருந்த மற்ற முக்கியமான தலைவர்களாக

- *ஷேக் கலீல் கவ்கா (Sheikh Khalil Qowqa)*
- *ஈஸா அவ் அஷர் (Isa - al – Ashar)*
- *மூசா அபு மார்ஸ்க் (Musa Abu Marzuq)*
- *இப்ராஹிம் குஷா (Ibrahim Ghusha)*
- *காலித் மஷால் (Khaled Mashal)*

போன்றோரைக் குறிப்பிடமுடியும்

எனவே தொகுத்து நோக்குமிடத்து பலஸ்தீனிய தேசியத்தினையும் அதன் தனித்துவத்தினையும் நிலை பெறச்செய்யும் பாலஸ்தீன வரலாற்றில் தோற்றம் பெற்ற பல்வேறு இயக்கங்களிலும் பல்வேறு வகையான தலைமைத்துவங்களிலும் செயற்பாடுகளிலும் தனித்துவமாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட இயக்கமாக ஹமாஸ் இயக்கமாகும்.

## ஹமாஸின் அரசியல் ரீதியான எழுச்சி

1988ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் தான் ஹமாஸ் மிகுந்த துணிச்சலுடன் தன் நம்பிக்கைகள், கருத்துக்கள், வழிமுறைகளை வெளிப்படையாக கூறியதோடு தனது நடவடிக்கைகளிலும் மிகக் கடுமையாக காணப்பட்டது. இவ் அறிக்கையில் இஸ்ரேலை தங்களுடைய எதிரியாக தெரிவித்ததோடு ஜிஹாத் எனும் புனிதப் போரின் மூலம் அவர்களுடைய ஆக்கிரமிப்பை அழிப்போம் என்றும் பாலஸ்தீனத்தில் இஸ்லாமியர்களுடைய தேசம் ஒன்று தான் இருக்க வேண்டும் என்றும் தெளிவாக கூறியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து அதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட அமைதிச் செயற்பாட்டிற்கு நேர் எதிராக ஹமாஸ் செல்ல விரும்புகின்றது. அத்தோடு ஹமாஸ் எதிர்த்த அந்த அமைதித்தீர்வு என்ன என்று நோக்குவோம்.

ஹமாஸ் உருவான காலகட்டத்தில் பாலஸ்தீனம் பல நெருக்கடியுடன் தொடர்ந்து கொண்டிருப்பதனால் சலிப்படைந்தவர்களும் அமைதியை விரும்பும் பொது மக்களும், நடுநிலையானவர்களும், இரு தரப்பினரும் ஏற்கும் சில தீர்வுகளை முன் வைத்தார்கள். அந்த வகையில் பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் என்ற நாடும் பாலஸ்தீன அராபியர்கள் அதிகம் வாழுகின்ற காஸா மேற்குக்கரை மற்றும் சில பகுதிகளை சேர்த்து சுதந்திர பாலஸ்தீன நாட்டை அமைக்கலாம் அதை பாலஸ்தீனியர்கள் ஆண்டு கொள்வார்கள் எனவும் கருத்துக் கொண்டிருந்தனர். இது போன்ற யோசனைகளின் மூலம் இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனியர்களும் போரிடாமல் தனித்தனி நாடுகளில் அவரவர்களின் ஆட்சிகளை அமைத்துக் கொண்டு நட்பாக சேர்ந்து வாழலாம் என்று சொல்லப்பட்டது. ஹமாஸ் உள்ளிட்ட அமைப்புக்கள் இதனை ஒப்புக்கொள்ளவில்லை.

ஹமாசைப் பொறுத்தவரை பாலஸ்தீனம் முழுவதும் இஸ்லாமியர்களுக்குச் சொந்தமான பூமி அதில் யூதர்களின் இஸ்ரேல் என்ற நாடு அமைந்ததே தவறு இப்போது அவர்களை அங்கீகரிப்பதற்கோ தங்களுக்கு சொந்தமான மண்ணில் கோடு கிழித்துப் பிரிப்பதற்கோ நாங்கள் சம்மதிக்க மாட்டோம் என்று தங்கள் அறிக்கையில் தெளிவாக கூறியிருந்தார்கள்.

பாலஸ்தீனம் என்பது ஒரு நாடு, ஒரே நாடு, அங்கே இஸ்லாமிய ஆட்சி ஒன்றுதான் அமைய முடியும். ஆக்கிரமிப்பு செய்துள்ள யூதர்களின் நாடான இஸ்ரேல் அழிக்கப்படவேண்டும். அதற்காகத் தான் நாங்கள் ஆயுதம் ஏந்துகின்றோம் என்று வெளிப்படையாகவே கூறிவிட்டார்கள் இதன் பின் துப்பாக்கி தூக்க ஆரம்பித்தார்கள். ஹமாஸின் நோக்கம் எது என நோக்கும் போது அகன்ற பாலஸ்தீனம் ஆகும். அதாவது மத்தியதரைக்கடல் தொடங்கி யோர்டான் நதி வரையிலான மொத்தப் பிரதேசமும் பாலஸ்தீன சாம்ராச்சியத்தின் கீழ் வர வேண்டும் எனவும் பிடிவாதமாக காணப்பட்டார்கள். அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய நோக்கத்தை ஹமாஸின் சின்னத்திலே தெளிவாக பார்க்க முடியும். உலக பிரபலமாகிவிட்ட சின்னத்தில் ஜெருசலேம் நகரத்தின் புகழ்பெற்ற குன்றுக் கோபுரம் மசூதி உள்ளது. அதற்கு நேர் மேலாக அகன்ற பாலஸ்தீன வரைபடம் அதனைச்சுற்றி அரைவட்ட வடிவில் இரண்டு பாலஸ்தீனக் கொடிகள் அவற்றில் "அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை அல்லாவின் தூதர் முகமது" எனும் வாசகங்களும் எழுதப்பட்டிருந்தது. மசூதிக்கு கீழே குறுக்காக வைக்கப்பட்டுள்ள இரண்டு வாள்கள் அவற்றிற்கு கீழே பாலஸ்தீனமென்றும் "இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம்" ஹமாஸ் என்றும் எழுதப்பட்டிருந்தது. இவ்வாறாக மசூதி, வரைபடம், வாள்கள் போன்றன பல்வேறு விடயங்களை வெளிப்படுத்துகின்றன.

ஹமாஸ் தனது அறிக்கையில் இஸ்ரேல் மட்டுமன்றி அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு, கிழக்கு நாடுகளையும் விரட்டியுள்ளது என்றே கூறலாம். ஹமாஸ் எதிர்பார்த்தது போலவே அவர்களது அறிக்கை பாலஸ்தீனியர்கள் மத்தியில் தாக்கத்தை உண்டாக்கியது. இத்தனை காலமாக அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வலியையும் வேதனையையும் எதிர்பார்ப்புக்களையும் தெளிவாக படம் பிடிக்கும் அறிக்கை ஹமாஸிற்கு பெரிய ஆதரவை தேடிக் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து சலிப்படைந்திருந்த மக்கள் ஹமாஸ் சொல்வதுதான் சரியான தீர்ப்புப்போல் இருக்கின்றது என்று சிந்திக்கத் தொடங்கினார்கள்.

ஹமாஸின் முதலாவது திட்டத்திற்கு வெற்றி யாதெனில் தங்களுடைய திட்டங்கள், கொள்கைகள், வழிமுறைகள் எல்லாவற்றையும் மக்களிடையே தெளிவாக முன்வைத்ததே ஆகும். அதனை அடுத்து ஹமாஸ் தனது திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்தது. இவர்களின் இவ்வாறான திட்டங்களுக்கு தடைபோட வேண்டும் என நினைத்த அமெரிக்கா முதல் வேலையாக ஹமாஸை தீவிரவாத இயக்கம் என்று அறிவிக்குமாறு இஸ்ரேல் அரசை வற்புறுத்தியது. அத்தோடு அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ மூலம் உலகம் முழுவதும் ஹமாஸ் ஆதரவாளர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்கள் என்று கண்டுபிடித்து அவர்களை கைதுசெய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஹமாஸ் ஆதரவாளர்கள் யார்? தலைவர்கள் யார்? ஹமாஸ் எங்கிருந்து இயங்குகின்றது? என்ற விடயம் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை அந்த அளவிற்கு ரகசியத் தன்மையோடு ஹமாஸ் இயங்கிக்கொண்டிருந்தது. மேலும் ஒரு தற்காப்பு ஏற்பாடாக இயக்கத்தின் கட்டமைப்பு அதில் உள்ள தனிநபர்கள் யாருக்கு என்ன பொறுப்புக்கள் போன்ற அனைத்து விடயங்களையும் தங்களுக்குள்ளே இரகசியமாக வைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஆரம்பகாலத்தில் ஹமாஸின் உறுப்பினர்கள் தங்களின் அடையாளங்களை வெளிப்படையாக கூறிக்கொள்ளாமல்தான் இயக்கப்பணிகளில் ஈடுபட்டார்கள். அவ்வாறே யாரை எங்கே தாக்கப் போகின்றோம், எப்படித் தாக்கப்போகின்றோம் என்று முடிவு செய்துவிட்டு முகத்தை சுற்றிலும் ஒரு கறுப்புத்துனியால் மூடிக்கொண்டு புறப்பட்டுச் செல்வார்கள். தாக்குதலை முடித்துவிட்டு வீட்டுக்கு திரும்பி அடுத்த திட்டம் தயாராகும் வரை அடுத்த அழைப்பு வரும் வரை பழையபடி தங்களின் வாழ்க்கையை பார்த்துக் கொண்டிருப்பார்கள். இப்படி எல்லாம் இரகசியமாக வைத்துக்கொள்வதில் ஹமாஸிற்கு இரண்டு இலாபங்கள் காணப்பட்டன. ஒன்று எதிரிக்கு குழப்பநிலை ஏற்படும் மற்றையது யார் பெரியவர், யார் சிறியவர், யாருடைய கட்டளைகளை யார் மதிக்க வேண்டும் என்று கவலைப்படாமல் சூழ்நிலைக்கேற்ப செயற்படுவது சுலபமாகின்றது.

இது தொடர்பாக இஸ்ரேல் நிலைப்பாட்டை நோக்கும் போது ஹமாஸ் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் என்று யாரைப் பார்த்தாலும் கைது செய்து சிறையில் அடைக்கும் படி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஹமாஸ் இயக்கத்தின் பாலஸ்தீன அரசியல் போக்கும் அதனுடைய எழுச்சி பற்றியும் நாம் நோக்குவது அவசியம்.

ஹமாஸினைப் பொறுத்த வரையில் படித்த புத்தி ஜீவிகளே இவ் இயக்கத்தினை ஆரம்ப காலம் தொட்டு நெறிப்படுத்தி வந்தனர். இவர்களின் வழிகாட்டலில் காத்திரமான எதிர்ப்பினை ஹமாஸ் இஸ்ரேலுக்கும் அமெரிக்க முதலான மேற்குலத்திற்கும் வெளிப்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் பாலஸ்தீன அராபியர்களது நியாயபூர்வமான எந்தவொரு கோரிக்கையினையும் இஸ்ரேலுக்கு மேற்குலகமும் சீர்தூக்கி ஆராய தவறிய சமயத்தில் ஆரம்பித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹமாஸின் யூதர்களுக்கு எதிரான தாக்குதல் ஐக்கிய நாடுகள் சபையினால் பாலஸ்தீனியர்களுக்கு உரித்தான தேசமென்று அடையாளப்படுத்தப்பட்ட மேற்குக்கரையினையும் காசாவினையும் இஸ்ரேல் தன்வசப்படுத்திய போது தான் குறித்த ஹமாஸ் இயக்கமானது உக்கிரமடையும் நிலை ஏற்பட்டது எனலாம்.

ஹமாஸ் போராளிகளைப் பொறுத்த வரையில் இஸ்ரேலிய இராணுவத்தினர் இஸ்ரேலிய பொதுமக்கள் என பாகுபடுத்தாமல் இஸ்ரேலியர்கள் அனைவர் மீதும் கடுமையான தாக்குதல்களை வெளிப்படுத்தி வந்தார்கள். இவர்கள் யூதர்கள் மீது குண்டு வெடிப்புக்களினையும் தற்கொலைத் தாக்குதல்களினையும் மேற்கொண்டு அவர்களது உயிர்களினை கணப்பொழுதில் அழித்தார்கள்.

1990களில் இஸ்ரேலுக்கு ஹமாஸ் ஒரு தீராத தலைவலி என்பதை உணரமுடிந்ததுடன் இஸ்ரேல் சார்பு நாடுகளும் ஹமாஸிற்கு அஞ்சின. எனவே இவ்வகையான அசுர பலத்துடன் பல்வேறு தாக்குதல்களினை நடாத்தி வருகின்ற ஹமாஸிற்கு பெயர் குறித்து ஒரு தலைவரோ அல்லது அவ் அமைப்பு சார்ந்த தகவல்களோ வெளிவராமை தான் ஹமாஸின் இன்று வரையிலான நிலைத்திருப்பிற்கு அடிப்படைக் காரணம் என அரசியல் ஆய்வாரளர்களினாலும் அளவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் குறித்த ஹமாஸ் இயக்கத்தின் தாக்குதல் திறனையும் எதிரிகளினையும் தந்திரங்களினையும் கைவசம் பெற்றிருந்த ஹமாஸின் சமூக அடைவும் பாலஸ்தீன மக்கள் மத்தியிலான செல்வாக்கும் உலகின் எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திற்கும் இல்லாத அளவு காணப்பட்டமையே ஹமாஸின் நிலைபேற்றிற்கு அடிப்படைக் காரணமாகும்.

பல்வேறுபட்ட சமூக யதார்த்தத்தோடும் இணைந்திருந்த ஹமாஸ் அமைப்பானது பிற்பட பாலஸ்தீன மக்களது பிரதிநிதிகளாக இஸ்ரேல் மற்றும் சர்வதேச அரசியல் களங்களிலும் கணிசமான செல்வாக்கினைச் செலுத்தியவர்களாகவும் காணப்படுகின்றார்கள். ஆரம்பங்களில் ஆயுத போராட்டங்களின் மூலம் தமது கோரிக்கையினை வலியுறுத்தி வந்தவர்கள் பின்பு அரசியரல் சித்தாந்தத்துக்குள் தம்மை இசைவாக்கிக் கொண்ட பொழுதும் அமைதி அரசியலில் நம்பிக்கையற்றவர்களாகவும் வன்முறை அரசியலை வெளிப்படுத்தி வந்துள்ளனர். ஹமாஸின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப்போராட்டம் குறித்து நோக்கினால் முக்கியமாக ஹமாஸினது ஆயுத வழிமுறை நாட்டத்துக்கு வரலாற்றில் இஸ்ரேலும் அமெரிக்க பிரித்தானிய உள்ளிட்ட மேற்குலகம் கற்பித்த கசப்பான உணர்வுகளே காரணம் என ஹமாஸ் தரப்பில் முன்வைக்கப்பட்டது.

இதைவிட இஸ்லாமிய அடிப்படை வாத சக்திகளும் மிதவாத நாடுகளுடனும் ஒரே நேரத்தில் உறவு வைத்திருப்பதுடன் அவற்றின் நிதி உதவியுடனேயே அரசியல் அதிகாரத்தினை ஹமாஸ் தக்கவைத்து வருகிறது. ஈரான், சவுதிஅரேபியா என்பவற்றுடன் சிரியா, ஜோர்தான் என்பனவும் நிதி உதவியையும், ஆயுத தளபாடத்தினையும் வழங்கி வருகின்றது. ஹமாஸின் முதலாவது அரசாங்கத்தினை அமெரிக்க, இஸ்ரேல் நாட்டின் பிரச்சார வாயிலாக நிதி உதவிகளை நிறுத்த முயன்ற போதும் ஈரானும், சிரியாவும் வெளிப்படையாக நிதி உதவி செய்தன.

இதில் சவுதி அரேபியாவுக்கும் அதிக பங்கு இருந்தது. இவ்வாறு பாலஸ்தீன மீளுருவாக்கத்தையும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தையும் பலப்படுத்துவதில் காத்திரமான பங்கெடுத்து வரும் அமைப்பாக ஹமாஸ் காணப்படுகிறது.

ஹமாஸின் எழுச்சியில் மற்றொரு அம்சமாக ஹமாஸின் அரசியற் துறையினர் மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கையாக தனியான ஊழல் ஒழிப்பு பிரிவினை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் அரச துறையினரது ஊழல் ஒழிப்பு பிரிவினது செயற்பாடுகளை நாடளாவிய ரீதியாக விஸ்தரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்க விடயம் எனலாம். இவ்வகையான பின்னணியில் தனது அரசியல் பலத்தினை வளர்த்து வந்த ஹமாஸ் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யசீர் அர·பாத் இறந்ததைத் தொடர்ந்து வந்த வெற்றிடத்தினையிட்டு நிரப்பி பலம் பொருந்திய அரசியல் சக்தியாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு பின்பு நடந்த இடைத் தேர்தல்களிலும் ஹமாஸ் கணிசமான வெற்றிகளைப் பெற்று வளர்ச்சியடைந்து வந்தது.

ஹமாஸ் போராட்டம், சமூகசேவை, அரசியல் என மூன்று தடங்களிலும் பயணித்த போதிலும் ஒவ்வொரு துறைகளிலும் அவர்களது செயற்பாடுகளும் முற்போக்கு சிந்தனைகளும் உபாயங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள ஏனைய போராட்ட இயக்கங்களினை விட தனித்துவமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹமாஸின் பிரிவுகளும் அதன் செயற்பாடுகளும்

ஹமாஸின் இரண்டு பிரிவுகளாவது இயங்கியது ஒன்று அரசியல் பிரிவு இன்னொன்று இராணுவப் பிரிவு.

அரசியல் பிரிவில் அரசியல் என்று பொதுவாக சொல்லப் பட்டாலும் இந்தப் பிரிவில் பல்வேறு விடயங்கள் அடங்கியிருந்தது. பாலஸ்தீனப் பிரச்சனை உள்ளிட்ட சர்வதேச விவகாரங்கள் பலவற்றில் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடுகளை தீர்மானிப்பதில் தொடங்கி ஹமாஸின் செய்தியை மக்களிடம் கொண்டு செல்வது சமூகசேவை பணிகள் வரை காணப்பட்டது. ஹமாஸ் தொடங்கப்பட்ட போது இந்த அரசியல் பிரிவிற்கு பொறுப்பானவர்களாக இருந்தவர்கள் முக்கிய நிறுவுனராகிய யாசுஷினும் அவரது நெருங்கிய தோழர்களான அப்துல் அசீஸ் அல்ரண்டிசஸீ, இப்ராஹிம் அல்யாசர், மெஹ்மூத் ஸஹர் க்ஷானப் ஆகியோரும் ஆவார்.

இன்றைக்கு ஹமாஸ் என்றாலே அதன் இராணுவம் தான் எல்லோருக்கும் நினைவிற்கு வருகிறது. ஆனால் ஆரம்ப காலத்தில் மக்களுக்குத் தேவையான பல விதமான சேவைகளைச் செய்திருக்கிறது. ஹமாஸ் மற்றும் அதன் முன்னோடிகளான இஸ்லாமிய காங்கிரஸ், இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு போன்றவை குறிப்பிடத் தக்கவையாகும்.

அரசியல் இராணுவம் ஆகிய இரு முக்கிய பிரிவுகளோடு ஹமாஸில் வேறு பல துணைப் பிரிவுகள், உதவி அமைப்புக்களும் இருக்கலாம் என்று தகவல்கள் அவ்வவ்போது வெளியாகியுள்ளன. ஆனால் இந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பாளர்களாக இயங்குகிறவர்கள் யார் என்பது பற்றியும் இவை ஒவ்வொன்றிலும் எத்தனை உறுப்பினர்கள் இருக்கக்கூடும் என்றெல்லாம் எந்தத் தகவலும் இல்லை.

இன்னும் சொல்லப்போனால் ஹமாஸில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றே யாராலும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. வெளியில் இருந்தோ உள்ளிருந்தோ அதற்கு ஆதரவு அளிக்கிறவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையும் தெரியவில்லை பத்தாயிரக் கணக்கில் உறுப்பினர்களைக் கொண்ட இயக்கம் என்றுதான் குத்துமதிப்பாகச் சொல்கிறார்கள்.

இஸ்ரேலிய அரசின் வெளியுறவுத் துறைத்தகவல் பிரிவு வெளியிட்டிருக்கிற ஓர் அறிக்கை மத அடிப்படையிலும் பணிகள் செயற்பாடுகளின் அடிப்படையிலும் ஹமாஸின் கட்டமைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கிறது.

இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஹமாஸின் சில பிரிவுகள்

- தாவா (Dawa) எனும் அடிப்படைப் பிரிவு
- வன்முறைப்பிரிவு / தாக்குதல் பிரிவு
- அமன் (Aman) என்னும் பாதுகாப்புப் பிரிவு
- பதிப்பகப் பிரிவு / வெளியீட்டுப் பிரிவு

இதில் முதலாவது பிரிவான தாவா என்ற சொல்லுக்கு நேரடியான அர்த்தம் என்று பார்த்தால் சொற்பொழிவு ஆற்றல் அல்லது அழைத்தல் என்று பொருள் வரும்.

ஹமாஸின் உடனடி இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்தும் இந்தப் பிரிவின் முக்கியப் பொறுப்புக்கள் இயக்கத்தின் அவ்வப்போதைய செய்திகளை பாலஸ்தீனிய மக்களிடையே கொண்டு சேர்ப்பது புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது இயக்கச் செயற்பாடுகளுக்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நன்கொடை வசூலிப்பது தேவை உள்ளவர்களுக்கு நிதி உதவிகள் சரியாக விநியோகிக்கப்படுகின்றதா என்பதைக் கண்காணித்து உறுதி செய்வது போன்றன இதன் பணிகளாகும்.

தாவாவில் பல சிறிய உட்பிரிவுகளும் உண்டு. இவை ஒவ்வொன்றும் மக்கள் நலம், கல்வி, சுகாதாரம் போன்ற ஒவ்வொரு சேவைக்கும் பொறுப்பேற்கின்றன. மேலும் இதன் முக்கியமான கடமையாக பாலஸ்தீன அராபியர்களுக்கு தேவையான நிதி உதவிகளைச் செய்வது தான் வசதி உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குத் தானம் செய்வது என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய பாலஸ்தீன விடுதலை இயக்கங்களோடு ஒப்பிடுகையில் ஹமாஸின் இந்தச் சேவைகள் பரவலான கவனத்தையும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தபோதும் இதிலும் சர்ச்சைகள் எழாமல் இல்லை. இந்த உதவிகள் அனைத்தும் ஹமாஸ் இயக்கங்களோடு தொடர்புடையவர்களுக்குத்தான் போய் சேர்ந்தன என்ற குற்றச்சாட்டும் காணப்பட்டது. ஹமாஸின் உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்கு இந்தச் சேவை நிறுவனங்களின் உதவிகளில் முன்னுரிமை காட்டுவதில்லை. ஆகவே இவர்கள் மக்களுக்கு உதவி செய்கிறோம் என்கின்ற போர்வையில் தங்களது உறுப்பினர்களுக்குப் பணம் விநியோகிக்கின்றார்கள் எனறு குற்றம் சாட்டப்படுகிறது.

தாவா பிரிவினர் பற்றிப் பரவலாக எழுந்திருக்கும் இன்னொரு சந்தேகம் இயக்கத்திற்காக தற்கொலைப் படையினரைத் தேர்ந்தெடுத்து தயார்ப்படுத்துவதெல்லாம் இவர்கள்தான் எனவும் கூறப்படுகின்றது.

பாலஸ்தீன விடுதலைக்கான ஜீஹார் போராட்டத்தில் மரணமடைகின்ற இஸ்லாமியர்களை தியாகிகள் என்று பட்டம் சூட்டிக் கௌரவிப்பது ஹமாஸின் வழக்கமாகும். ஹமாஸின் தற்கொலைப் படையில் சேர்ந்து தான் உயிரிழப்பின் மூலம் எதிரி இலக்கு ஒன்றையும் தாக்கி அழிக்கின்றவர்கள் அனைவரும் புனிதப்போர்த் தியாகிகள் என்கின்ற செய்தியை பாலஸ்தீனிய இளைஞர்களிடம் கொண்டு செல்வதை அவசியமாக நினைத்து ஹமாஸ் இதற்கு தாவா பிரிவு எனும் பெயர் கொண்டு பயன்படுத்தப்பட்டதாக தெரிகின்றது.

ஹமாஸின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள், மசூதிகள் ஆகியவற்றில் இது பற்றிய பொதுக் கூட்டங்கள் கருத்தரங்குகள் தனிப்பட்ட விவாதங்கள் போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்வது இவற்றில் உணர்ச்சி மயமான சொற்பொழிவாளர்களை பேசச் செய்து இளைஞர்களை கவரச் செய்து ஹமாஸ் இயக்கத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்கின்ற ஆர்வத்தை தூண்டியது. இதனால் இந்த இளைஞர்களில் சிலர் நியமாகவே ஹமாஸின் கோட்பாடுகளினால் ஈர்க்கப்பட்டு அந்த இயக்கத்தில் சேர முன் வந்தார்கள் மேலும் சிலர் நாம் ஹமாஸில் சேர்வதன் மூலம் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்ல காலம் பிறக்கும் என்று கணக்குப் போட்டார்கள். ஏனெனில் ஹமாஸில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்கின்றவர்களின் பெரும்பாலானவர்களுக்கு தாராளமான நிதி உதவிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.

தாவா பிரிவை அடுத்து வன்முறைப்பிரிவு அல்லது தாக்குதல் பிரிவு அல்லது அதிர்ச்சிப்படை என இஸ்ரேலிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த இராணுவப்பிரிவின் முழுப்பெயர் அஜ்ஜிதீன் அல்காஸம் படை என்பதாகும். ஹமாஸ் தொடங்கப்பட்டதி லிருந்தே அதன் உறுப்பினர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வன்முறைச் சம்பவங்கள் இஸ்ரேலிய இலக்குகளின் மீதான தாக்குதல்கள் என்று சிறிய பெரிய கலாட்டாக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் ஹமாஸின் ஒரு முக்கிய பகுதியாக அல்காஸம் இராணுவப்பிரிவு உருவாவதற்கு சில ஆண்டுகள் பிடித்திருந்ததென்றே கூறமுடியும்.

அல்காஸம் பிரிவு எப்போது உருவாக்கப்பட்டது என்பது பற்றி நிச்சயமான தகவல்கள் எதுவும் இல்லை. ஆனால் 1990 களின் முற்பகுதி என்பதை மட்டும் சொல்லலாம். இஸ்ரேல் மீது போர் தொடுப்பது என்று முடிவாகிவிட்ட பிறகு அதற்கென்று தனியாக ஒரு இராணுவப்பிரிவு இருக்கவேண்டும் எனும் எண்ணத்தில் தான் இந்தப்பிரிவு தோன்றியது.

இந்தப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முக்கிய நோக்கங்களாக

1. பாலஸ்தீனியர்கள் அராபியர்கள், முஸ்லீம்களிடையே ஜீ"ார் உணர்வை தூண்டுவது.

2. யூதர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து பாலஸ்தீனியர்களையும் அவர்களுடைய நிலங்களையும் காப்பாற்றுவது.

3. ஏற்கனவே யூதர்கள் ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீனிய நிலங்களை மீட்பது

1991ல் ஜகரியா வாவித் அகேல் என்ற ஹமாஸ் உறுப்பினரால் காஸா பகுதியில் தொடங்கப்பட்ட தாக்குதல் படை தான் ஹமாஸின் முதலாவது அதிகார பூர்வமான இராணுவப் பிரிவு என்று சொல்கிறார்கள். இந்தப்பிரிவு இஸ்ரேலிய அரசு இராணுவத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாக இருப்பவர்களை கண்டறிவது தண்டிப்பது ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் ஹமாஸின் மிகச் சிறிய பகுதியாகத்தான் இந்த இராணுவப்பிரிவு இருந்தது. 1994ம் ஆண்டுக்குப் பின்புதான் இந்தப்பிரிவின் முக்கியத்துவம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது இராணுவம் என்று சொல்லப்பட்டாலும் தொடக்கத்தில் சிறிய தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலும் இஸ்ரேலிய படை வீரர்களோடு கைகலப்பு, கத்தியால் குத்துதல், அவர்கள்மீது வாகனங்களை ஏற்றிக் காயப்படுத்துதல் இப்படி சிறிய தாக்குதல்களை கடந்து பெரிய தாக்குதல்களை திட்டமிட்டு நிறைவேற்ற ஆரம்பித்தது. துப்பாக்கி வெடிகுண்டு என்று அவர்களுடைய ஆயுதங்களில் தீவிரம் அதிகரிக்க பாரிய தாக்குதல்களை ஆரம்பித்தது.

அல்காஸம் இராணுவப் பிரிவின் இந்த மாற்றத்திற்கு முதன்மைக் காரணமாக இருந்தவர் ஆரம்பகாலத் தலைவர்களில் மிக முக்கியமானவர் யாகியா அயாக்ஷ் ஆவார். இவர் 1987ம் ஆண்டு இறுதி ஹமாஸ் தொடங்கப்பட்ட போது யாஹியா அயாக்ஷின் சிறிய வயது போர் வீரனாகக் காணப்பட்டார். அக்காலத்திலே மின்னியல் துறையில் பட்டம் பெற்றிருந்தார். அயாக்ஷ் அடுத்த ஓரிரு ஆண்டுகளில் ஹமாஸின் கொள்கைகளினால் இலகுவாக ஈர்க்கப்பட்டு அதன் இராணுவப்பிரிவில் உறுப்பினராகச் சேர்ந்தார். ஹமாஸின் இராணுவப் பிரிவில் வெடிகுண்டுகள் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். அயாக்ஷ், பாலஸ்தீனப் பகுதிகளில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு சக்திவாய்ந்த குண்டுகள் தயாரிப்பதில் நிபுணராகவும் இருந்ததுடன் இவர் இஸ்ரேலியர்கள் மீது முறையான தற்கொலைப் படைத் தாக்குதலை அறிமுகப்படுத்தினார். இதன் வழிகளில் இஸ்ரேலிய இலக்குகளுக்குப் பெரிய அளவு சேதங்களை உருவாக்க முடியும் என்று தெரிந்துகொண்ட பிறகு ஹமாஸின் தாக்குதல்களின் எண்ணிக்கையும் வேகமும் அதிகரித்தது. அந்த விதத்தில் ஹமாஸின் இராணுவச் சரித்திரத்தில் இந்தக் காலகட்டத்தை ஒரு முக்கியமான திருப்பு முனையாகக் கூறிக்கொள்ள முடியும். வெடிகுண்டுகளைத் தயாரித்துப் புகழடைந்த அயாக்ஷுக்கு மரணமும் அதே வடிவில் வந்தது. 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரியில் இஸ்ரேல் அனுப்பிய ஒரு தந்திரமான வெடிகுண்டால் கொல்லப்பட்டார் அயாக்ஷ் அவர்கள்.

அல்காஸம் பிரிவின் தாக்குதல் இலக்குகள் பெரும்பாலும் இஸ்ரேலியர்கள் இலக்காக இருந்தனர். இராணுவ வீரர்கள் பொது மக்கள் எனறெல்லாம் அவர்கள் வித்தியாசம் பார்ப்பதில்லை. இஸ்ரேலுக்குள் இருக்கின்ற எல்லோரும் எங்கள் எதிரிகள் தான் என்ற வெளிப்படையாகவே சொல்லி விட்டார்கள். ஆகவே இஸ்ரேல் எல்லைக்குள் இருக்கிற எல்லோரையும் தாக்கி அழித்தார்கள்.

மேற்கூறிய முக்கிய பிரிவுகளை தவிர இவற்றுக்கு உதவியாக வேறு சில சிறிய பிரிவுகளும் ஹமாஸில் உண்டு. உதாரணமாக பாதுகாப்புப்பிரிவு, மதப்பிரிவு, உளவுப்பிரிவு மற்றும் வெளியீட்டுப்பிரிவு போன்றனவாகும்.

அமன் என்ற பெயரில் அழைக்கப்படும் ஹமாஸின் பாதுகாப்புப் பிரிவினுடைய முக்கிய பணி இஸ்ரேலியர்களுக்கு ஆதரவாக இயங்குபவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களை கண்காணிப்பது அவர்களைப்பற்றிய விபரங்களை சேகரிப்பது. உளவுப்பிரிவு என்று நோக்கின் உளவுப்பிரிவின் பணி ஹமாஸ் இராணுவத்திற்கு தேவையான புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவது. வெளியீட்டுப்பிரிவு ஹமாஸின் கொள்ளைகளை விளக்கும் விபரிக்கும் துண்டுப்பிரசுரங்கள், புத்தகங்கள், இதர வெளியீடுகளை தயாரித்து வெளியிடும். மதப்பிரிவு பலஸ்தீனியர்களின் இஸ்லாம் கோட்பாடுகள் நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றுவதற்கு ஊக்குவிக்கின்றது.

இப்படி பல்வேறு அமைப்புக்கள் ஹமாஸின் பிரிவுகளாகவும் உட்பிரிவுகளாகவும் பட்டியலிடப்பட்டாலும் கூட இவை அனைத்தும் இணைந்த ஒரே சக்தியாகத்தான் ஹமாஸ் இயங்குகின்றது என அதன் தலைவர்கள் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

எனவே மேற்கூறிய விடயங்களின் பிரகாரம் ஹமாஸின் பிரிவுகளும் அதன் செயற்பாட்டுத் தன்மை பற்றியும் விளங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹமாஸ் இயக்கத்தின் மீதான நெருக்கடி

ஹமாஸ் எனும் அமைப்பானது பாலஸ்தீன மக்கள் மத்தியில் செல்வாக்குமிக்கதாக ஆரம்பகாலத்தில் காணப்பட்டது. ஆனால் பிற்பட அவ் அமைப்பு வீழ்ச்சி அடைய அல்லது தோல்வியடைய தொடங்கியது. அவ்வமைப்பு வீழ்ச்சியடைவதற்கான காரணங்களை நோக்குவோம்.

* ஹமாஸ் அமைப்பானது ஆரம்பத்தில் ஒரு சமூக சேவைகளை செய்யும் ஒரு அமைப்பாக காணப்பட்டது. ஆனால் பிற்பட ஷேக் அகமது யாசின் தலைமையின் பின் இது ஒரு போராட்ட இயக்கமாக உருவெடுத்தது. அதாவது சமூக நல பணி முகத்தை கழற்றிவிட்டு முழுநேர குண்டுவெடிப்பு இயக்கமாக மாறியது.

* தலைமைத்துவங்கள் அடிக்கடி மாற்றப்பட்டதாலும் பல்வேறு தலைவர்களையும் கொண்டதாக காணப்பட்டதால் இவர்களது கொள்கையில் இஸ்திர தன்மை இன்றிப் போனது.

* ஹமாஸின் தலைவர்கள் இரகசியமாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டிருந்தாலும் இஸ்ரேலியர்களால் ஹமாஸின் தலைவர்கள் சிலர் கொல்லப்பட்டனர். இதுவும் ஹமாஸின் வீழ்ச்சி நிலையைக் காட்டுகிறது. ஷேக்அகமதுயாசின், ரண்டிஸி ஆகிய தலைவர்கள் ஒரே ஆண்டில் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டதைக் குறிப்பிடலாம்.

* ஹமாஸ் அமைப்பின் தாக்குதல்கள் இஸ்ரேலிய பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் என்ற வேறுபாடு இன்றி அனைவர் மீதும் தாக்குதல்கள் மேற்கொண்டதால் இதன் செயற்பாடு அனைவராலும் ஏற்க முடியாததாக இருந்தது. இஸ்ரேலியர்களின் பேரூந்துகள், பள்ளிக்கூடங்கள், வழிபாட்டிடங்கள் என பொது இடங்களில் ஹமாஸின் தாக்குதல்கள் இடம்பெற்றன. இது பின்நாளில் அது வீழ்ச்சியடைய வழிவகுத்தது.

* ஹமாஸின் தாக்குதல்களால் கோபமுற்ற இஸ்ரேலியர்கள் தமது வெறுப்பை பாலஸ்தீன மக்கள் மீது காட்டினார்கள். அதாவது பாலஸ்தீன மக்கள் மீது தமது தாக்குதல்களை மேற்கொண்டனர். 1994ல் ஹெப்ரான் என்ற இடத்தில் தொழுகையில் ஈடுபட்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 பாலஸ்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனியர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கு ஹமாஸ் தான் காரணம் என உணர்ந்த மக்கள் ஹமாஸினை வெறுத்தனர்.

* ஹமாஸின் தலைவரான ஷேக் அகமதுயாசின் இறந்த பின் ஹமாஸின் செயற்பாடுகள் ஓரளவு வீழ்ச்சியுற்றது. அதாவது இவர் அரசியல், இராஜதந்திரம், இராணுவ உத்திகள் போன்ற அனைத்திலும் வல்லுனராக இருந்தார் பிற்பட வந்த தலைவர்கள் அரசியல் ரீதியில் மட்டும் வல்லுனராக இருந்தனர். இதனால் போரில் சரியான தந்திரோபாயங்களை சிறப்பாக பின்பற்றமுடியவில்லை. இதும் வீழ்ச்சியை தழுவ வழிவகுத்தது.

* ஹமாஸிற்கு ஆதரவு வழங்கிய நாடுகளுக்கெல்லாம் இஸ்ரேலும் அமெரிக்காவும் நெருக்கடிகளைக் கொடுத்து அந்தந்த நாடுகளில் செயற்பட்ட ஹமாஸ் அமைப்பின் செயற்பாடுகளை தடைசெய்ய தொடங்கிறது. ஹமாஸிற்கு நிதியுதவி வழங்குவதையும் தடைசெய்தது இது அமைப்பை பொருளாதார ரீதியாக பலவீனம் அடைய செய்தது.

* அரபு வசந்தத்தின் பின் ஈரான், சிரியா, ஆகிய நாடுகளுடன் ஏற்பட்ட முறுகல் நிலை ஹமாஸின் வீழ்ச்சி நிலையை மேலும் தூண்டின. அதாவது 2011ம் ஆண்டு உருவான சிரிய உள்நாட்டு போரில் ஹமாஸ் சின்னி முஸ்லீம்களுக்கு சார்பாக செயற்பட்டதால் ஈரான் ஹமாஸிற்கான நிதியுதவியை நிறத்தியது.

* 2006 ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் 132 நாடாளுமன்ற தொகுதிகளில் 76 தொகுதிகளை கைப்பற்றிய போதும் ஹமாஸின் சார்பின் பிரதமராக பதவி ஏற்கப் போகின்றவரை சுட்டிக்காட்டதவறியது.

* அமெரிக்கா, இஸ்ரேல், எகிப்து ஆகிய நாடுகள் ஹமாஸிற்கு எதிராக திரும்பியமை எகிப்தில் சாதகமற்ற ஆட்சி நிலைகள் ஹமாஸை ஒழித்துக்கட்ட அமெரிக்காவினால் ப:.பதாவுக்கு பணமும் ஆயுதமும் கொடுத்து உதவியமையை குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூன்று புறமும் நிலமும் ஒரு புறம் கடலையும் கொண்ட காஸாவில் இருந்து செயற்படும் ஹமாஸிடம் ஒரு கடற்படை கூட இல்லை. இது அதனை போர் ரீதியாக பல இழப்புக்களை ஏற்பட வைத்தது.

  இன்று ஹமாஸ் இஸ்ரேலியரின் நடவடிக்கைகளுக்கு ஓரளவு இசைந்து செயற்படுகின்றது. அதாவது சமீப காலமாகத் தனது தாக்குதல் நடவடிக்கைகளை கொஞ்சம் குறைத்துக் கொண்டிருப்பதாகக் தெரிகிறது..

* ஹமாஸ் எனும் அமைப்பு இஸ்ரேலினால் பணம் கொடுத்து தோற்றுவித்து வளர்த்தது எனும் கருத்து பிற்பட உருவானது. அதாவது பி.எல்.ஓ வினை அழிக்கும் நோக்கில் இஸ்ரேல் ஹமாஸினை உருவாக்கியது எனவும் கூறப்படுகிறது. ஹமாஸ் பி.எல்.ஓ வுடன் இணையாமல் தனித்து செயற்பட்டமையை குறிப்பிடலாம்.

* இவ் அமைப்பானது மதம் சார்ந்ததாக காணப்பட்டது அதாவது இஸ்லாமியர்களை மட்டும் முதன்மைப்படுத்தியதாகவும் ஏனையவர்களை புறக்கணிக்கும் வகையில் இவ் அமைப்பு செயற்பட்டது. இஸ்லாமிய கோட்பாடுகளால் அனுமதிக்கப் படாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை தண்டித்தது

* 2005ம் ஆண்டு காலப்பகுதியில் பாலஸ்தீனத்தின் ஜனாதிபதியாக இருந்த மம்முத் அப்பாஸ் ஹமாஸின் செயற்பாடுகளுக்கும் தாக்குதல்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்தார். போரை விட்டு விடுமாறு அவர்களை வலியுறுத்தினார் அந்தவகையில் இது தொடர்பாக தொடர்ந்து சிறப்பாக செயற்பட முடியவில்லை.

எனவே மேற்கூறியபடி இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனை ஹமாஸ் எனும் இயக்கத்தின் தோற்றம், தோற்றத்திற்கான காரணம், அதன் எழுச்சிப் போக்கு மற்றும் அதன் பிரிவுகளும் செயற்பாடுகளும் இறுதியாக ஹமாஸின் வீழ்ச்சி போன்ற விடயங்கள் பற்றி ஆராய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# இன்டிபாடா[13]

சர்வதேச அறிவியலில் இஸ்ரேல் - பாலஸ்தீன முரண்பாடு என்பது கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாக நீடித்த ஒன்றாகும் என்பது வெளிப்படையான அம்சமே. இத்தகைய முரண்பாடானது இவ்விரு நாடுகளுக்கிடையே தேசிய இன அடிப்படையில் பல நூற்றாண்டு காலப் பிணைப்பாக மட்டுமன்றி பாரம்பரிய வாழ்விடம் என்ற அடிப்படையிலும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அத்துடன் இம் முரண்பாட்டின் பின்னணியில் பிராந்திய பிரச்சினையும் சர்வதேச பிரச்சினையும் முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது.

## முதலாவது இன்டிபாடா

இவ் பிரச்சினையின் ஓர் முக்கிய நிகழ்வாக அல்லது திருப்பமாக யசீர் அரபாத்தின் எழுச்சியும் அதனோடு இணைந்த பி.எல்.ஓ என்ற பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆரம்பமும் அமைகிறது. இதனை சற்று நோக்குதல் அவசியமாகும். காரணம் இவ் இரண்டு சம்பவங்களினூடாகவே இன்டிபாடா என்கின்ற ஒரு நிகழ்வு ஏற்பட்டது என்பதனை மறந்து விடலாகாது.

இவ்வகையில் எகிப்தின் முன்னாள் தலைவர் நாசரின் பின்னணியில் 1964ம் ஆண்டு பி.எல்.ஓ உருவாக்கப்பட்டது. அரபுக்களின் பிரச்சனைகளில் தன்னை முக்கிய தலைவராக

---

[13] எஸ்.சுரேகா (உதவி விரிவுரையாளர்) பி.தனுசிகா ரி.விஜயராஜ் ஐ.டோறஸ்தீபன் கே.ரஜீவன் ஆகிய மூன்றாம் வருட அரசறிவியல் துறை மாணவர்களால் முன்வைக்கப்பட்ட அளிக்கையின் தொகுப்பு-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலைப்படுத்துவதே அவரின் விருப்பமாக இருந்தது. அரபு மக்கள் அனைவரையும் இணைத்து ஐக்கிய அரபு எனும் ஒரே நாடாக்க வேண்டுமென்பதே அவரின் விருப்பமாக இருந்தது. இதனோடு இணைந்தவகையில் 1964 அளவில் அரபு மாநாடொன்றை நாசர் நடத்தினார். இந்த மாநாட்டில் உருவான அமைப்பே பாலஸ்தீன விடுதலை இயக்கமாகும். பாலஸ்தீனம் அரபு மக்களின் சுதந்திர நாடாக வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். இந்த அமைப்புக்கு யசீர் அரபாத் தலைமை தாங்கினார்.

இந்நிலையில் பி.எல்.ஓ இயக்கமானது தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது செயல்பாடு முன்னெடுக்கத் தொடங்கியது. அவ்வகையில் இஸ்ரேல் மீது பல்வேறு தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கியது. இவ்வாறான தாக்குதல்களில் ஒன்றாக வெகுஜன போராட்டம் அமைந்திருந்தது. சகல பாலஸ்தீனியர் இஸ்ரேலுக்கு எதிரான மன உணர்வுடனேயே இருந்தனர். இந்நிலையில் அவர்களின் போராட்ட வடிவம் இன்னுமொரு பரிமாணத்தை 1987 இல் அடைந்தது. இதுவே இன்டிபாடா அதாவது மக்கள் எழுச்சி என அழைக்கப்பட்டது.

இன்டிபடாவிற்கான காரணமாக இது இல்லா விட்டாலும் கூட தூண்டுகோலாகஅமைந்தது என அரசியல் விமர்சகர்களால் குறிப்பிடப்படுகிறது. அதாவது அப்போதைய இஸ்ரேலின் பிரதமராக இருந்து பின்னர் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்து சிமென் பெரேஸ் ஜோர்டான் அதிபருடன் லண்டனில் ஓர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார். முதல் சந்திப்புக்கு பிறகு அதை உலக மாநாடாக மாற்ற வேண்டும் எனவும் தீர்மானித்திருந்தார். ஆனால் முதல் சந்திப்புக்கு பின்னால் அகில உலக மாநாட்டிற்கு பி.எல்.ஓ வைசேர்க்கவில்லை என்பதுடன் பெயஸ்க்கு பின்னர் பிரதமரான ஷரோன் உலக மாநாட்டினைக் கூட்ட விரும்பவில்லை. அதனால் பெரஸ், ஜோர்டான் அரசரோடு செய்து கொள்ள விரும்பிய ஒப்பந்தம் நிறைவேறவில்லை. இதற்குப் பிறகு 1987 இல் நடந்த முதல் பாலஸ்தீன எழுச்சியில் பாலஸ்தீனியர்களும் இஸ்லாமியர்களும் உயிர் இழந்தனர்.

முதலாவது இன்டிபாடாவின் தொடக்க நிகழ்வாக ஒரு விபத்து காணப்பட்டது. காஸாவில் ஓர் இஸ்ரேலியரின் வாகனமும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலஸ்தீனின் வாகனமும் மோதிக் கொண்டதில் 4 பாலஸ்தீயர்கள் உயிரிழந்தனர். முதலில் இது ஒரு விபத்து எனப்பட்டது. ஆனால் விரைவிலேயே காசாவில் கொல்லப்பட்ட தன் சகோதரனின் இறப்பிற்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே ஓர் இஸ்ரேலியன் இதை செய்ததாக செய்தி பரவியது.

இந்தக் கலவரமானது வெஸ்ட்பேங்க் மற்றும் எருசேலமிற்கு பரவியதுடன் இஸ்ரேல் அரசானது மேலும் 3 மடங்கு இராணுவத்தை அங்கு இறக்கியது. பாலஸ்தீன மக்கள் ஏற்கனவே இராணுவம் மீது ஆத்திரம் கொண்டிருந்தமையால் இது இன்டிபாடாவானது. மேலும் தீவிர மாக பரவியதுடன் இதனைத் தடுக்க சாலையில் செல்லும் அரேபியர் களின் வாகனங்கள் சோதனை இடப்பட்டன. முஸ்லீம்கள் அல் - அக்ஸாம மசூதியில் பிரார்த்தனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. எருசலேம் முஸ்லீம்கள் மசூதிக்கு செல்லும் போது பரிசோதிக்கப் பட்டனர். இவர்கள் இவ்வாறு என்னதான் செய்தாலும் இவ் எழுச்சிப் போராட்டம் ஓயவில்லை. இதில் 1987 டிசம்பர் மாதம் மட்டும் 5 குழந்தை உட்பட 22 பாலஸ்தீனியர்கள் இறந்தனர். இஸ்ரேலில் 56 வீரர்களும் 30 சாதாரணம் குடிமக்களும் காயம் அடைந்தார். எனினும் ஒருவருட காலத்தில் கல்லால் அடிபட்டு 160 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

அத்துடன் "துனிக்ஷியாவின் தலைநகர் துனிக்ஷில் இருந்து கொண்டு பாலஸ்தீன எழுச்சியை நடத்தி வந்த செயலாளரான அபுஹிகாடை இஸ்ரேல் அரசு அவரின் மனைவி, மகள் முன்னிலையில் கொலை செய்ததுடன்" ஹமாஸ் செயற்பாட்டாளர்களையும் கைது செய்து பாலஸ்தீனியர்களை பலவீனப்படுத்த எண்ணியது. எனினும் எழுச்சி நிற்கவே இல்லை.

மேலும் கற்களையும் தம் கைகளில் அகப்படும் பொருட்களையும் கொண்டு இஸ்ரேலிய இராணுவத்தின் மீது தாக்குதல் நடாத்தினார். அரபாத்தினைத் பொறுத்தவரை இதனை ஒரு வகையில் இஸ்ரேலால் படுகொலை செய்யப்பட்ட பாலஸ்தீனியர்களின் மரணச்சடங்கை முடித்துக் கொண்டு அந்த மக்களைப் பயன்படுத்தி இஸ்ரேலியப் படைகள் மீது கற்களை வீசினார்கள். இதனைத் தொடர்ந்தே இன்டிபாடா ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை யசீர் அரபாத் குறிப்பிடுகின்ற போது "இஸ்ரேல் என்கின்ற சிறிய தேசத்தை வேரோடு அழித்துவிட்டு அகன்ற பாலஸ்தீனத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதற்காக நாங்கள் திட்டம் திட்டுகின்றோம். இதில் எந்தவித ஒழிவு மறைவுமில்லை. ஆயுதங்கள் மூலம் அச்சமூட்டுவது தவிர்க்க முடியாது. இன மோதல்கள் மூலம் கலவரம் மூட்டுவோம். யூதர்களை தூங்கவிடமாட்டோம். ஜெருசலேம் உட்பட இஸ்ரேல் எங்களிடமிருந்து அபகரித்த அனைத்தையும் திரும்ப பெறாமல் ஓயமாட்டோம்" என்றார்.

இந்த இன்டிபாடா என்ற எழுச்சி போராட்டங்களை மக்கள் மத்தியிலிருந்து எழுவதற்கான உந்துதலையும் எண்ணத்தையும் அரபாத் பாலஸ்தீனியர் மீது பரப்பினர். இன்டிபாடா என்ற அரபுச் சொல்லின் விளக்கமாக எழுச்சி, பொங்கி எழுதல், உசுப்பிப் பார்த்தல் என்பதாக உள்ளதுடன் இஸ்ரேலிய அரசையும் இராணுவத்தையும் உசுப்புதலே இதன் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

இந்தவகையில் 1987ம் ஆண்டு ஆரம்பமான இவ் இன்டிபாடாவின் தீவிரமானது மிகவும் அதிகமாக காணப்பட்டதுடன் இதில் இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீன ஜிகாத் போராளிகள் 7 பேரை சுட்டுக் கொன்றது. இதனை அடுத்து பாலஸ்தீன மக்கள் காஸாவில் பேருந்துகளை எரித்ததுடன் அரசு உடைமைகளை நாசம் செய்தனர். பாலஸ்தீன மக்களின் இவ் இன்டிபாடாவினை நிறுத்துவதற்காக இஸ்ரேலிய அரசு பல நடவடிக்கைகளினை மேற்கொண்டது. அரபாத் பாலஸ்தீன மக்கள் போராட்டமாக எழுச்சியடைய வேண்டுமெனவே கருதினார். இதனால் அவர் மக்களை அரசியல் ரீதியில் அணி திரட்டுவதுடன் அவர்களது அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண இன்டிபாடாவினை பயன்படுத்தினார்.

அத்துடன் மறுபக்கத்தில் இவ் இன்டிபாடா எழுச்சியில் பெண்களை இணைப்பதிலும் முன்னுரிமை கொடுப்பதிலும் அரபாத் கரிசனை கொண்டிருந்தார். அரபுக்கள் பலர் இஸ்ரேலிய அடக்குமுறைக்குள் அகப்பட்டனர். அவர்களது விடுதலை என்பது பாலஸ்தீன விடுதலைக்கு ஒப்பானதாக அமையுமெனக் கருதிய அரபாத் பெண்களினை இதனுள் இணைத்தார். யூத இராணுவ இயந்திரத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறியடிக்க பெண்களிடம் ஆயுதம் இருத்தல் வேண்டுமென எண்ணியதுடன் அதற்கான முக்கியத்துவத்தினை கொடுக்க ஆரம்பித்தார்.

இந்த கல்லடி தாக்குதல் இன்டிபாடாவை காட்டு மிரண்டித் தனமாக மீடியாவில் *(Media)* முன்னிறுத்த இஸ்ரேல் அரசு மிகப்பெரிய முயற்சிகள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. உலகப்போர்கள், உள்ளூர்ப்போர்கள் என்பவற்றை உலகமே பார்த்துவிட்ட நிலையில் கல்லால் அடித்துக் கொள்வதென்ற இவ் இன்டிபாடா விசித்திரமான ஒரு போர் உத்தியாகத்தான் விளங்குகிறது. இவ் இன்டிபாடாவில் பல தந்திர உபாயங்களும் மேற்கொள்ளப்பட்டதனை அவதானிக்க முடிகிறது.

அவ் தந்திரோபாயமாக முதலில் குழந்தைகளை நடக்கவிட்டு பின்பு பெண்கள் அணி வகுப்பார்கள் அவர்களுக்கு பின்னால் ஆண்கள் நடுவில் போராளி அமைப்பை சேர்ந்தவர்கள் என்றவகையில் நடப்பார்கள். இஸ்ரேல் கண்ணீர் புகையை மேற்க்கொள்ளும் போது குழந்தைகள் மயங்கி வீழ்வார்கள். அதனை போராளி அமைப்பினர். புகைப்படமெடுத்து அனுப்பி விடுவார்கள். நாடெங்கிலும் உலகெங்கிலும் படங்கள் பிரசுரமாகிவிடும். எனவே அப்பாவிக் குழந்தைகள் பல யூதர்களின் கொலை வெறியாட்டம் என்கின்ற தலைப்புக்களினை நாள்தோறும் அவதானிக்க முடிந்தது. இதன்படி இஸ்ரேலியர்களே கொலையாளிகளாக நோக்கப்பட்ட தன்மையினைக் காணலாம்.

இவ் இன்டிபாடாவினை ஆரம்பத்தில் ஈரான் அல்லது பி.எல்.ஓ பாலஸ்தீனியர்களை தூண்டிவிட்டிருக்கலாம் என்று தான் முதலில் இஸ்ரேல் அரசு நினைத்தது. காஸாவில் வாழும் பாலஸ்தீனியர்கள் 1948, 1967 போர்களுக்கு பின் அகதிகளாக வந்தவர்களின் வாரிசுகள். இவர்கள் அகதிகளாக மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தவர்கள். மேலும் இவர்களில் பலர் இஸ்ரேலுக்கு சென்று மிகக் குறைந்த ஊதியத்தில் வேலை செய்பவர்கள் அங்கு ஆடம்பரமாக வசதியாக வாழும் இஸ்ரேலியர்களை கண்டு கோபமும் தங்களுடைய ஒரு இனம் கொடுமைகளை சந்திக்கின்ற போது அங்கு ஓர் எழுச்சி ஏற்படுவது சாதாரண ஒன்று. இதனை நாம் எமது வரலாற்றில் கூட காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த போராட்டத்தில் இஸ்ரேலில் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. இந்த கலவரம் நடந்த சமயத்தில் இஸ்ரேலில் 17% அரேபியர்கள் இருந்தனர். இவர்களின் இஸ்ரேலின் குடிமக்கள் என்றாலும் அங்கு இரண்டாம் தர பிரஜைகளாகவே நோக்கப்பட்டனர். அத்துடன் வெஸ்ட்பேங் காஸாவில் பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் அரசு நடத்தியவிதம் இவர்களுக்கு பிடிக்கவில்லை. என்னதான் இருந்தாலும் இவர்களும் பாலஸ்தீன அராபியர்கள் தானே. கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவும் மருந்தும் அனுப்பினர். இரத்த தானமும் செய்தனர். இது பின்னர் யூதர்களுக்கு அதிர்ச்சியினைக் கொடுத்தது.

## எழுச்சியின் விளைவு

1987 டிசம்பரில் ஆரம்பித்த எழுச்சி 1988 வரை தொடர்ந்தது. இந்த எழுச்சியில் குழந்தைகள் உட்பட 311 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இஸ்ரேலியர்களில் ஆறு குடிமக்களும் நான்கு வீரர்களும் கொல்லப்பட்டனர். 526 பாலஸ்தீனர்களின் வீடுகள் அழிக்கப்பட்டன. பாலஸ்தீனர் சிறார்கள் கற்களை வீசியபோது இஸ்ரேல் படைவீரர்கள் அவர்கள் மீது குண்டுகளை வீசினர். இது எல்லோர் கண்களையும் உறுத்தியதால், பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் தடிகளை பயன்படுத்தியது போல், இஸ்ரேல் படைவீரர்களையும் தடிகளை பயன்படுத்தும்படி பாதுகாப்பு மந்திரி ரபீன் உத்தரவிட்டார். (இந்தத் தடிகள் அரேபிய ஊழியர்களால் காஸாவில் தயாரிக்கப்பட்டன. இப்போதும் இஸ்ரேல் இராணுவ வாகனங்களைச் செப்பனிடுவது வெஸ்ட் பேங்கில் இருக்கும் பாலஸ்தீன திருத்துனர்கள் தான்) இஸ்ரேல் வீரர்கள் அடித்த அடிகளால் பல பாலஸ்தீனர்கள் நிரந்தரமாக முடமாக்கப்பட்டனர். இந்த எழுச்சியால் கோபமடைந்த இஸ்ரேல் மக்களில் பலர் வலது சாரிகள் ஆயினர். வாதுசாரிகளுக்கும் இடது சாரிகளுக்கும் இடையே இருந்த பிளவு அதிகரித்தது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை இந்த எழுச்சியால் பொருளாதார நெருக்கடி எதுவும் ஏற்படவில்லை. ஒருசில இஸ்ரேலியர்களே இடம்பெயர்ந்தனர். பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. சில இடங்களில் தொழிலாளர்கள் பற்றாக்குறை - குறிப்பாக கட்டடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலில் - ஏற்பட்டது. அப்போது வெளியிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்து இஸ்ரேல் அரசு சமாளித்தது. இராணுவத் தலைவர்கள் மக்கள் மத்தியில் இரண்டு வகைகளில் - (இன்னும் கடுமையாக நடந்து கொள்ளவில்லை என்று வலதுசாரிகளிடமும் அதிகக் கடுமையாக நடந்து கொண்டதாக இடது சாரிகளிடமும்) தங்கள் மதிப்பை இழந்தனர்.

## எழுச்சியின் அரசியல் எதிரொலி

1988இல் எழுச்சிக்கு நடுவில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் லிக்கூட் கட்சியைச் சேர்ந்த ஏரியல் ஷரோன் (மேலே சொன்னபடி இப்போது லிக்கூட் கட்சியும் தொழிற் கட்சியும் சேர்ந்து கூட்டாக ஆட்சி நடத்தி வந்தன.) தடாலடித்தனமாக நடந்துகொள்ளாத தொழில் கட்சியால் தான் எழுச்சி அத்தனை காலம் நீடித்தது என்றும் தங்கள் கட்சிக்கு முழு அதிகாரமும் இருந்திருந்தால் ஒரே வாரத்தில் புரட்சியை முறியடித்திருப்போம் என்றும் கூறினார். தொழிற்கட்சியைச் சேர்ந்த பெரெஸ் லிக்கூட் கட்சியைச் சேர்ந்தவர்களின், பாலஸ்தீனர்களுக்குரிய இடங்களைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற பேராசைதான் எழுச்சி நீண்டுகொண்டே போனதற்குக் காரணம் என்றார். அடுத்த தேர்தலில் தொழிற்கட்சிக்கு 39 இடங்களும் லிக்கூட் கட்சிக்கு 40 இடங்களும் கிடைத்தன. (பாலஸ்தீனர்களுக்குக் கொஞ்சம் சாதகமாகப் பேசியதாலோ என்னவோ முந்தைய தொழில் கட்சியின் 44 இடங்கள் 39 ஆகக் குறைந்தன.) மறுபடி இரண்டு கட்சிகளும் சேர்ந்து கூட்டாட்சி அமைத்தன. பல உதிரிக் கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு லிக்கூட் கட்சித் தலைவர் ஷரோன் அமைச்சரவை அமைத்திருக்கலாம். ஆனால் அது நிரந்தரமான அரசாக இருக்காது என்று எண்ணியதால் தொழில் கட்சியோடு சேர்ந்து ஆட்சி அமைத்தார். ஆனால் பிரதம மந்திரியாக அவரே நீடித்தார்.

1970 களின் கடைசியில் எத்தியோப்பியாவிலிருந்து நிறைய யூதர்கள் இஸ்ரேலுக்கு வந்தனர். 1980 களின் கடைசியில் பலவீனமாகிக் கொண்டிருந்த சோவியத் யூனியனிலிருந்த ரஷ்ய யூதர்கள் இஸ்ரேலில் குடியேறினர். பாலஸ்தீன எழுச்சியோடு இஸ்ரேலுக்கு வந்த குடியேறிகளின் எண்ணிக்கை மிகுந்த அளவில் அதிகரித்ததும் இஸ்ரேலியர்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது இன்டிபாடா

இவ்வாறாக முதலாவது இன்டிபாடவானது காணப்படுவதுடன் இரண்டாவது இன்டிபாடாவிற்கான ஆரம்பம் 1998 களின் காணப்பட்டது. அதற்கான பிரதான காரணமாக ஒஸ்லோ உடன்படிக்கை எனக் கூறப்படும் காஸா ஜெரிக்கோ உடன்படிக்கை காணப்படுகிறது. இவ் உடன்படிக்கை அரபாத்தினை வீழ்ச்சியினை நோக்கி நகர்த்தியதுடன் அவரினை பாலஸ்தீன மக்களின் மனங்களிலிருந்து அன்னியப்பட ஆரம்பித்தார். அவ் உடன்பாட்டின் பின்னர் பாலஸ்தீனம் புதிய இராணுவ தலைமையை நோக்கி நகர ஆரம்பித்தது. இவ் உடன்பாட்டின் பிரகாரம் அரபாத் இஸ்ரேலை அங்கீகரித்தார். இதனால் பாலஸ்தீன மக்கள் மத்தியில் எதிர்ப்பினை சம்பாதித்து கொண்டார். எனினும் இவ் உடன்படிக்கை அரபாத் சர்வதேசத்தின் நெருக்கடியை தக்கவைக்கவே இவ் உடன் பாட்டுக்கு போயிருந்தார் என்பது உட்கிடையான உண்மை யாகும். இதனால் பாலஸ்தீன மக்களின் மனங்களிலிருந்து அரபாத் வீசப்பட்டார்.

காஸா - ஜெரிக்கோ பிரதேசத்தினை நிர்வகிக்க முடியாது. அரபாத் திண்டாடினார். நிர்வாக குழப்பம், நிதி, கையாளுகையில் காணப்பட்ட ஊழல் என்பன அவரது இயலாமையை வெளிப்படுத்தியது. இதே நேரம் இஸ்ரேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினை முற்றாக அழிப்பதற்கான உபாயங்களை மேற்க்கொண்டது.

இந்நிலையில் அரபாத் - ஜெரிக்கோ உடன்பாட்டிலிருந்து வெளியேறி விடக்கூடாது என்பதற்காக வைநதி உடன்பாடு (1999) எட்டப்பட்டது. இவ் இக்கட்டான நிலையில் அரபாத் இரண்டாவது இன்டிபாடாவிற்கு அழைப்பு விடுத்தார். இது அல் . அக்ஸா இன்டிபாடா என அழைக்கப்பட்டது. அல் - அக்ஸா என்பது. ஜெருசலேம் நகரிலுள்ள மிகப்பெரிய பள்ளிவாசலாகும். இதனை மீட்பதே இரண்டாவது இன்டிபாடாவின் நோக்கமாக அமைந்திருந்தது. இந்த இன்டிபாடா இஸ்ரேலியர் மீதான எதிர்ப்பை மிகவும் தூண்டிவிட்டது. இதில் பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலியரது சொத்துக்களையும் உடைமைகளை யும் அழித்ததுடன் காவலரண்களையும் தீ மூட்டினர். இதற்கு பதிலாக முதல் இரண்டு வாரங்களில் 609 பாலஸ்தீனியர் கொல்லப்பட்டதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் இரண்டாவது இன்டிபாடாவின் உச்சக்கட்டம் 2000ம் ஆண்டு செப்டெம்பர் 27ம் திகதி டேவிட் பிரி என்கின்ற யூதமத குருவை சில முஸ்லீம்கள் சேர்ந்து கொன்றார்கள். இது இன்னொரு இன்டிபாடாவின் ஆரம்பமாக அமைந்தது.

மேலும் இஸ்ரேல் இராணுவத்தளபதி ஏரியல் சரோனின் அல்அக்ஸா வருகையும் இதனை ஏற்படுத்திய காரணியாக அமைந்தது. அவர் அங்கு வந்தவுடன் ஒரு கல்லடி கிடைத்தது. அதனைத் தொடர்ந்து கறுப்புக்கொடி காட்டி அவருக்கு எதிராக கோசமிட்டார்கள். அங்கு அவருக்கு பாதுகாவலர்களாக 1200பேர் காணப்பட்டார்கள். பார்வையாளர்களான பொதுமக்கள் 75000பேர் காணப்பட்டார்கள். அவர் சென்ற பின் கலவரம் முண்டது.முஸ்லிம்களின் அல்அக்ஸா மசூதியை கலங்கப்படுத்தவே அவர் வந்ததாக கருதப்பட்டது. யூதர்களே முதலில் ஜெருசம் முஸ்லிம் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் தொடங்கினர். அதனைத் தொடர்ந்து ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் வெகுண்டு எழுந்தது. இதன் தொடர்ச்சி தான் சாதாரண கண்டனப் பேரணியாக காணப்பட்ட இன்டிபாடா மாபெரும் கலவரமானது. கற்களால் துரத்தித் துரத்தி அடித்தார்கள்.பெற்றோல் நிரப்பி பற்ற வைத்து தூக்கி வீசினார்கள்.

15000 பேர் காயமடைந்தனர். மிகப் பெரிய கலவரம் நிகழ்ந்தது. இதனைத் புரிந்துகொண்ட அரபாத் இஸ்ரேலுக்கு எதிராக முழு நீள யுத்தம் ஒன்றுக்கு தயாரானார். ஆயுதங்கள் காஸாத் துறைமுகத்தில் குவிக்கப்பட்டது. போர் வெளிப்படையாகவே இவ் இன்டிபாடாவினைத் தொடர்ந்து ஆரம்பித்தேவிட்டது என்றே கூறலாம். ஆனால் போரில் யூதர்கள் தான் முந்திக் கொண்டார்கள். இவ்வகையில் இப் போரினை தீவிரத் தன்மையிலும் இவ் இரண்டாவது இன்டிபடாவின் செல்வாக்கு அதிகளவு காணப்பட்டது.

இரண்டாவது இன்டிபாடாவின் விளைவுகளில் ஒன்றாக இஸ்ரேலிய பொருளாதாரத்தில் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியமை காணப்படுகிறது. இதனால் இஸ்ரேலிய தொழில்நுட்ப தொழிற்துறைகள் பாதித்தன என்பதனைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்டிபாடாவின் போது பத்து, நூறு, ஆயிரம் அல்ல. இலட்சக் கணக்கில் மக்கள் திரண்டு விடுவார்கள். ஒட்டுமொத்த பாலஸ்தீன அராபியர்களும் இஸ்ரேலுக்கு எதிராக திரண்டு நிற்பார்கள். இதில் கற்கள் மட்டுமன்றி பெற்ரோல் அடைக்கப்பட்ட கண்ணாடி பாட்டில் களும் காணப்பட்டன. பாலஸ்தீனியப் போராளி இயக்கங்களின் நோக்கத்துக்கு இந்த மக்கள் எழுச்சிப் பேரணிகள் மிகப்பெரிய உதவிகள் செய்தன என்பதனை மறுக்கவே முடியாது. அதேசமயம் இதனால் ஏற்பட்ட இழப்புக்களும் சாதாரணமாக இல்லை என்றே கூறலாம்.

**இன்டிபாடா விளைவுகள்**

எனவே தொகுத்து நோக்குகின்ற போது இவ் இரண்டு இன்டிபாடாவின் சம்பவங்களினைத் தொடர்ந்து நாம் பின்வரும் முடிவுகளுக்கு வரமுடிகின்றது. அதாவது அதன் விளைவுகளாக பின்வருவன காணப்படுகின்றன.

* பாலஸ்தீன போராளி இயக்கங்கள் சாதிக்க முடியாத பலவற்றை இந்த மக்கள் எழுச்சி ஊர்வலங்களும் அதன் தொடச்சியான கலவரங்களும் சாதித்தன. பாலஸ்தீன பிரச்சினை குறித்த சர்வதேச கவனமும் அக்கறையும் உண்டாக இவ் இன்டிபாடா தான் ஆரம்ப காரணமானது. பாலஸ்தீனர் விடயத்தை ஐக்கிய நாடுகள் சபை மிகத் தீவிரமாக கவனிக்கவும் பின்னால் பி.எல்.ஓ வுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் பார்வையாளர். அந்தஸ்து அளிக்கவும் கூட இதுதான் மறைமுக காரணம் எனலாம்.

* அக்கம் பக்கத்து அரபு தேசங்களின் தொடர்போ, ஒத்துழைப்போ இல்லாமல் பாலஸ்தீனிய அராபியர்கள் தாங்களாகவே வழி நடத்தி முன்னெடுத்துச் சென்ற இந்த மிகப்பெரிய ஊர்வலங்கள் அரசியலைத் தாண்டி அனுதாபத்துடன் பிரச்சனையை பார்க்கவழி செய்தன.

* அதுவரை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பாலஸ்தீனிய அராபியர்களை "South Syrians" என்று சிரியாவின் குடிகளாக முன்னிலைப்படுத்தியே பேசிவந்த இஸ்ரேலியரின் நடத்தை உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டு பாலஸ்தீனியர்களின் சுய அடையாளம் முதன்மைப்படுத்தப்பட்டு அவர்களுக்கான நியாயம் என்று பேச வழி வகுத்தது.

* இந்த இன்டிபாடாவிற்கு பிறகு சற்றும் நம்ப முடியாத படியாக பல்வேறு ஐரோப்பிய தேசங்களின் அரசுகள் பி.எல்.ஓ வுக்கும் பீ.ஏ. எனச் சொல்லப்படும் பாலஸ்தீனியன் அத்தாரிடி என்கிற அரபுக்களின் ஆட்சிமன்றக் குழுவுக்கும் நிதியுதவி செய்ய ஆரம்பத்தன. மறுபுறம் அமெரிக்க அரசு தனது விருப்பத்துக்குரிய தோழரான இஸ்ரேலிய அரசுக்கு ஏகப்பட்ட நிபந்தனைகளையும் மிரட்டல்களையும் முன் வைத்தது. குறிப்பாக ஒரு மக்கள் போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் 16 வயதிற்குட்பட்ட 159 அரேபியக் குழந்தைகள் மொத்தமாக இஸ்ரேலிய காவல் துறையினரால் கொல்லப்பட்டதை அடுத்து அமெரிக்க அரசு இஸ்ரேலினை கண்டித்ததனைக் குறிப்பிடலாம்.

* இஸ்ரேல் அரசின் நிதி ஆதாரம் கணிசமாக பாதிக்கப்பட ஆரம்பித்தது. ஒருவருட காலத்தில் சுமார் 650 மில்லியர் டொலர் ஏற்றுமதி இதனால் கெட்டது என்று பேங்க் ஆ.்.ப் இஸ்ரேல் அறிக்கை தெரிவிக்கிறது. இந்தப் போராட்டத்தினால் இஸ்ரேலின் சுற்றுலா வருமானம் அறவே நின்று போனது.

* அதுவரை அராபியர்களின் அனைத்து போராட்டங்களையும் தீவிரவாதச் செயல்களாக மட்டுமே சொல்லி வந்த இஸ்ரேலிய அரசுக்கு இன்டிபாடா எழுச்சி பேரணிகளை என்ன சொல்லி வருணிப்பது என்று தெரியாமல் போனது. தேசத்தின் ஒட்டுமொத்த மக்களும் கலந்து கொள்ளும் போராளிகளை எப்படி தீவிரவாத செயல்களாக முன்நிலைப்படுத்த முடியும். இது இஸ்ரேலுக்கு பெருத்த அடியாக காணப்பட்டது.

* இன்டிபாடா நடந்து கொண்டிருந்த போது யசீர் அரபாத்தும் பி.எல்.ஓ மிக முக்கிய தலைவர்களும் தூனிஷியாவில் அகதி வாழ்வு வாழ்ந்தார்கள். பாலஸ்தீனில் இருக்க முடியாதபடி அரசியல் நெருக்கடி அவர்களுக்கு இருந்தது. வெளிநாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபடி தான் பாலஸ்தீனப் பிரச்சனைக்கு தீர்வு தேடிக் கொண்டிருந்தார்கள். இன்டிபாடாவின் மகத்தான வெற்றிதான் அவர்கள் மீண்டும் தாயகம் திரும்ப வழிகோலியது.

## மூன்றாவது இன்டிபாதா எழுச்சி

சிரிய யுத்தமானது ஒரு மோசமான நிலையை உலகில் ஏற்படுத்தி இருக்கும் இந்நிலையிலேயே பாலஸ்தீன - இஸ்ரேல் யுத்தமானது மற்றுமொரு இரத்தக்களறி ஆக உருவாகி உள்ளது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு கொள்கைகளுக்கும், கொடுமைகளுக்கும் பாதிக்கப்பட்டுள்ள மேற்குக்கரை மற்றும் காஸா பாலஸ்தீன மக்கள் தமது எதிர்ப்பினையும் எழுச்சியையும் வெளிப்படுத்தும் விதத்தில் போராட்டங்களை மேற்கொள்கிறார்கள். இதுவரை நடந்துள்ள பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் எந்த பயனும் தரவில்லை. இவை இஸ்ரேலை மேலும் பலப்படுத்தியது. இவ் உடன்படிக்கைகளால் இஸ்ரேலே இலாபமடைந்தது. உடன்படிக்கை பற்றிய பிரெஞ்சுப் புரட்சியாளரின் கருத்தாக,

"வீழ்ந்த போராளிகளின் உடலில் விறைப்பு ஏறுமுன்பு எழுதிய ஒப்பந்தத்தின் மை காய்ந்துவிட்டது"

என ஒப்பந்தத்தின் யதார்த்தத்தை கூறுகின்றது. அந்தவகையில் தென் ஜெருசலேத்தில் பாலஸ்தீனியரின் கத்திக் குத்தலுக்கு இலக்காகி 07 இஸ்ரேலியர்கள் கொலை செய்யப்பட்டனர். இதனை சாட்டாக வைத்து இஸ்ரேல் இராணுவத்தினர் பாலஸ்தீனியருடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்களின் எதிர்ப்பையும் ஆர்ப்பாட்டங்களை யும் சாட்டாக வைத்து இஸ்ரேல் பாலஸ்தீன பொதுமக்கள் மீது தாக்குதலை கட்டவிழ்த்துவிட்டது. இதனால் இஸ்ரேலியரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி 56 பாலஸ்தீன இளைஞர்கள் கொல்லப்பட் டுள்ளனர். பலர் காயமடைந்துள்ள அதேவேளை மேலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ் அரபுக்களின் எழுச்சியானது மரபு ரீதியான தலைமைத்துவத்திற்கு அப்பால் இளைஞர்களால் முன்னெடுக்கப்படு கின்றது. நம்மைவிட பன்மடங்கு இராணுவ பலத்தை கொண்டவருடன் இப்போரர்ட்டம் நடக்கின்றது என்பதை பாலஸ்தீனர் உணராமல் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சிகள், வன்முறைகள், தாக்குதல்கள் என்பன ஜெருசலேத்தையும் காஸாவையும் பதற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளன.

இதுவரை காலமும் இரு தரப்பினரும் குறைந்த மட்டத்தில் செயற்படுத்திவந்த வன்முறைகள் சக்திமிக்க வன்முறையாக வடிவமெடுத்து உள்ளது என "அமோஸ் ஹெரல்" என்ற இஸ்ரேலிய இராணுவத் தொடர்பாளர் கூறியுள்ளார். அதேவேளை மூன்றாவது இன்டிபாடா ஆரம்பமாகிவிட்டதாக பாலஸ்தீன இஸ்லாமிய விடுதலை இயக்கமான ஹமாஸ் கூறியுள்ளது. (முதலாவது, 1988 - 1993, இரண்டாவது 2000 ___ 2005)

ஹமாஸ் தலைவர் ஜெருசலேத்தில் இடம்பெற்று வருபவை இன்டிபாடா என கூறியுள்ளார். பாலஸ்தீன சமூக வலைத்தளங்களில் பரவலாக இன்டிபாடா பற்றி பேசப்படுகிறது. காஸா நகரில் வெள்ளிக்கிழமை ஜிம்மாப் பிரசங்கத்தில் இன்டிபாடாவினை அதிகரிக்கும் படியும் பலப்படுத்தும் வகையில் நாங்கள் வேண்டுகிறோம். நம் விடுதலைக்கு இன்டிபாடா தான் ஒரே வழி என்று கூறப்பட்டுள்ளது.

கலகத்தில் ஈடுபட்டு கொலை செய்யப்பட்ட இளைஞன் ஒருவனின் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்ட பாலஸ்தீன சட்டசபை உதவி சபாநாயகர் ஹஸன் குறைக்ஷி இன் கருத்துப்படி மம்மூத் அப்பாஸ் மூன்றாவது இன்டிபாடா தேவையில்லை என்று கூறியதாக ஒப்சேவர் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. மேலும் அவர் அரபாத்துடன் நீங்கள் ஒப்பிடப்படுகிறார். அரபாத் ஒரு செயல் வீரன் அப்பாஸ் ஒரு செய்தி வாசிப்பாளர் என்றும் கூறியுள்ளார்.

இப் போராட்டமானது மத ரீதியாக வடிவம் பெற்றுள்ளமையானது ஏற்கனவே இருந்த மோதலுக்கான கொதிநிலையை மேலும் மோசமாக்கியது. சமூக வலைத்தளங்களில் இப்போராட்டத்தை ஜெருசலேம் எழுச்சி என்றும் கத்தி இன்டிபாடா எனவும் கூறப்படுகின்றது. அந்தவகையில் பல காலங்களாக அல் - அக்ஸா பள்ளிவாசல் வளவிற்குள் பாலஸ்தீன இளைஞர்களுக்கும் இஸ்ரேல் இராணுவத்திற்கும் கைகலப்புகள், துப்பாக்கி சூடுகள் இடம்பெறும் கல் எறிவுகள் நடந்து வருகின்றன. இதனை காரணங்காட்டி இஸ்ரேல் அரசு அல் - அக்ஸா பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு பிரவேசிப்போர் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் கட்டுப்பாட்டை விதித்துள்ளது. 50 வயதுக்கு குறைவானவர்கள் பள்ளிவாசலுக்கு நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பெண்கள் வயதுக்காட்டுப்பாடின்றி உள்ளே நுழையலாம். அடுத்தநாள் பள்ளிவாசல் வளவிற்குள் நின்ற 70 பாலஸ்தீன இளைஞர்கள் இராணுவத்தினரால் பலாத்காரமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அதேவேளை யூதர்கள் உள்ளே நுழைவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அல் - அக்ஸாவிற்குரிய வழமையான விதிகளை மாற்றப்போவதாகவும் அங்கு புதிய தேவாலயம் அமைப்பதற்கும், அல் - அக்ஸா பள்ளிவாசலில் தற்போது இருந்துவரும் நடைமுறையை மாற்றி முழு ஆதிக்கத்தையும் இஸ்ரேலியர் நமது கைகளில் எடுக்க முயற்சிக்கின்றனர் என்பது பாலஸ்தீன மத்தியில் ஒரு போராட்ட எழுச்சிவேகப்படுகிறது. இதனால் இளைஞர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

நேரடியாக சொல்வதானால் சமயப் பகைமைகளோடு தொடர்பானதாக ஒக்டோபர் (2015) மோதல் ஜெருசலத்தில் வெடித்து உள்ளது. "The Telegrap" பத்திரிகையில் டேவிட் பிளேயர் கூறியது போல அனைவரும் இதயங்களில் பொறிக்கப்பட்ட பதம் ஜெருசலம் அது புனித தலத்தின் பூமி இங்கு தான் அல் - அக்ஸா பள்ளிவாசல் சர்ச்சையின் மையமும் உள்ளது. தேவாலயம் (டெம்பக்மவுண்ட்) என்பதிலிருந்து இச்சர்ச்சைக்கான மூலக்கதை ஆரம்பமாகிறது.

மலைத்தேவாலயம் யூதமதத்தின் புனித தலம் முஸ்லீம்களின் மூன்றாவது புனித தலம், கிறிஸ்தவர்க்கு அது சங்கைக்குரிய இடம். ஹரம் அல் ஷரீப் உயர்வான புனித தலம் என முஸ்லீம்கள் கருதுகின்றனர். பைபிள் ஆதியாகமத்தின்படி நபி ஆபிரகாம் அவரது மகன் ஈசாக்கை இறைவன் கட்டளைப்படி பலியிடுவதற்கு அழைத்து சென்ற மலைப்பகுதி அங்குள்ளது. திருத்தூதர் முகமது நபி (ஸல்) அவர்கள் மி∴ராஜ் விண்ணுலக யாத்திரையின் போது இங்கு சென்றதாக முஸ்லீம்கள் நம்புகின்றனர்.

அதேவேளை வன்முறை வேண்டாம் என ஜேசுநாதர் போதனை புரிந்த இடமாக கிறிஸ்தவர்கள் இதை போற்றுகின்றனர். யேசுவின் தாய் மேரி குழந்தை யேசுவின் முதற் பிள்ளைக்கான சடங்குகளுக்காக அங்கு கொண்டு சென்றதாக நம்புகின்றது. பல ஆயிரம் வருடங்களாக இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களின் புனிததலமாக காணப்படுகிறது. 37 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இப்புனித தலத்திற்கு யூதர்கள் முஸ்லீம்களும் உரிமை கோரி நடாத்திவரும் போராட்டம் ஜெருசலேத்தை மட்டுமல்ல மத்திய கிழக்கு பிராந்தியங்களையம் போர்ப் பீதிக்குள் தள்ளி வருகின்றது.

ஜெரூசலம் பல நூற்றாண்டுகளாக இரத்தம் தோய்ந்த நகரமாக காட்சியளித்தது. மேற்காசிய வரலாறு முழுவதும் ஜெரூசலத்தை கைப்பற்றுவதற்கான படையெடுப்புகளும், யுத்தங்களும், தோல்விகளும், வெற்றிகளும், கலந்த ஒரு துயர் மிக்க நகரம். அதிலும் யூதர்களின் இலட்சணக்கான உயிர்கள் ஜெரூசலத்திற்காக பறிக்கப்பட்டது போல் இஸ்லாமியர்களின் உயிர்களும் இந்த நகருக்காக அழிக்கப்பட்ட வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. சாலமேன் தேவலாயத்தினை யூதர்களின் புனித தலமாக கருதும் அதே நேரம் இறைதூதனான நபிகளின் அல் - அக்ஸா பள்ளிவாசலை நோக்கிய தரிசனம் இஸ்லாமியருக்கான உரிமையை புராதன காலம் முதல் ஏற்படுத்தியிருந்தது. யூதர்களும் இஸ்லாமியர்களும் ஜெரூசலம் தமக்கு சொந்தமென உரிமை கொண்டாடுவதற்கு காரணமும் மேற்குறித்த வழிபாட்டுத் தலங்களேயாகும். புராதன வரலாறு இரு மதப்பிரிவினரையும் உருவாக்கியது. இதனாலேயே முகம்மதுவின் அழகான வாக்கியம் ஒன்று இவர்களது வரலாற்றில் இடம் பிடித்தது. வலிமையில் சிறந்த அராபியர்களும் அறிவில் சிறந்த யூதர்களும் இணைந்து வலிமையான சமூகத்தை உருவாக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இத்தகைய புராதன வரலாற்றுக் காலம் முதல் யூதர்களும், அராபியர்களும் தமது புனித நகரமாகவும் உரிமையான நகரமாகவும் ஜெரூசலத்தை கோரி வருவதுடன் அதற்கான யுத்தத்தினை இரு தரப்பினரும் நடாத்தினர். இதனால் சுதந்திர பிரகடனத்தை யூதர்கள் முன்வைக்க காரணமாக அமைந்த ஐ.நா சபையின் பிரிவினைத் திட்டம் *(Partision Plan)* தெளிவாக ஜெரூசலம் நகரை புனித நகரமாகவும் ஐ.நாவின் கண்காணிப்பு நகரமாகவும் வரையறுத்துக் கொண்டது. அன்றிலிருந்து சிறு சிறு மோதல்களும், காவலர் மீதான படுகொலைகளும், தொழுகையின் போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கையும் நிகழ்ந்து கொண்டே வந்தது. இஸ்ரேலிய முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர்களின் அதிக நெருக்கடியை இஸ்லாமியர்களுக்கு கொடுத்த ஏரியல் ஷரோன் தேவாலயத்தை தொழுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. 1948, 1956, 1967 ஆகிய யுத்தங்களில் பாரிய சவாலான நகரமாக விளங்கிய ஜெரூசலம் தம் தமது வழிபாட்டுத் தலமாக பேணப்படுவதுடன் அரச தலைவர்களின் அடக்கம் செய்யப்படும் நகரமாகவும் காணப்படுகின்றது.

ஜெரூசலம் புராதன காலம் முதல் யூதர்கள் தமது புனித பூமியாக எண்ணி வருகின்றனர். ஆரம்ப காலத்தில் யூதேயா என அழைக்கப்பட்ட நகரம் மீது யூதர்கள் கொண்டிருந்த அளவற்ற பற்றுதல் உலகம் முழுவதும் அலைந்து திரிந்த பின்பு அவர்களது அடையாளமாக இருந்தது. ஐரோப்பாவிற்கு படையெடுத்த யூதர்கள் மீது ஐரோப்பியர் தாக்குதல் தொடங்கிய பின்பு யூதர்கள் ஜெரூசலம் நோக்கி பயணிக்க விரும்பினர். இரண்டு யூதர்கள் வீதியில், கடைத் தெருவில், பல்கலைக்கழகத்தில் பாடசாலையில் சந்தித்து உரையாடிவிட்டு விடைபெறும் போது சொல்லிக் கொள்ளும் வார்த்தை ஜெரூசலத்தில் சந்திப்போம் என்பதாக அமைந்தது. *(Meet Againt Jerusalam)* இதுவே யூதர்களின் அடையாளச்சின்னம். ஜெரூசலமின்றி யூதர்கள் புனித தேசத்தை மீளத் தொட்டிருக்க முடியாது. ஐ.நாவின் தலையீட்டாலும் அரபுலகத்தின் நெருக்கடியாலும் யூதர்கள் ஜெரூசலத்தினை தற்காலிமாக விட்டிருக்கிறார்களே அன்றி அதனை முழுமையாக இழப்பதற்கு தயாராக மாட்டார்கள்.

யூதர்கள் தமது இலட்சியத்தில் குறியாக இருப்பவர்கள். காலம் பார்த்து ஜெருசலம் விவகாரத்தை நகர்த்தியுள்ளார்கள். கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த அனைத்து அமெரிக்க ஜனாதிபதிகளிடமும் இக்கோரிக்கையை முன் வைத்த போதும் அதற்கான கட்டாயப்படுத்தலை தவிர்த்தே வந்தனர். ஆனால் ஜனாதிபதி ட்ரம்பின் ஆசியாவுக்கான முதல் பயணம் இஸ்ரேலை மையப்படுத்தியிருந்தாலும் அவரது இஸ்ரேலுடனான நெருக்கமும் ஜெருசலத்தை மீட்க முடியுமென கருதினர். ஜெரூசலத்தை நகரமாக அங்கீகரித்தல் என்பதே ஒரு தேசத்தை அங்கீகரிப்பதாகவே யூதர்கள் பார்க்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நேரம் அரபுலகம் ஜெரூசலத்தினை நகரமாக அறிவித்தால் அதிக விளைவுகளை அமெரிக்கா சந்திக்க நேரிடும் என எச்சரித்து வருகின்றன. குறிப்பாக ஜோர்தான், சிரியா, லெபனான் போன்ற நாடுகள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளன. அமெரிக்காவின் நட்பு அரபு நாடுகளுமே அதிருப்தியடைந்துள்ளன. ஐ.நா.வின் பொதுச்சபை வாக்கொடுப்பில் 128 நாடுகள் அமெரிக்காவின் தீர்மானத்திற்கு எதிராகவும் ஜெரூசலம் பாலஸ்தீனியர்களுக்கும் உரித்தானது எனவும் அறிவித்துள்ளன.

இஸ்ரேல் மேற்காசியாவை கையாள்வது என்பது பெருமளவுக்கு சர்வதேச அரசியல் பரப்பில் பிரவேசிப்பதற்கான திட்டமிடலாகவே அமையும். ட்ரம்ப் தேர்தல் காலத்தில் யூதர்களுக்கு அளித்த வாக்குறுதியாக உள்ளது என்ற குற்றச்சாட்டு நியாயமானது. ஏனெனில் அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு அதிக தேர்தல் கால செலவீனத்திற்கான நிதியை வழங்குபவர்கள் யூதர்களே. அமெரிக்கா வாழ் யூதர்கள் மட்டுமல்ல இஸ்ரேலிலும் பிற நாடுகளிலும் வாழும் யூத பணக்காரர்களே அதிகமான நிதியுதவிகளை வழங்கி வெற்றியினை நிர்ணயிக்கின்றனர். அந்த வரிசையில் தேர்தல் காலத்தில் யூதர்களுக்கு ஜெரூசலம் தொடர்பில் ட்ரம்ப் வழங்கிய வாக்குறுதியாகவே அமையலாம். எனவே ஜெரூசலம் இஸ்ரேலின் தலைநகராவது அரபுலகத்தின் எதிர்ப்பினைக் கடந்து சாத்தியமாகுமா என்பது கேள்விக்குரியதே. அரபு நாடுகள் வெளிப்படையாக எச்சரித்துள்ளமை அமெரிக்காவுக்கு நெருக்கடியானதே. ஆனால் யூதர்கள் எப்போவதாவது ஜெரூசலத்தை கைப்பற்றுவார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம். குறைந்தது பங்கு போட்டாவது ஜெரூசலத்தையும் தேவாலயத்தையும் தமக்குரியதாக்குவார்கள்.

**இஸ்ரேலின் நிலை**

உடன்படிக்கைகளை மீறியதுடன் எதிர்ப்புக்களால் சிதறடித்தும் இஸ்ரேல் தான். தற்போதைய இஸ்ரேலிய நிலைகளாக, ஜெருசலேம் மேயர் எல்லா இஸ்ரேலிய பிரஜைகளுக்கும் துப்பாக்கிகளை வழங்குவதற்கு நமது அதிகாரிகளை கேட்டுள்ளார். தீவிர வலதுசாரி இஸ்ரேலியர்கள் அரபுக்கள் ஒழிய என்று கோஸமிட்டவாறு வீதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலம் செல்கின்றனர் என கார்டியன் பத்திரிகை கூறுகின்றது. அராபியருக்கெதிராக இஸ்ரேலியர் கட்டவிழ்த்துள்ள வன்முறை முன்னர் நாம் கண்டதை விட அதிகமானது பெயர் கூற விரும்பாத இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் "யேடியோத் அஹ்ரோனோத்" பத்திரிகைக்கு கூறியுள்ளார். அப்பத்திரிகை அரபுக்களின் நூற்றுக்கணக்கான ஒலிவ் மரங்களை தரையில் வீழ்த்தியுள்ளதாகவும், வீடுகள், கார்களை நாசமாக்கியதாகவும் கூறுகின்றது. இஸ்ரேல் அரசு பொதுப் போக்குவரத்து பஸ்வண்டிகளில் பாதுகாப்பு படையினர் பயணிப்பதும் இராணுவ உதவியுடன் பயங்கரவாதிகளின் வீடுகளை தகர்த்தும் வருகிறது.

யாராவது எமக்கு எதிராக கை உயர்த்தினால் அவர்களுக்கு கடுமையான பாடம் படிப்பிப்போம் என்றும் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். முதியவர்களும், சிறுவர்களும் இராணுவத்தால் மோசமாக தாக்கப்பட்டுள்ளனர். வன்முறைகள் பயன்படுத்தப்படும் என நெதன்யாகு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். வன்முறை எந்த வடிவத்தில் வந்தாலும் அது மிகவும் பாரியளவில் நசுக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

**உலகின் நிலை**

மூன்றாவது இன்டிபாடா எனப்படும் தற்போதைய நிலையானது ஒரு எழுச்சியை உண்டு பண்ணுமாயின் இன்றுள்ள நிலை 2005 ஆம் ஆண்டு போன்றதல்ல. பாலஸ்தீனியரின் நியாயமான கோரிக்கை மீது உலகின் கவனம் திரும்பியுள்ள நேரம் இது. ஐ.நா. சபையானது பாலஸ்தீனத்துக்கு வழங்கியுள்ள அங்கத்துவ அந்தஸ்து மற்றும் ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆதரவு சுவீடன், வத்திக்கான் போன்ற மேற்கத்தைய நாடுகளில் அங்கிகாரம் என்பவை சாதகமான சர்வதேச ஆதரவுகளாகும்.

இஸ்ரேலின் செயற்பாடுகளுக்கு தனது முழு ஆதரவினையும் வழங்கிய அமெரிக்கா ஆரம்பத்தில் காணப்பட்டது. நெதன்யாகுவோடு அமெரிக்காவின் (ஒபாமா) நிர்வாகம் கடும் அதிருப்தியுடனேயே தொடர்புகளை மேற்கொண்டு வந்தது. ஆனால் ட்ரம்ப் பதவிக்கு வந்த பின்பு மிக நெருக்கமான நட்பு நாடாக அமெரிக்க-இஸ்ரேல் உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துள்ளது. நெதன்யாகுவின் வேண்டுகோள், அச்சுறுத்தல் என்பவற்றை புறக்கணித்து அமெரிக்கா ஜீலை 2015ல் ஈரான் இஸ்லாமிய குடியரசுடன் அணுத்திட்ட ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளமை இஸ்ரேலை பொறுத்தவரை ஏமாற்றம் மட்டுமல்லாமல் தோல்வியாகும்.

ஐ.நா பொதுச்சபையின் ஈரானின் கண்டித்தும் ஈரானின் அணுத்திட்டத்தின் ஆபத்துக்களையும் விபரித்து நெதன்யாகு கூறியதை உலக நாடுகள் கருத்தில் கொள்ளவில்லை. அமெரிக்காவும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஐ.நா.சபையிலும் இஸ்ரேல் பாராளுமன்றத்திலும், உலகச்சமாதானம் பற்றிய கலந்துரையாடல்களிலும் நெதன்யாகு நடந்துகொள்ளும் விதம் இஸ்ரேலை உலகில் தனிமைப்படுத்தும் நிகழ்வாக அமைந்திருந்தது. இதனை எல்லாம் ட்ரம்ப் தகர்துவிட்டார்.

## இன்டிபாடாவின் போது இரு தரப்பிலும் ஏற்பட்ட சேதங்கள், உயிரிழப்புக்கள் பற்றிய தகவல்கள்

### முதலாவது இன்டிபாடா

- 13 மாத காலத்திற்குள் 2000 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்
- 160 இஸ்ரேலிய காவல் துறையினர் இறந்தார்கள்
- 1987 டிசம்பர் மாதம் மட்டும் 5 குழந்தை உட்பட 22 பாலஸ்தீனியர்கள் இறந்தார்கள்.
- இஸ்ரேலில் 56 வீரர்களும் 30 சாதாரணக் குடிமக்களும் காயமடைந்தார்கள்.
- 1600 ஊரடங்கு சட்டங்கள். அதில் 116 ஊரடங்குச் சட்டங்கள் 5 நாட்களிற்கும் மேலாக நீடித்தது.
- 25000 ஒலிவ் மரக்கன்றுகள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டன.
- 423 பாலஸ்தீனியர்களின் வீடு எரிக்கப்பட்டது.
- 5000 பாலஸ்தீனியர்கள் கைது செய்யப்பட்டதுடன் 12000 பேர் காவலில் வைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாவது இன்டிபாடா**

- *1996 மார்ச் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 19 பேர் உயிரிழந்தார்கள்*
- *1996 ஏப்ரல் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 6 யூதர்கள் பலியானார்கள்.*
- *1996 மே குண்டு வெடிப்பில் டெல் அவிலில் 30 பேர் பலியானார்கள்.*
- *15000 பேர் காயமடைந்தனர்*
- *16 வயதிற்குட்பட்ட 159 அரேபியக் குழந்தைகள் இறந்தனர்*
- *1996ம் ஆண்டு மட்டும் இஸ்ரேலில் 30 குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தது.*
- *முதல் 4 நாட்களுக்குள் 65 பாலஸ்தீனியரை இஸ்ரேலிய காவல்துறையினர் சுட்டுக்கொன்றனர்.*
- *27000 பேர் நடக்க கூட முடியாதபடி கடுமையாகத் தாக்கப்பட்டனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# அன்வர் சதாத்[14]

## (1918 - 1981)



அரபு உலகின் நட்சத்திரமாகவும் ஒரு சிறந்த தலைவராகவும் விளங்கியவர் அன்வர் சதாத். எகிப்து வடக்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு நாடாகும். இந் நாட்டின் தலைநகரமாக கெய்ரோ விளங்குகின்றது. இந் நாடு மேற்கே லிபியாவையும், தெற்கே சூடானையும், கிழக்கே காசாக்கரையையும் மற்றும் இஸ்ரேலையும் எல்லையாகக் கொண்டதாக விளங்குகின்றது. அத்துடன் வடக்குக் கரையில் மத்திய தரைக்கடலும், கிழக்குக்கரையில் செங்கடலும் இதன் எல்லைகளாக விளங்குகின்றது. எகிப்தின் ஜீவநதியாக நைல்நதி பாய்வதனால் அது நைல்நதி நாகரீகத்தின் பிறப்பிடமாக விளங்குகிறது. அந்நதியின் நிலப்பகுதி பரப்பானது விவசாய நிலங்களாக விளங்குகின்றது. அதுமட்டுமன்றி பாலைவனப் பிரதேசங்களும் இங்கு அதிகமாக காணப்படுவதுடன் மிகப்பெரிய சகாராப் பாலைவனமும் இந்நாட்டின் காணப்படுகின்றது.

பல நூற்றாண்டுகளாக மன்னர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த எகிப்தானது மன்னர் ஆட்சியிலிருந்து பெப்ரவரி 28ம் திகதி 1922ம் ஆண்டு வரை ஐக்கிய இராச்சிய நாட்டின் காலனித்துவத்திற்குள் உட்பட்டிருந்தது. 1952ல் நடைபெற்ற புரட்சியினை அடுத்து 1953ம் ஆண்டு ஜீன் மாதம் 18ம் திகதி எகிப்து சுதந்திர நாடாக பிரகடனம் செய்யப்பட்டது.

---

1 ஆர்.ஞானரூபன் ரி.தக்சாகிரி கேசுமங்கலி ரி.ஜனனி எம்.பிருந்தா ஆகிய மூன்றாம் வருட அரசறிவியல் துறை மாணவர்களால் முன்வைக்கப்பட்ட அளிக்கையின் தொகுப்பு-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ரீதியாக அரபுநாடுகளின் அரசியல் மற்றும் கலாசாரங்களின் மையமாக விளங்கும் எகிப்தானது மன்னர் ஆட்சிக்காலத்தில் அதாவது 1952 -யூலை 23ம் திகதி இடம்பெற்ற இராணுவப்புரட்சி மூலம் மது, மங்கை என கேளிக்கை நிறைந்த உல்லாச வாழ்க்கையை அனுபவித்து வந்த பாரூக் மன்னர் தூக்கி எறியப்பட்டதனை அடுத்து ஜெனரல் நகீப் பிரதமராக விளங்கினார். ஆனால் நாட்டின் அதிகாரங்கள் அனைத்தும் நாசரிடமே காணப்பட்டது. நாசர் பிரதமராக பதவி ஏற்றதனைத் தொடர்ந்து எகிப்தானது துரித வளர்ச்சி அடைந்து இராணுவ பலத்தில் முதன்மை பெற்று விளங்கியது. நாசரின் மறைவுக்குப் பிறகு எகிப்தின் பிரதமராக பதவி வகித்தவராக அன்வர் சதாத் விளங்கின்றார்.

1918ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி அன்வர் சதாத் எல் சதாத்திற்கு மகனாகப் பிறந்தார். இவர் ஓர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருக்கு 13 சகோதரர்களும் ஒரு சகோதரியும் காணப்பட்டனர். ஒரு சகோதரனான அடெல் சதாத் பைலட்டாக இருந்து 1973 இல் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மூன்றாவது எகிப்திய அதிபர் நாசாரின் நம்பிக்கைக்குரிய ஒருவராக விளங்கினார். அதனால் அவரைத் தொடர்ந்து எகிப்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று திறம்பட செயற்படுத்தி இருந்த அன்வர் சதாத் 1981ம் ஆண்டு இராணுவ அதிகாரிகளால் திட்டமிடப்பட்ட வகையில் படுகொலை செய்யப்பட்டார். *Arab Socialist Union* இன் அங்கத்தவராக விளங்கிய இவர் எகிப்தின் மக்கள் மன்ற அவைத்தலைவராக 1964 மார்ச் மாதம் 26ம் திகதி தொடக்கம் 1968 நவம்பர் மாதம் 12ம் திகதி வரை பதவி வகித்தார். அதுமட்டுமன்றி 1969 டிசம்பர் 19ம் திகதி தொடக்கம் 1970 அக்ரோபர் 14 வரை எகிப்தின் துணை அதிபராக பதவி வகித்த அன்வர் சதாத் அவர்கள் 1970 அக்ரோபர் மாதம் 15ம் திகதி தொடக்கம் 1971 செப்ரெம்பர் மாதம் 02ம் திகதி வரை மூன்றாவது ஐக்கிய அரபு குடியரசுத்தலைவராகவும் விளங்கினார்.

1970ம் ஆண்டு அக்ரோபர் 15ம் திகதி எகிப்திய மூன்றாவது அதிபராக பதவியேற்ற அன்வர் சதாத் 1952ம் ஆண்டு எகிப்திய புரட்சியுடன் முகமது அலி வம்சத்தினரின் ஆட்சி முடிவுக்கு வரக் காரணமான குழுவின் மூத்த உறுப்பினராக இருந்து சிறப்புறச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பட்டார். 1967 இல் ஆறுநாள் போரின் போது இஸ்ரேலிடம் இழந்த எகிப்திய பகுதிகளை மீட்டெடுக்கும் முகமாக 1973 இல் நடைபெற்ற அக்ரோபர் போரின் போது எகிப்தியப் படைகளை திறம்பட நகர்த்திச் சென்றதுடன் தனது சிறந்த இராஜதந்திரச் செயற்பாட்டினால் எகிப்திய மக்கள் மத்தியில் அரபுலகத்தில் சிறிது காலம் நாயகனாக புகழப்பட்டார். இவரின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட எகிப்து - இஸ்ரேல் அமைதி உடன்படிக்கை இவருக்கு 1978 இல் அமைதிக்கான நோபல் பரிசை பெற்றுத்தந்தது. ஆனால் இச்செயற்பாடனது அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் வரவேற்கப்பட்டாலும் அரபுநாடுகள் கூட்டமைப்பு எகிப்தின் உறுப்பியத்தை தற்காலிகமாக நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் பிற்பாடு அன்வர் சதாத்திற்கு எதிராக எகிப்தில் பல சதித்திட்டங்கள் தீட்டப்பட்டன. அந்தவகையில் 1981ம் ஆண்டு அக்ரோபர் 06 இராணுவ அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறு இஸ்ரேல் - எகிப்து நாடுகளுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பல இராஜதந்திரச் செயற்பாடுகளை முன்னெடுத்து இவர் செயற்பட்டமையை இவரது வரலாற்றின் மூலம் அறியமுடிகின்றது.

நாசருடைய இறப்பிற்குப் பின்பு மற்றுமொரு புரட்சிகர மக்கள் குரலான உப ஜனாதிபதி அல்சதாத் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசாங்கத்திலுள்ள நாசரினுடைய ஆதரவாளர்கள் சதாத்தின் மீது சூழ்ச்சி புரிவதற்குத் தயாராக இருந்தனர். எனினும் சதாத் மதிநுட்பமான அரசியல் நகர்வுகள், அரசியல் பாதுகாப்பு நடைமுறைகள், நேர்மையான புரட்சி போன்றவற்றை முன்னெடுத்திருந்தார்.

### அரசியல் இராஜதந்திரமும் போர் நடவடிக்கையும்

சதாத் யுகமென்பது அன்வர் சதாத்தினுடைய ஜனாதிபதிப் பதவிக் காலப்பகுதியைக் குறிக்கின்றது. எகிப்தினுடைய 12 ஆண்டுகால வரலாறானது 1981 ஒக்ரோாபர் 6 அன்று அடிப்படைவாத இராணுவத்தினால் சதாத் படுகொலை செய்யப்பட்டதனூடாக பெற்றது. சதாத்தினுடைய ஆட்சியானது எகிப்துடைய ஆட்சிப்போக்கில் பல்வேறு மாற்றங்களைக் காட்டியது. சோவியத் நாட்டுடனான தொடர்பை உடைத்து ஐக்கிய அமெரிக்காவினை நட்பு நாடாக்கியதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் நாசரினுடைய அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை சதாத் மாற்றியமைத்தார். இஸ்ரேலுடன் சமாதான முன்னெடுப்புக்களை நடத்தியமை, பல கட்சி முறைமையை மீளக்கட்டியமைத்தார். பொருளாதாரக் கொள்கைகளைக் கட்டியெழுப்பியதன் மூலம் பொதுச்சமூகவுடைமையைக் கைவிட்டமை உள்ளிட்ட பல மாற்றங்களிற்கு இவரின் ஆட்சியே காரணம் ஆகும். 1971 இல் சதாத் சோவியத் யூனியனுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினார். ஆனால் ஒரு வருடம் கழித்து சோவியத் ஆலோசகர்களை வெளியேறும்படி உத்தரவிட்டார்.

ஜனாதிபதி பதவியினை ஏற்றதனைத் தொடர்ந்து எகிப்திய தேசத்திற்காக இராணுவப் படைகளினைப் பெருக்கின்றார். பொருளாதார செயற்பாட்டை முன்னெடுக்கின்றார். இஸ்ரேலுடன் முரண்பாட்டினை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக உடன்படிக்கையினை மேற்கொள்கின்றார். அவ் உடன்படிக்கையே "காம்டேவிட்" என்று சொல்லுகின்ற உடன்படிக்கை மிக முக்கியமானது ஆகும். இவ் உடன்படிக்கைக்காக இவர் ஐக்கிய நாடுகள் சபையினதும், அமெரிக்கா, சோவியத் யூனியனினதும் ஆதரவுகளினைப் பெற்றார். ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடு கைகூடவில்லை. அமெரிக்கா, சோவியற் யூனியனின் செயற்பாடே கைகூடியது, இதனைவிட இராஜதந்திரப் போர்கள் என்பவற்றினையும் மேற்கொண்டார்.

1967 இல் ஆறு நாள் யுத்தத்தில் இஸ்ரேல் வென்றதும் அதன் தன்னம்பிக்கையை அதிக அளவுக்கு உயர்த்தி விட்டிருந்தது. அதனாலேயே அரபு நாடுகள் தம்மை தாக்கத் துணியமாட்டார்கள், அப்படியே தாக்கினாலும் இஸ்ரேலிய விமானப்படை சில மணிநேரங்களில் அவர்களின் தாக்குதலை முறியடித்து வீழ்த்தும் என்ற அபார நம்பிக்கை இஸ்ரேலிடம் இருந்தது. எகிப்தும் சிரியாவும் ஆறு நாள் யுத்தத்தில் இழந்த நிலப்பகுதிகளைத் திரும்பப் பெறத் துடித்துக் கொண்டிருந்தன. 1967 செப்ரெம்பர் மாதம் கார்டும நகரில் நடைபெற்ற மாநாட்டில் அரபு நாடுகள் ஒன்று கூடி மூன்று விடயங்களை செய்வதில்லை என்று முடிவெடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இஸ்ரேலுடன் அமைதியாகப் போவதில்லை.

2. இஸ்ரேலை அங்கீகரிப்பதில்லை.

3. இஸ்ரேலுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்வதில்லை.

இதன் பிறகு இஸ்ரேல் 50 கோடி டொலர்கள் செலவு செய்து சூயஸ் கால்வாயைச் சுற்றியுள்ள தன் பகுதிகளைக் காக்க வேலி அமைத்தது. இந்நிலையில் எகிப்து அதிபர் நாசர் சோவியத் அதிபரிடம் தமக்கு மேலும் நவீன ஆயுதங்களைத் தருமாறும், கோரியிருந்தார். இதற்கு மறுத்தால் தம் நாட்டுக்குத் திரும்பிச் சென்று சோவியத் தம்மைக் கைவிட்டது என்று தமக்குப் பின் பதவிக்கு வருவோர் அமெரிக்காவுக்கு ஆதரவாக நிற்பர் என்றும் எச்சரித்தார்.

சோவியத் அமைப்பு தங்களுக்குத் தரம் குறைந்த ஆயுதங்களை அளித்தால் மட்டுமே தாங்கள் தோற்றதாக எகிப்து கூறியது. ஆனால் அவர்களது பீரங்கி, ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களில் முக்கால்வாசி இஸ்ரேலிடம் இருந்தது. போர்களத்தை விட்டு எகிப்துப் படையினர் ஓடிவிட இஸ்ரேலியர்கள் அதை எடுத்துச் சென்றுவிட்டனர். அதில் ஒரு பகுதியைத் தமது ஆய்வுக்கூடத்தில் வைத்து ஆராய்ச்சி செய்து தமக்கேற்றவாறு மேம்படுத்திக்கொண்டனர்.

இதனால் எகிப்தின் நாசருக்கு சோவியத் அதிபர் அளித்த பதில் "நாங்கள் என்ன கொடுத்தாலும் அது இஸ்ரேலிடம் தான் போகப் போகிறது". "அவர்களுக்கு என்னென்ன பிடிக்கும் என்று கேட்டு வாருங்கள் அவற்றையே தந்துவிடுகிறேன்". என்று சொன்னதாக பத்திரிகைகளில் கேலிச்சித்திரங்களை வரைந்து எகிப்தியர்களை வெறுப்பேற்றினர்.

இந்நிலையில் 1970ல் நாசர் மறைவுக்குப் பிறகு அன்வர் சாதாத் பதவிக்கு வந்தார். அவருக்கு முக்கியமான பணியாக இருந்தது எகிப்து ராணுவத்தினருக்கு நம்பிக்கையளிப்பது அதைச் செய்ய இஸ்ரேலுடன் போர் புரிந்து ஒரு சிறு பகுதியையாவது பிடித்துவிட்டால் போதும் என்று சொல்லிவந்தார். ஆனால் அவரது கூட்டாளி சிரியா இழந்த கோலன் மலைப் பகுதியை முழுவதுமாக இராணுவ நடவடிக்கை கொண்டு மீட்கப் போவதாகச் சொல்லி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபுக் கவுன்சிலில் சோவியத் உதவி இல்லாவிட்டாலும் தான் இஸ்ரேலைத் தாக்கப் போவதாக அறிவித்தார் சதாத். பத்து லட்சம் எகிப்தியப் போர் வீரர்களைக் காவு கொடுத்தாவது இழந்த பகுதிகளை மீட்பேன் என்று அறிவித்தார். இந்நிலையில் அமெரிக்காவும் சோவியத்தும் தாங்களோ தங்களைச் சார்ந்த நாடுகளோ ஆயுதத் தாக்குதலில் ஈடுபடுவதில்லை என்று அறவித்தன.

இதனால் எகிப்து 1972ல் ஒரு நாடகமாடி 2000 சோவியத் இராணுவ ஆலோசகர்களை எகிப்தில் இருந்து வெளியேற்றினார். இதன் பிறகு தாங்கள் சுயஸ் கால்வாயைத் தாண்டிச் சென்று இஸ்ரேலைத் தாக்குவோம் என்று அறிவித்தார். இந்த வெளியேற்றமே ஒரு கண்துடைப்பு. இதனால் சோவியத் அமெரிக்காவுடனான தன் ஒப்பந்தத்தை மீறாமலும் அதே வேளையில் தங்களின் கூட்டாளி பல்கேரியா மூலமாக எகிப்துக்கு மிக் 23 விமானங்களையும் ஸ்கட ஏவுகனைகளையும் வழங்கியது.

இந்த ஏவுகணைகளும் விமானங்களும் வந்து சேர்ந்து எகிப்தியர்கள் பயிற்சி பெற்றுத் தம்மைத் தாக்க எப்படியும் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும் என்று எண்ணினர் இஸ்ரேலியர். முன்னாள் எகிப்திய ஜனாதிபதி நாசரின் மருமகன் அக்ஷ்ர.ஃப் மார்வான் இஸ்ரேலிய மொசாத்தின் உளவாளியாகச் செயல்பட்டார். அவர் 1973 மே மாதம் 15ம் திகதி எகிப்து தாக்குதல் நடத்தும் என்று தகவல் கொடுத்தார். ஆனால் அந்தத் தாக்குதல் நடக்கவில்லை. எல்லையில் எகிப்து குவித்த படைகள் இராணுவப் பயிற்சிக்காக என்று பயிற்சி முடித்துத் திரும்பிச் சென்றன. இதே போல அடிக்கடி பல்வேறு பயிற்சிகள் நடைபெற்றன. இவற்றின் நோக்கம் உண்மையில் இராணுவத்தை இறக்கிவிட்டுத் தாக்குதலுக்கு முன்னேறினால் இஸ்ரேல் பயிற்சி என்ற நினைப்பில் அலட்சியமாக இருக்கும் என்பதே. ஆனால் இஸ்ரேலின் தென்பகுதி இராணுவத் தளபதி ஏரியல் ஷரோன் எகிப்தியர்களை நம்ப மறுத்தார். தன் படைகளைத் தயாராகவே வைத்திருந்தார். இதனாலும் எகிப்தின் தாக்குதல் தள்ளிப்போனது ஒவ்வொரு முறையும் தாக்கப் போகிறோம் என்று அறிவிப்பார்கள். ஆனால் தாக்கமாட்டார்கள். 1973 செப்ரெம்பர் மாதம் எகிப்து தன் மீது தாக்குதல் நடத்தும் என்று இஸ்ரேல் முழுமையாக எதிர்பார்த்தது. ஆனால் எப்போது என்பது தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்து வழக்கம் போல இராணுவ வண்டிகளில் டயர் பஞ்சர், ப்ரேக் பிடிக்கவில்லை, பீரங்கி சுடவில்லை என்று பாடிக் கொண்டிருந்தது. இஸ்ரேல் இதை நம்பவும் முடியாமல் எச்சரிக்கையையும் கைவிடாமல் இருந்தது. ஆனால் இப்படிப்பட்ட நிலையில் முழு இராணுவத் தாக்குதல் சாத்தியமில்லை. அப்படியே தாக்கினாலும் சமாளிக்கலாம் என்று இருந்தார்கள். இஸ்ரேல் இராணுவத்தினர் 1973ம் ஆண்டு செப்ரெம்பர் 25ம் திகதி அன்று ஜோர்டான் மன்னர் ஹீசைன் இரகசியமாக டெல் அவிவ் வந்தார். இஸ்ரேலியப் பிரதமர் கோல்டா மேயரிடம் சிரியா கோலன் மலைப்பகுதிகளில் தாக்குதல் நடத்தவிருப்பதாகச் சொன்னார். "அப்படியானால் எகிப்து என்ன செய்யும்" என்று கேட்டார். கோல்டா மேயர் "அவர்கள் சிரியாவுடன் ஒத்துழைப்பார்கள்" என்றார் ஹீசைன்.

1973ம் ஆண்டு அக்ரோபர் 1ம் திகதி அன்று இஸ்ரேல் இராணுவ உளவுத்துறையின் ஓர் அதிகாரி. எகிப்து முழு இராணுவத் தாக்குதல் முஸ்தீபுக்கு ஒரு மறைப்பாகப் பயிற்சியைப் பயன்படுத்துகிறது என்று அறிக்கை தந்தார். உயர் அதிகாரிகள் கத்துக்குட்டிகள் பயந்துவிட்டன என்று சொல்லி அறிக்கையைக் குப்பைத் தொட்டியில் போட்டனர்.

1973ம் ஆண்டு அக்ரோபர் 4-5 ம் திகதிகளில் எகிப்து, சிரியா உள்ளிட்ட நாடுகளில் இருந்த சோவியத் தூதராக அதிகாரிகள் வெளியேறினர். இது இஸ்ரேல் இராணுவத் தலைவரை யோசிக்க வைத்தது. ஆனாலும் அவர் அலட்சியம் காட்டினார். ஒரு வாரம் முன்பு தனக்குக் கிடைத்த எகிப்தியத் தாக்குதல் குறித்த தகவலை உளவுக் குழுவிடமும் பிரதமரிடமும் பகிர்ந்து கொள்ளாது விட்டார். 1973ம் ஆண்டு அக்ரோபர் 5ம் திகதி லண்டன் சென்று அக்ஷர.்.ப் மார்வானைச் சந்தித்தார். அப்போதும் மார்வான் மறுநாள் தாக்குதல் நடக்கும் என்றும் அது சூரியன் மறைந்த பின் நடக்கும் என்றும் தனக்குச் சொல்லித் தரப்பட்டதையே சொன்னார். மறுநாள் யாம் கிப்பர் தினம் இஸ்ரேலின் இராணுவத்தில் மிகக்குறைந்த அளவிலான படைகளைத் தவிர பிறர் விடுமுறையில் சென்றிருந்தனர். அப்போது தாக்குதல் நடத்தினால் படைதிரட்டவே இஸ்ரேலுக்கு இரு நாட்கள் தேவைப்படும் அதற்குள் போர் முடிந்துவிடும் என்பது அவர்களது திட்டமாகயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா தன் பங்குக்கு இஸ்ரேல் முதலில் தாக்கினால் குண்டூசி கூடத் தரமாட்டோம் என்று கூறியது. ஆனால் கிடைத்த ஒரு நாளில் விரைவாகத் தயாரானது இஸ்ரேல் விடுமுறை என்பதால் சாலைகளில் நெரிசல் இல்லை, இராணுவ வண்டிகள் ஆட்களையும் தளபாடங்களையும் விரைந்து கொண்டு போய்ச் சேர்த்தன. ஓரளவுக்குத் தயாராக இருந்தது. இஸ்ரேல் ஆனால் சூரியன் மறைந்த பிறகு தாக்குதல் என்று சொன்ன எகிப்து மதியம் 2 மணியளவில் படைகளைக் களமிறக்கியது. இப்படியாக அதோ இதோ என்று சொல்லி எதிரியை ஏமாற்றி எதிர்பாரத போது நடத்தியதே சென்ற நூற்றாண்டின் முதல் பத்ரு தாக்குதல் ஆகும்.

## காம்ப் டேவிட் உடன்படிக்கையும் வெளிநாட்டு உறவுகளும்

நாசர் தசாப்தத்திலிருந்தே சதாத் வெளிநாட்டு உறவுகளை தொடக்கி வைத்தார். ஜனாதிபதி சதாத் இஸ்ரேலுடனான மோதல் கொள்கைகளிலிருந்து எகிப்தை விடுவித்தார். சினாய் விடுவிப்பு உடன்படிக்கையைத் தொடர்ந்து 1974, 1975 களில் சதாத் ஒரு புதிய ஆரோக்கியமான ஆரம்பத்தை தன்னுடைய 1977 ஜெருசலேம் விஜயத்தின் மூலம் ஏற்படுத்தினார். இது காம் டேவிட் மாநாட்டில் பங்குபற்றுவதற்கான அழைப்பை ஐக்கிய அமெரிக்கா சதாத்திற்கு விடுப்பதற்கு வழிவகுத்தது.

அன்வர் சதாத் அவர்களால் செய்து கொண்ட எகிப்து - இஸ்ரேல் இடையிலான உடன்படிக்கை என்பது திடீரென ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல. அந்த வகையில் இஸ்ரேலுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்னரே எகிப்து அந்நாட்டுடன் தொடர்பினை கொண்டிருந்தது. அந்த வகையில் எகிப்தோடு சமரசம் ஏற்படுத்துவதற்காக இஸ்ரேலியப் பிரதமரான மெனாசெம் பெகீனுரின் அழைப்பின் பெயரில் 1977ம் ஆண்டு நவம்பர் மாதம் சுமார் முப்பது வருட கால பகைமையை விட்டு அன்வர் சதாத் இஸ்ரேலுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இவ்வாறு சதாத் சகல அரபு நாடுகளது தகராற்றில் அனைத்து அரபு தரப்புகளின் சார்பில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஜெருசலத்துக்கு பயணத்தை மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அன்வர் சதாத் ஜெருசலத்துக்கு புறப்படுவதற்கு முன்னர் எகிப்தின் தேசிய சட்டமன்றில் பின்வருமாறு உரையாற்றினார்.

"இஸ்ரேல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி தனியான ஒப்பந்தம் செய்து கொள்ள, நான் அங்கு செல்லவில்லை. ஒரு கூட்டு அரபு இஸ்ரேலிய உடன்பாடு ஏற்படுவதற்கு செப்பனிடவே நான் முயன்று வருகிறேன். அத்துடன் பாலஸ்தீனப் பிரச்சிசைக்கு ஒரு திருப்திகரமான தீர்வு காணுவதே தலையாய முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு சுதந்திர பாலஸ்தீன அரசை அமைப்பதே இதற்கு ஒரே பரிகாரம் எனவும் 1967 முதல் இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள எல்லா பிரதேசங்களிலிருந்தும் அது வாபஸ் ஆகவேண்டும் என்ற அடிப்படை நிபந்தனையிலிருந்து நான் ஒரு போதும் பிறழமாட்டேன்" என்று கூறி அப்பயணத்தை மேற்கொண்டார். இஸ்ரேல் 1977 இல் நடைபெற்ற தேர்தலில் மெகின் வெற்றி பெற்று பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். எகிப்திய ஜனாதிபதியின் ஜெருசலத்துக்கான இருநாள் விஜயத்தின் போது இஸ்ரேலிய பாராளுமன்றமான நெஸ்ட்டிலும் அவர் உரையாற்றினார். மத்திய கிழக்கு பிரச்சினையில் இது புதிய சூழலை உருவாக்கியதோடு இஸ்ரேலையும் அதன் இருப்பையும் அவர் அங்கீகரித்தவராகவும் இருந்தது.

இவ்வாறு அன்வர் சதாத் இஸ்ரேலுக்கு சென்று இஸ்ரேலிய பாராளுமன்றமான நெசட்டிலும் உரையாற்றினார்.

"பிறருக்கு சொந்தமான இடங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் ஒரு போதும் அமைதியை நிலை நாட்ட முடியாது. 1967 பேரில் அராபியர்களிடமிருந்து பிடித்த இடங்களை விட்டுவிடுவதுதான் நியாயமான அமைதியை நிலைநாட்டுவதற்கு சிறந்த வழி. பாலஸ்தீனர்களை சேர்க்காமல் அமைதி காணமுடியாது. பாலஸ்தீனர்களுடைய இடத்தை கொடுத்து அவர்களுக்கு என தனி ஒரு நாடு உருவாவதை ஆதரிப்பதும், அகதிகளாக சென்றவர்களை திரும்ப பாலஸ்தீனத்துக்குள் அனுமதிப்பதுதான் அமைதிக்கான வழி" எனவும் கூறினார். ஆனால் இதனை இஸ்ரேலியப்பிரதமர் ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு சதாத் இஸ்ரேலுக்கும் எகிப்திற்கும் இடையில் சமரசம் ஏற்படாமல் இருந்ததில் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜிம்மி காட்டர் தனது வெளியுறவுத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் மூலம் இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சரும் எகிப்தின் வெளியுறவுத்துறை அமைச்சரும் இங்கிலாந்தில் சந்தித்துக்கொள்ள ஏற்பாடு செய்தார். "சினாயில் யூதக் குடியிருப்புக்கள் அகற்றப்படவேண்டும் என்றும் இஸ்ரேல் சினாயை விட்டு முழுவதுமாக வெளியேறவேண்டும் என்றும் பாலஸ்தீனப் பிரச்சினையையும் இந்தப் பேச்சு வார்த்தையோடு சேர்க்க வேண்டும்" என எகிப்தியரால் கோரப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிந்தது.

இதற்கு பிறகும் சதாத்தும் பெகினும் நேரில் சந்தித்துப் பேசினால் நிச்சயம் ஓர் உடன்பாடு ஏற்படும் என்று நம்பிய ஜிம்மி காட்டர் அமெரிக்காவில் வாசிங்டனுக்கு அருகிலுள்ள கேம்டேவிட் எனும் இடத்தில் இருவரும் சந்தித்திக்கொள்ள ஏற்பாடு செய்தார். பெகினோடு அவருடைய வெளியுறவுத்துறை அமைச்சரும் பாதுகாப்பு அமைச்சரும் வந்திருந்தனர். எப்படியாவது இந்தப் பேச்சுவார்த்தையில் பொதுவான ஒரு கொள்கை உடன்பாடு செய்துகொள்ள வேண்டும் எனவும் அதன் பின்னால் தீர்வுகளை முடிவு செய்யலாம் எனவும் அவர்கள் நினைத்தனர். பெகினைப் பொறுத்தவரையில் பாலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பவில்லை.

"சினாயை விட்டு இஸ்ரேல் வெளியேறுவதோடு குடியிருப்புக் களையும் அகற்றிக் கொள்ளவேண்டும் என்றும் ஆக்கிரமித்துக் கொண்ட கிழக்கு ஜெருசலம் இஸ்ரேல் விட்டு விடவேண்டும் என்றும் பாலஸ்தீனத்தை விட்டு அகதிகளாக சென்றவர்களுக்கு அவர்களுடைய இடங்களிற்கு திரும்பும் உரிமை வழங்கப்படவேண்டும்" என்றும் சதாத் கோரிக்கை விடுத்தார். இம்மாதிரி நிபந்தனைகள் வெற்றியடைந்த நாடு தோல்வியடைந்த நாட்டுக்கு போடும் நிபந்தனைகள் வெற்றியடைந்த நாடு தோல்வியடைந்த நாட்டுக்கு போடும் நிபந்தனைகள் போல் இருக்கின்றன என கூறிய பெகின் பேச்சுவார்த்தையிலிருந்து விலகினர். இதனால் இப்பேச்சுவார்த்தை தோல்வியுற இஸ்ரேல் தான் காரணம் என கூறமுற்பட்டபோது ஜிம்மிகாட்டரின் முயற்சியால் காம்டேவிட்டில் 13 நாட்கள் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையால் காம்டேவிட உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாக இரு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது. அவையாவன :

* மத்திய கிழக்கில் அமைதி நிலவுவதற்குரிய வரைவுச்சட்டத்தை உள்ளடக்கியது.

* இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே அமைதி நிலவுவதற்குரிய வரைவுச் சட்டத்தை உள்ளடக்கியது.

முதலாவது ஆவணம் மத்திய கிழக்கில் அமைதி நிலவதிட்டம் வகுத்தது. அதற்கு முதல் வெஸ்ட்பேங்கிலும் காஸாவிலும் என்ன செய்யவேண்டும் என்பதை இது குறிப்பிட்டது. இந்த வகையில் மேற்குகரையிலும், காஸாவிலும் சுயாட்சி அமைக்க பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க இரு நாடுகளும் விதிகளை நிர்ணயித்தது.

இரண்டாவதாக சுயாட்சி நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் 5 ஆண்டுகள் அந்தப் பகுதிகளை நிர்வகிக்கும் பொறுப்பை விட்டுவிடுவது என்றும் அச்சமயத்தில் இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து தன் படைகளை குறிப்பிட்ட பாதுகாப்பு மண்டலங்கள் வரை திரும்ப பெறுவது என்றும் இதற்கு பிறகு ஒரு ஆண்டிற்குள் இந்த மூன்று பகுதிகளில் வசிக்கும் பாலஸ்தீனப் பிரதிகளும் சேர்ந்து இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கும் பகுதிகள் இறுதி அரசியல் அந்தஸ்தை நிர்ணயிப்பது எனவும் தீர்மானித்தது. இவ் ஒப்பந்தம் எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் அமைதியை ஏற்படுவத்துவதாக அமைந்தது. அதில் பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தது.

* சினாய் பகுதியிலிருந்து இஸ்ரேல் விலகுவது

* அங்கு பாதுகாப்பிற்காக இராணுவ ஏற்பாடுகளை செய்வது

* சுயஸ் கால்வாயை பயன்படுத்துவதற்கு உடன்பாடு ஏற்படுத்துவது

இவ்வாறு இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையில் அமைதி ஏற்படுத்துவதற்கு உடன்பட்டாலும் மேற்குகரையிலும் எகிப்திலும் தொடர்ந்து யூதக் குடியிருப்புக்களை அமைக்க போவதில்லை. என பெகின் உறுதியளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிபந்தனைகளிற்கு பிறகு 1979 பங்குனி 26ம் திகதி வெள்ளை மாளிகையில் இரு நாடுகளிற்கும் இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதில் பெகினும் சதாத்தும் கையெழுத்திட்டு கைகுலுக்கிக் கொண்டார்கள். இதனை நிறைவேற்றுவதற்கு ஒரு ஆண்டுகள் தேவைப்பட்டது. இவ் ஒப்பந்தமானது இஸ்ரேலின் விஸ்தரிப்புக் கொள்கையின் நலன்களுக்கு உதவுமுகமாகவும் அரபு நாடுகளிற்கு எதிராக பல ஆக்கிரமிப்பு செயல்களை மேற்கொண்டு தனது ஆக்கிரமிப்பின் பலன்களை பாதுகாக்க விரும்பும் இஸ்ரேலுக்கு வழங்கப்பட்ட ஒரு பரிசாக இதனை குறிப்பிடுகின்றனர்.

அன்வர் சதாத் அவர்கள் மேற்கொண்ட "காம்டேவிட்" உடன்படிக்கை அரேபியர்களிற்குப் பிடிக்கவில்லை. அதனால் அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டு, அன்வர் சதாத் அவர்கள் எகிப்திய இராணுவப் படைகள் 33வது பிரிவு பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்ட போது அதன் பார்வையாளராக இருந்தவர் அன்வர் சதாத்தினை 1981-ஒக்டோபர் 06 அன்று கொலை செய்தனர்.

அன்வர் சதாத் அரபு தேசியத்திற்கு செய்து கொண்ட துரோகம் என்ன என்பதனை நோக்கும் போது அரபு மக்களின் நலன்களினை எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் காட்டிக் கொடுத்தமை. அரபு பிரதேசத்தில் ஓர் இஸ்ரேலியப் படை வீரன் இருக்கும் வரையிலும் தான் அந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடப் போவதில்லை என்றும் பாலஸ்தீனர்களின் உரிமையினைப் பெறுவது நமது நாட்டிற்கு சினாய் திரும்பக் கிடைப்பதனைவிட முக்கியமானது என்று கூறியமை.

1977 நவம்பர் 9ம் திகதி தேசிய சட்ட மன்றத்தில் எகிப்திய ஜனாதிபதி சதாத் வெளியிட்ட அறிக்கை அதாவது அவர்கள் நாட்டுக்குச் சென்று அவர்களுடன் சமாதானத்தினைப் பற்றி மேற்கொண்ட அறிக்கையானது அரபு உலகத்தினை அதிர்ச்சியையும், திகைப்பையும் கொள்ளச் செய்தது. ஐ.நா கட்டளைகளை மீறி ஜெருசலேம் நகரில் அவர் மேற்கொண்ட செயற்பாடானது அரபு தேசத்தினை திகைப்படைய வைத்தது. உள்நாட்டுக் கொள்கைகளில் தலைகீழான செயற்பாடுகளை செய்ததன் காரணமாக அரோபிய தேசத்திற்கும் இவை பெரும் மாறுதலான செயற்பாட்டினை உண்டு பண்ணவே அரேபியர்கள் அன்வர் சதாத் மீது எதிரான செயற்பாட்டினை மேற்கொள்ளத் தயாரானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு நாடுகளினை சுரண்டும் செயற்பாடுகள் என்பவற்றினையும் மேற்கொண்டனர். இஸ்ரேலுடன் காம்டேவிட் எனும் ஒப்பந்தம் மேற்கொள்ளுவதற்காக சோவியத் யூனியன் மற்றும் அமெரிக்காவினது உதவியினை நாடிக் கொண்டமையானது அரேபிய தேசியத்திற்கு பாரிய ஓர் இக்கட்டான சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொடுத்தது. இக் கொள்கைகள் என்பவற்றிற்கு அரபு நாடுகள் பெரும் எதிர்ப்புகள் என்பவற்றினை ஏற்படுத்திக் கொடுத்தது.

அமெரிக்காவின் ஆதரவினைத் திரட்டும் முகமாக உங்களை நான் ஒருபோதும் கைவிடவே மாட்டேன் என்று கூறியமையானது அரேபியரிற்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. பாலஸ்தீன அரபுகள் தமது சொந்த அரசினை அமைத்துக்கொள்வதற்கு அனுமதியளிக்க வில்லை என்பது இஸ்ரேல் ஒப்பந்தம். இது அரபு மக்களின் நலன்களைக் காட்டிக் கொடுப்பது மட்டுமல்லாமல் எகிப்தின் சொந்த உரிமையினைக் கூட மீறுகிறது. பாலஸ்தீன அரபு மக்களினை என்றைக்கும் அகதிகளாகவும், நாடற்றவர்களாகவும் நாதியற்றவர்களாகவும் உழலும்படி அன்வர் சதாத்தின் செயற்பாடுகள் அமைந்தன.

இவ்வாறான செயற்பாடுகளினை அன்வர் சதாத் அவர்கள் செய்ததன் அடிப்படையில் அராபிய தேசத்திற்கு மாபெரும் இக்கட்டான் சூழ்நிலையினைத் தோற்றுவித்தது. இதன் பின்னணியிலேயே அன்வர் சதாத் அவர்களை பழி வாங்க வேண்டும் என்று நினைத்து துப்பாக்கி முனையில் அவரைச் சுட்டு வீழ்த்த எகிப்திய தலைவர்கள் முடிபுசெய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# யசீர் அர·்.பாத்[15]

## (24 .09.1929 - 11.11.2004)

### அறிமுகம்



யசீர் அராபாத் 1929 செப்டெம்பர் 24ம் திகதி ஜெருசலேமில் பிறந்தார். இவர் தனது வாழ்வில் ஏறக்குறைய நாற்பது வருடம் பாலஸ்தீன விடுதலைக்காக போராடினார். அப்துல் ராஹஷிப் அராபாத் ஆல்குதா என்ற இயற்பெயருடன் பாலஸ்தீன விடுதலைக்கு உரம் கொடுத்த மனிதன் அராபாத் என்றால் அச்சொல் மிகையாகாது. ஆயுதப் போரிலும், அரசியல் போரிலும் சளைக்காது தளராது தைரியத்துடனும் விசுவாசத்துடனும் பாடுபட்ட அவரது ஆளுமை பேசப்பட வேண்டியது. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் விடிவெள்ளியாகவும் விடுதலைப் போராட்ட தலைமைகளிற்கு வகிபங்குடையவராகவும் திகழ்ந்தார். அவர் ஒரு சரித்திரம். பாலஸ்தீன வரலாற்றின் பங்கினை நிரப்பியவர்.

### இளமைக் காலமும் ஆளுமையும்

யசீர் அர·்.பாத்தின் தந்தை முகம்மது அப்துல் ரஹ்மான் ஒரு வணிகர். இவர் பல ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்துவிட்டு 1940 வாக்கில் பாலஸ்தீனிற்கு திரும்பினார் அராபாத் காஸாவில் வளர்ந்தார். அவருடைய தாய் இறந்த பிறகு அவரது தந்தை மறுமணம் செய்து

[15] எஸ்.சரண்ராஜ், வை.சுகன்யா, பி.சியந்தினி, பி.சுபாசினி, எம்.என்.எவ். அஸ்ரா ஆகிய மூன்றாம் வருட அரசறிவியல் துறை மாணவர்களால் முன்வைக்கப்பட்ட அளிக்கையின் தொகுப்பு-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இவரை ஜெருசலேமிற்கு அனுப்பி வைத்தார். அங்கு அரபாத் தாய் மாமனாருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் போது இளமையில் அரபு மக்களின் வாழ்வியல் முறைகளுடன் இணைந்திருந்தார். அவரின் ஜெருசலேம் வாழ்வு மிகவும் அசௌகரியமானதாக இருந்தது. 1948, 1949இல் நடந்த அரபு-இஸ்ரேல் போருக்குப் பிறகு பாலஸ்தீனர்களைப் போல் அகதியாக காஸாவிற்கு திரும்பினார். அப்படி ஓடிவந்த அகதிகள் தங்களது சொந்த வீடுகளிற்கு திரும்புவதற்காக ஐ.நா உடன்படிக்கைகள் உதவும் என்று எதிர்பார்த்தவர்களில் அர.்.பாத்தும் ஒருவர். ஆனால் உதவவில்லை. பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டதும் சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் ஒரு ரொட்டித் துண்டுக்காக மக்கள் அலைவதைக் கண்டு வெறுப்படைந்தார்.

பாடசாலைக்கு செல்லவேண்டிய தம்மோடு ஒத்த சிறுவர்கள் ஆயுதத்தோடு போராடுவதைக் கண்டு மனம் நொந்தார். தனது படிப்பினை முழுநிறைவாக மேற்கொள்ள முடியாதென தனது மூத்த சகோதரி வாழ்ந்த ஹெய்ரோவிற்கு சென்று சகோதரியின் பாதுகாப்பில் வாழ்ந்தார். இருந்த போதும் முழு நிறைவான கல்வியை அடைய முடியாது ஜெருசலேம், ஹெய்ரோ என குழப்பம் அடைந்து தனது பதினாறாவது வயதில் உள்ளூர் புரட்சிகர அமைப்பில் ஆயுதம் தரித்த போராட்ட வீரனாக மாறினார்.

இளமைப்பருவத்திலே இருக்கும் போதே அவர் பாலஸ்தீன மாணவர்கள் இயக்கத்தில் இணைந்திருந்தாலும் அரசியலில் முழுவதுமாக ஈடுபட்டது கெய்ரோவில் படித்துக் கொண்டு இருக்கும் போதே. 1952இல் அவர் பாலஸ்தீன மாணவர் கூட்டமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். புரட்சிகர சிந்தனையுடன் பாலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்பிற்கு ஆயுதங்களை கொள்வனவு செய்து கடத்தி வந்து எல்லையோர பாலஸ்தீன விடுதலை அமைப்பிற்கு கொடுத்தார். அதனோடு கல்வியிலும் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்.

ஹெய்ரோ பல்கலைக்கழகத்தில் கட்டுமான பொறியியல் துறையில் பட்டப் படிப்பினை மேற்கொண்டு பூர்த்தி செய்து கொண்ட அராபாத் மறைமுகமாக போராட்டத்திற்கான ஆயுதப் பயிற்சியிலும் ஈடுபட்டார் இதன் காரணமாக எகிப்தில் ஒரு தடவை அராபாத் கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டார். பின்பு டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை பூர்த்திசெய்த மாணவர் மத்தியில் பாலஸ்தீன மக்கள் பற்றியும் போராட்டங்கள் பற்றியும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் ஹெய்ரோவிற்கு திரும்பினார் ஹெய்ரோ பல்கலைக்கழகத்தில் மீண்டும் பட்ட மேற்படிப்பினை மேற்கொண்டார்.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழகம் அவரை முழுமையாக மாற்றியது. தனக்கு கிடைத்த தனிமையை சரியாக பயன்படுத்திக் கொண்டு பாலஸ்தீன மக்களைக் குறித்து சிந்திக்கத் தொடங்கினார். அமெரிக்காவின் இஸ்ரேல் ஆதரவு நிலையை மிக நெருக்கமான ஆராய்ந்தார். யூதர்களின் பலம் என்ன? பலவீனம் என்ன? அமெரிக்கா போன்ற முதலாளித்துவ தேசங்கள் அவர்களை ஏன் ஆதரிக்கின்றார்கள்? யூதர்களை விரட்டியடித்த ஐரோப்பா ஏன் அவர்களை இப்போது ஆதரிக்கின்றது? அரேபியர்களின் நியாயம் என்ன? அது ஏன் மற்றவர்களிற்கு புரிவதில்லை? அராபியர்களின் நியாயத்தை காட்டிலும் யூதர்களின் நியாயம் ஏன் பொருட்படுத்தத் தகுந்ததாக மற்றவர்களிற்கு தோன்றுகின்றது. எந்தச் சார்பும் இல்லாது மிகவும் ஆழமாக யோசித்தார்.

சரித்திர நியாயங்களை மேலை நாடுகள் பொருட்படுத்துவதில்லை. இவர்கள் மதத்தினடிப்படையில் இஸ்லாமியர்களை ஒரு போதும் ஏற்கமாட்டார்கள். தேசத்தை மீட்டெடுக்க ஆயுதம் தான் சிறந்த வழி அராபியர்களிற்கு முறையான பயிற்சி வேண்டும் என உணர்ந்தார்.அதனடிப்படையில் பாலஸ்தீனப் பிரச்சினைகளைப் பற்றி மாணவர்களிடையே பேசிக் கொண்டதன் மூலம் சாத்தியமாக்க வேண்டும் என்றுணர்ந்து நிறைய தேசங்களிற்கு பயணம் மேற்கொண்டு இஸ்ரேலியர்களது அட்டுழியங்களை வெளிப்படுத்தி வந்தார்.

அராபாத் பாலஸ்தீன மாணவர் பேரவையின் சார்பில் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்த போது தான் கெய்ரோவில் அவரது தந்தை காலமானார். தகவல் வந்து சேர்ந்த போது அராபாத் ஒரு மாணவர் கூட்டத்தில் பேசுவதற்காக தயார் செய்து நண்பர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தார். 1956இல் அராபாத் தன் உயர்நிலை பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார். அவருக்கு உடனே எகிப்து இராணுவத்தில் பொறியியலாளராக வேலை கிடைத்தது. சில காலம் சுயஸ் கால்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தில் பணியாற்றயபடி ஓய்வு நேரத்தில் தனது ரகசிய நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டார்.

எகிப்தில் வேலை கிடைத்து ஒரு வருடம் முடிவடைவதற்குள் குவைத்தில் பொதுப் பணித் துறையில் பொறியியலாளராக வேலை கிடைத்தது குவைத்திற்கு போய் வாழ முடியுமானால் தனது நடவடிக்கைகளிற்கு சிரமம் இருக்காது என உணர்ந்த அராபாத் குவைத்திற்கு சென்று அங்கு தனக்கென்று சொந்தமான கட்டுமாண நிறுவனத்தை தொடங்கி அந்த நிறுவனத்தின் பாதுகாப்பின் கீழ் பாலஸ்தீன விடுதலைக்கான ஆயுதங்களை செய்யத் தொடங்கினார்.

பகலில் அவர் ஒரு பொதுப் பணித்துறை ஊழியர் ஆனால் இரவிற்கு வேறு முகம் இருந்தது. அங்கு அராபாத் தனக்கென்று ஒரு வீட்டை அமைத்திருந்தார். அது மிகவும் மதிநுட்பமாக அமைக்கப்படு கின்றது. அதாவது சற்றே ஒதுக்குப் புறமான பகுதி ஒன்றில் மாடியும் தரைத் தளமும் இருந்த ஒரு சிறிய வீடு அராபாத் அந்த வீட்டின் மாடிப் பகுதிக்கும் தரைப் பகுதிக்கும் நடுவில் மரத்தாலான இன்னொரு ரெடிமேட் தளத்தை தானே செய்து எடுத்துக் கொண்டார். கீழிருந்து அதற்கு போக முடியாது ஆனால் மாடியில் இருந்து இறங்கி வரமுடியும். இந்த இரகசிய அறையில் தான் அராபாத் என்கின்ற புரட்சியாளன் முதன் முதலில் தனி ஒருவனாகத் தொடங்குகிறான்.

அராபாத்திற்கு ஆயுதப் பயிற்சி அவ்வளவாக கிடையாது அதற்கு இசைவாக தன்னை தயார்படுத்திக் கொள்ளும் நோக்கில் சில இரகசியக் குழுக்களில் சேர்ந்து பயிலத் தொடங்கினார். அலுவலக ஓய்வு நேரங்களிலும் அவ்வப்போது தானே எடுத்துக் கொள்ளும் ஓய்வு நேரங்களிலும் தினசரி அதிகாலை வேளையிலும் இந்தப் பயிற்சிகளில் அராபாத் ஈடுபட்டுக் கொள்ளுவார். அராபாத் துப்பாக்கி சுடக் கற்றுக் கொண்ட சில தினங்களிலே அராபாத்தின் தேர்ச்சி என்பது பிரமிக்கத்தக் கதாக அமைந்திருந்தது.

தான் கற்றுக் கொண்டதை தன் நண்பர்களிற்கும் கற்றுக் கொடுத்தார். துப்பாக்கி சுடுதல், பதுங்கி இருந்து தாக்குதல் (கொரில்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல்) குண்டு வைத்தல், குண்டு வீசுதல் போன்ற கலைகளில் அராபாத் நிகரற்ற திறமைசாலி என்று சொல்லலாம். இக்கலைகளை தமது நண்பர்களிற்கும் கற்றுக் கொடுத்த தன் பயனாக மிகக் குறுகிய காலத்தில் அவரது குழுவில் சுமார் ஐம்பது போராளிகள் தயாரானார். இதன்படி அராபாத் அல்-பாதா என்ற அமைப்பில் இணைந்தார்.

## அராபாத்தின் இராணுவ ரீதியான நடவடிக்கைகள்

ஐம்பதுகளின் தொடக்க காலத்தில் அராபாத் "அல்பாதா" என்கின்ற அமைப்பை உருவாக்கினார் "அல்பாதா" என்கின்ற அரபுச் சொல்லுக்கு "புனித போர் மூலம் புது வெற்றி காண்போம்" அர்த்தம் உண்டு.

அராபாத் தோற்றுவித்த அல்பாதாவை பிற தீவிரவாதச் குழுக்களோடெல்லாம் ஒப்பிட முடியாது. அல்குவைதா ஹமாஸ் போன்ற மாபெரும் குழுக்களால் எல்லாம் முடியாத காரியங்களை இந்த ஐம்பது பேர் கொண்ட குழுவொன்று அலட்சியமாக செய்து முடிக்கும் வல்லமை பெற்றதாக இருந்தது.

அதிக தொழில்நுட்ப வசதிகள் எதுவும் அல்பாதாவிற்கு கிடையாது. குறைந்தபட்ச ஆயுதங்கள் மட்டும் தான். ஆனால் அவர்களிடம் இருந்து கோபமும் தீவிரமும் வேகமும் வெறியும். அராபாத் என்கின்ற ஒரு சரியான தடுக்கும் சக்தியால் கட்டுப்படுத்தப்பட்டு புரட்சிப் பாதையில் துல்லியமாக திசை திருப்பி விடப்பட்டதால் நம்பமுடியாத சாதனைகளை புரியக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஐம்பதுகளில் அல்பாத்தா என்றால் மத்திய கிழக்கு முழுவதும் அலறும் அமைப்பாக மாற்றினார்.இது இவ்வாறு இருக்க பி.எல்.ஓ. என்கின்ற அமைப்பு அதாவது பாலஸ்தீன விடுதலை இயக்கம் *(Palestine Liberation Organization)* 1964ம் ஆண்டு யூன் மாதம் 2ம் திகதி உருவாக்கப்பட்டது. 1969இல் அராபாத் இதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார். 1967ம் ஆண்டு யுத்தத்தின் அரபு தேசங்கள் இணைந்து இஸ்ரேலுடன் போர் புரிந்தும் இஸ்ரேலை வெல்ல முடியாது போகவே இஸ்ரேலுக்கு எதிரான முழுநீள யுத்தத்தை வழிநடத்தும் பொறுப்பு பி.எல்.ஓ. வின் தலையில் ஒப்படைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவரையும் பாதாவை வழிநடத்திய அராபாத் 1969 பெப்ரவரி 3ம் திகதி 18 இயக்கங்களை ஒன்றிணைத்து பி.எல்ஓ. இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கின்றார். இத்தனை இயக்கங்களை கட்டிக் காப்பது மட்டுமல்ல சரியான முறைப்படுத்தப்பட்ட போர்ப் பயிற்சி அளிப்பது. இஸ்ரேலை அச்சுறுத்துவது மட்டுமல்லாமல் சர்வதேச அளவில் கவனம் கவர வழி செய்வது என்று அராபாத்தின் பொறுப்புக்கள் நிறையவே காணப்பட்டன.

அரசாங்கங்களும், அரபு லீக்கும், ஐ.நா சபையும் கைவிட்ட பிறகு இழந்த நிலத்தை திருப்பிப் பெற பாலஸ்தீன மக்களிற்கு ஆயுதப் போராட்டத்தை தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் போராளி இயக்கங்கள் தீவிரவாத செயலில் ஈடுபட ஆரம்பித்தன. குறிப்பாக யசீர் அராபாத் தலைமைப் பொறுப்பிற்கு வந்து ஐந்தாம் ஆண்டு அதாவது 1974ம் ஆண்டு பி.எல்ஓ. வின் குழுவினர் இஸ்ரேலில் உள்ள மாலாட் என்கின்ற இடத்தில் ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் புகுந்து கையெறி குண்டுகளை வீசியிருந்ததோடு குழந்தைகளை ஈவிரக்கம் இல்லாமல் கொன்று வீசினார்கள்.

அராபாத் பொறுப்புக்கு வந்த ஆரம்ப வருடங்களில் மிகக் கவனமாக இஸ்ரேலிய இராணுவம், காவல்துறை போன்ற இலக்குகளின் மீது மட்டுமே தாக்குதல் நடாத்தப்பட்டது. இது இஸ்ரேலுக்குள்ளும் வெளியிலும் பல்வேறு தேசங்களில் பி.எல்ஓ. வின் போராளிகளின் கவன ஈர்ப்புக்காக ஏராளமான தாக்குல் சம்பவங்களில் ஈடுபட ஆரம்பித்தார் கள். ஆனால் மிகக் கவனமாக அத்தனை தாக்குதல்களுமே யூத இலக்குகள் மீது மட்டும் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள். உலகம் முழுவதும் பி.எல்.ஓ வைப் பற்றி பேசிய காலம் அது. யார், என்ன என்கிற விடயம் கூடத் தெரியாமல் அரபாத்தைப் பற்றி பேசினார்கள்.

"இஸ்ரேல் என்கின்ற திடீர் தேசத்தை வேரோடு ஒழித்துவிட்டு அகண்ட பாலஸ்தீனை மறுபடியும் ஸ்தாபிப்பதற்காக நாங்கள் திட்டம் தீட்டுகின்றோம். இதில் எந்த ஒழிவு மறையும் இல்லை. ஆயுதங்கள் மூலம் அச்சமூட்டுவோம். இன விரக்த்தி மூலம் கலவரமூட்டுவோம். யூதர்களை தூங்கவிட மாட்டோம். ஜெருசலேம் உட்பட இஸ்ரேல் எங்களிடமிருந்து அபகரித்த அத்தனையையும் திரும்ப பெறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயமாட்டோம்" என்கின்ற வகையில் அமைந்த யசீர் அராபாத்தின் பிரகடனத்தை அனைவரும் வேத மந்திரம் போல ஏற்றுக் கொண்டனர்.

பி.எல்.ஓ. வின் முக்கிய சக்தியாக விளங்கிய அராபாத்தின் "பாத்தா" இயக்கத்தினர் தாம் கற்ற அத்தனை போர்க் கலையின் சிறப்பு நடவடிக்கைகளையும் மொத்தமாக டெல் அவிவ் நகரில் காட்டியே தீருவது என்ற தீர்மானம் செய்து கொண்டு தினசரி குறைந்தது இரண்டு அல்லது மூன்று தாக்குதல்களை தயங்காமல் மேற்கொண்டு வந்தார்கள். இவ்வாறு பி.எல்ஓ. வையும் அதன் தலைவர் அராபாத்தையும் அவரின் எதிர்க்க முடியாத கொரில்லா யுத்தங்களையும் சமாளிக்க முடியாமல் இஸ்ரேல் திண்டாடியது.

அராபாத் என்கின்ற தனிப்பெரும் தலைவன் பாலஸ்தீன வரலாற்றின் மைக்கல் என்று தான் கூற வேண்டும். இவர் "அராபாத்" என்கின்ற ஒரு மலையின் பெயரையே தனது பெயருடன் இணைத்துக் கொண்டு செயற்பட்டவர். உண்மையிலே இவர் மலைபோன்ற திடகாத்திரமானவர் என்று தான் கூறவேண்டும். அவரது தோற்றம் அவர் அணிந்திருந்த கெபியத் *(Keffith)* என்று அழைக்கப்படும் வெள்ளையில் கறுத்த சுருக்கிட்ட கட்டங்களை கொண்ட துணியை தலையுடன் இறுக இணைக்கும் இரண்டு கறுப்பு வளையங்களுடன் காணப்பட்ட உலகப் புகழ்பெற்ற தலையணி தனி வசீகரத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. அவரது பேச்சுக்களில் இருந்து வெளித்தோன்றும் இரண்டு விரல்களும் வெற்றியின் சிறப்பை காட்டுவதாகவே அமையும். அவர் தனது நெருக்கமான நாட்டுத் தலைவர்களுடன் சந்திப்பில் ஏற்படுத்தும் உணர்ச்சி கலந்த அன்புப் பரிமாற்றம் யாரையும் விரைவில் கவர்ந்துவிடும் தலைமைப் பண்பாளனாக காணப்படுவார்.

அரா பாத் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் பி.எல்ஓவுடன் பொது மக்கள் கைகோக்கும் விதத்தில் ஒரு புதிய திட்டத்தைத் தயார் செய்து கொண்டிருந்தார். கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் செய்யும் திட்டம் ஏதும் அப்போது அவருக்கு இல்லை. மாறாக கத்திக்கு பதில் கல்லும் துப்பாக்கிக்கு பதில் தீக்குச்சியும் ஆயுதமாகலாம் என்று முடிவு செய்தார். மேலோட்டமான பார்வையில் வெறும் மக்கள் எழுச்சி, நீதி கேட்டு நெடும் பயணம் என்பது போலத் தான் தெரியும். எப்படியும் இஸ்ரேலிய இராணுவம் தாக்குவதற்கு வரும். பதில் தாக்குதலுக்கு துப்பாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்காமல் கற்களைக் கொண்டு தற்காப்பு ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம் என்று நினைத்தார்.

இது மக்கள் மத்தியில் இன்னமும் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற்றுத்தரக்கூடும். மேலும் பாலஸ்தீன விடுதலை ஒரு குறித்த இயக்கத்தின் கையில் இல்லை என்று அராபாத் நினைத்தால் இயக்கம் முன்னின்று போராடும் ஆனால் பொது மக்களின் பங்களிப்பு இருந்தாலே வெற்றியடைய முடியும் என்று எண்ணினார்.

இவ் எண்ணத்தின் விளைவாக பிறந்தது தான் "இண்டி..பதா" *(Intifada)* என்கின்ற அரபுச் சொல்லுக்கு எழுச்சியாகும். தன்னார்வ எழுச்சி, உலுக்கிப் பார்த்தல், பொங்கியெழுதல் என்று பலவிதமாகத் தமிழில் அர்த்தம் சொல்லலாம். இஸ்ரேல் அரசையும் இராணுவத்தையும் உலுக்குவது தான் அராபாத்தின் நோக்கம். பி.எல்ஓ. அதனைச் செய்யாமல் பொது மக்களை முன்னிறுத்திச் செய்யலாம் என்கிற யோசனை தான் முக்கியமானது. உலகம் முழுவதும் இண்டி..பதா, இண்டி..பதா என்று உச்சரிக்கும் விதத்தில் இந்த எழுச்சி மிகப் பெரிய வெற்றியை அவருக்கு தேடித் தந்தது.

தோற்றத்தில் இது ஒரு அறப் போராட்டம் போல் இருந்ததால் அர.. பாத்தின் எழுச்சி ஊர்வலங்களில் நடைபெறும் கலவரங்களும் கண்ணீர் புகைக்குண்டு வீச்சும், தீ வைப்பு சம்பவம் சர்வதேச அரங்கில் இஸ்ரேலுக்குத் தான் அவப் பெயரைத் தேடித் தந்தன. உண்மையில் அராபியர்களும் இந்த இண்டி..பதாவில் ஏராளமான தாக்குதல்களை நடாத்தினார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கலவரத்தை ஆரம்பித்து வைத்ததே அராபியர்கள் தான் என்பதை சமகால சரித்திரம் சுட்டிக் காட்டுகிறது.

அராபாத்தின் எண்ணத்திலே உதித்த இண்டி..பதா முதன் முதலில் செயலுக்கு வந்த ஆண்டு 1987 இதற்கு ஒரு வலுவான பின்னணியும் இருந்தது. அந்த வருடம் அக்டோபர்-4 திகதி காஸாவில் ஒரு சம்பவம் நடந்தது. இஸ்ரேலிய இராணுவம் அன்றைய தினம் பாலஸ்தீனிய இஸ்லாமிக் ஜிகாத் என்னும் அமைப்பை சேர்ந்த ஏழு போராளிகளைச் சுட்டுக் கொன்றது. இந்த சம்பவத்தால் காஸா முழுவதும் யுத்தத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. மேலும் ஒரு வந்தேறி யூதர் அரபு பள்ளிச்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Class No. 300.9933
544 GAN
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமியின் பின்புறத்தில் தன் கைத்துப்பாக்கியால் சுட்டார். சற்றும் எதிர்பாராத வகையில் பின்புறம், இருந்து ஒரு குண்டு பாய்ந்து வந்து அவளது இடுப்பு பகுதியில் வெடிக்க நெடுஞ்சாலையில் அந்தக் குழந்தை விழுந்து கதறியதை நூற்றுக் கணக்கான மக்கள் பார்த்து நிலைகுலைந்து போய் நின்றார்கள் இந்த சம்பவம் காஸாவில் பெரும் கலவரத்திற்கான தூபத்தை போட்டது.

கண்ணில் தென்பட்ட யூதர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். அனைத்து யூதக்கடை அலுவலகமும் சூறையாடப்பட்டன. பேரூந்து எரிக்கப்பட்டன. என்ன செய்வதென்று தெரியாமல் இஸ்ரேலிய அரசு விழித்து நின்றது. கலவரத்தை அடக்க இராணுவத்தை அனுப்பியது இன்னும் பிரச்சினையை தூண்டியது. இராணுவம் வந்ததை அறிந்த காஸா மக்கள் கோபத்தின் உச்சிக்கு சென்றார்கள். இதன் விளைவு இஸ்ரேலுக்கு சொந்தமான அனைத்து உடைமையும் அழிக்கப்பட வழி செய்தது. காஸாவில் என்ன நடக்கிறது என்று வெளியே தெரியவில்லை. சர்வதேச சமூகத்திற்கு ஆயிரக்கணக்கான படுகொலைகள் மற்றும் பிணங்கள் கடலில் வீசப்பட்டதாகவும் வதந்தி பரப்பப்பட்டது. இதனால் யுத்தம் போல மிகப் பெரிய யுத்தமாக பரிணமித்தது.

மேலும் 1972இல் கொடுத்த பேட்டியில் அராபாத் இஸ்ரேலை ஒழிப்பது தான் எங்களின் இலக்கு என்று கூறினார். மேலும் இஸ்ரேலிய படை பலத்தை குறைத்து மதிப்பிடுவதன் மூலம் தங்கள் இலக்கை எப்படியும் அடைந்து விடுவோம் என்று விடாப்பிடியாக நினைத்தார். இதனால் பி.எல்ஓ. சில தோல்விகளை சந்தித்தது.

இதன்பின் ஜோர்டானில் இருந்து வெளியேறி பி.எல்ஓ. லெபானில் தன் முகாமை அமைத்தது. அங்கு ஒரு இலட்சம் பாலஸ்தீன அகதிகள் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு மருத்துவ நிலையம், பள்ளி, அநாதை ஆச்சிரமம், காவல்துறை ஆகியவற்றை அமைத்தது. இராணுவ தளங்களை அமைத்து அதில் பல அகதிகளுக்கு இராணுவ பயிற்சி அளித்தது.

Eravur Public Library Municipal Council Batticaloa.

**சர்வதேசமும் அராபாத்தும்**

பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டமும் அரசியல் தலைவர் அராபாத்தும் உலக மட்டத்தின் முன்னுதாரண மானவையாகவே காணப்பட்டன. பனிப்போர்காலம் முழுவதும்

No. 300:9933
Acc 5AA GAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சிகரமான போராட்டமாக பாலஸ்தீன விடுதலை போராட்டமும் அரபுலகத்தின் ஐக்கியமும் அமைந்திருந்தது.

1974 இல் நடந்த அரபு உச்சிமாநாட்டில் பி.எல்ஓ. பாலஸ்தீனத்தின் பிரதிநிதியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. 1974 நவம்பரில் அராபாத் ஐ.நா பொதுச்சபையில் ஒருங்கிணைந்த அரபு பாலஸ்தீன பற்றி பேசினார். இதன்போது மிக நீண்ட உரையொன்றினை ஆற்றிய அராபாத் அவ்வுரையின் இறுதி வரிகளை மீள மீள ஒலித்தார். அந்த வரிகள் வருமாறு:

"இன்று நான் இந்த அவையில் ஒலிவ் கிளையினையும் விடுதலை வீரனின் துப்பாக்கியையும் ஏந்தியபடி வந்திக்கின்றேன் சமாதானத்தின் சின்னமாக இந்த ஒலிவ் கிளையை என்கைகளில் இருந்து நழுவிவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்? என குறிப்பிட்டார்"



"I come bearing an olive branch in one hand, and the freedom fighter's gun in the other. Do not let the olive branch fall from my hand."

Yasser Arafat

இவரது இந்த உரை உலகிலுள்ள எல்லாத் தலைவர்களையும் மக்களையும் ஒருகணம் திரும்பிப்பார்க்க உதவியது. பிராந்திய மட்டத்தில் இருந்த பாலஸ்தீன விடுத்லைப் போராட்டத்தை சர்வதேச எல்லைக்கு கொண்டு சென்றவர் அராபாத் இது அராபாத்தினுடைய சர்வதேச முகத்தைக்காட்டிய பெரும் வரலாற்றுச் சம்பவமாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.எல்ஓ ஐ.நாவினுடைய பார்வையாளராக அங்கீகாரம் பெற்றமை மட்டுமன்றி ஒரு நாட்டின் தலைவரிற்குரிய அங்கீகாரம் உலகமெங்கும் அராபாத்திற்கு கிடைத்தது. பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் சர்வதேச மயமாகியது உலகிலுள்ள அனேக நாடுகளில் தூதராலயங்களை பாலஸ்தீனம் ஏற்படுத்திக் கொள்ள அராபாத்தின் எண்ணம் காரணமாகியது.உலக நாடுகள் எங்கும் அரச தலைவர் போன்று கௌரவிக்கப்பட்டதுடன் பாலஸ்தீனம் தனிநாடு என்ற உணர்வையும் ஏற்படுத்தினார் இதனால் போர்க்களத்தில் மட்டுமன்றி சர்வதேசகளத்திலும் அரசியல் சாதுர்யத்திலும் சளைக்காத தலைவராக அராபாத் விளங்கினார். விடுதலைப்போராட்டத்தினை ஆதரித்த நாடுகள் அனைத்தும் அராபாத்தையும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரித்தது.

அராபாத்தின் பி.எல்.ஓ இயக்கம் ஐ. நாவின் பார்வையாளராக மாறிய அடுத்த ஆண்டே· ஸியோனிசத்தை இன ஒதுக்கல் இயக்கமாக கருதவேண்டும் என்ற ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றியது. 1975ம் ஆண்டுபி.எல்ஓ கூட்டுச்சேரா நாடுகளின் இயக்கத்தில் அங்கத்துவம் பெற்றது. 1976 இல் அரபு லீக்கில் உறுப்பினராக சேர்ந்தது. இஸ்ரேலோடு இராஜதந்திர உறவு வைத்துக் கொள்ளாத பல வளர்ந்து வரும் நாடுகளும் அராபாத்தை அங்கீகரித்தன. ஸ்பெயின் 1985 இல் அதை அங்கீகரித்தது.

ரஷ்சிய, சீனா, கியூபா போன்ற நாடுகளின் தலைவர்களுடன் மிக நெருக்கமான உறவு அராபாத்திற்கு எப்போதும் உண்டு. வளர்ந்துவரும் நாடுகளோடும் மேற்கைரோப்பிய நாடுகளோடும் அராபாத் உறவு வைத்துக் கொண்டாலும் அமெரிக்கா அவருடைய அமைப்பின் வன்முறைச் செயல்களிற்காக அதை தள்ளியே வைத்திருந்தது. ஆனாலும் எமிரேட் நாடுகளில் இருந்தும் சவுதிஅரேபியாவிடம் இருந்தும் அராபாத்தின் அமைப்பிற்கு நிதியுதவி வந்துகொண்டிருந்தது. சோவியத் யூனியன், வடகொரியா, சீனா மேற்கைரோப்பிய நாடுகளிடமிருந்து ஆயுத உதவி கிடைத்துக் கொண்டிருந்தது.

இவ்வாறு சில சர்வதேச நாடுகள் அராபாத்தையும் அதன் போராட்ட அமைப்பையும் ஆதரித்த போதிலும் பாலஸ்தீன மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கலாசாரமும் மேற்குலகத்தின் இயல்பான தந்திரமும் அவரை ஆட்டங்காண வைத்துவிட்டது.

ஐ. நா. சபையில் சர்வதேசத்தின் பொறிக்குள் அகப்பட்டது முதல் ஒஸ்லோ உடன்பாடு வரை வெளி உலகுக்கு தெரியாத ஆபத்தினை எதிர்கொண்டே அராபாத் உலகம் முழுவதும் உலா வந்தார். சர்வதேசத்தின் பிரதான உபாயம் அராபாத்தின் திசையில் அவரை வேகமாக பயணிக்கச் செய்து வேகத்தின் எல்லையில் தாண்டமுடியாத ஒரு தடையை அவருக்குள்ளே ஏற்படுத்திவிடுவது

அராபாத் சர்வதேச சக்திகளின் வலைக்குள் விழும் நிலை படிப்படியாக ஆரம்பித்தது. இந்தக்காலத்தில் சோவியத் யூனியனும் வீழ்ச்சியடைந்தது. இதனால் ஏற்பட்ட ஈராக் மீதான முதலாவது யுத்தத்தில் அராபாத் சதாம் உஷைன் பக்கம் சார்ந்ததினால் அதிக நெருக்கடியை இஸ்ரேல் மட்டுமன்றி அமெரிக்காவும் கொடுக்க ஆரம்பித்தது. இந்த சந்தர்ப்பத்திலே 1993ம் ஆண்டு காஸா — ஜெரிக்கோ உடன்படிக்கை எட்டப்பட்டது.

இதன்மூலம் இஸ்ரேல் அமெரிக்க கூட்டு அடிப்படையான ஒரு வேலையை சாதித்துள்ளது. தற்போது யசீர் அராபாத்தும் இல்லை பாலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்பு ஆயுதப் போராட்டத்திற்குரிய அமைப்பும் அல்ல. மேற்குலகம் மிக நாகரிகமாக பேசி சமாதானம் ஜனநாயகம் என்ற மாயைக்குள் பி.எல்ஓ வையும் விடுதலைப் போராட்டத்தையும் முடிவுக்கு கொண்டுவந்துவிட்டது.

அராபாத் அதீதமான மிதவாத சிந்தனைக்குள்ளும், பிரதேசங்களில் தங்கியிருக்கும் விடுதலைப் 'போரையுமே வழிநடத்துபவராக விளங்கினார். ஆயுதப் போராட்டத்தை பிற நாடுகளில் தங்கியிருக்கும் நிலைமைக்குள் வைத்திருந்ததுடன் இராணுவ ரீதியிலும் மிதவாத அரசியலிலும் தன்னை ஒரு பிரபலமான இராணுவத் தலைவனாக காட்டிக்கொள்ள முயன்றார்.

மிதவாத அரசியலுள்ளும் ஐ.நா அரசியலுக்குள்ளும் அராபாத் நகரும் போது விடுதரைப்போராட்டமும் போராளிகளும் அந்நியப்பட ஆரம்பித்தனர். இதனைப்பயன்படுத்திய அமெரிக்க நட்பு சக்திகள் போராளிகளை சுகவாழ்விற்குள் அதிகம் ஈடுபடுத்தும் விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டன. இதனால் அராபாத் அமெரிக்க இஸ்ரேலிய காலடியில் விழும் வீரனாக மாறினார்.

எனவே மேற்குலகம் உருவாக்கிய பொறிமுறைக்குள் அராபாத் ஜனாதிபதியானார். அராபாத்தின் மரணத்திற்கு காரணமானவர்கள் வரிசையில் மேற்குலகத்திற்கு அதிக பங்குண்டு. அராபாத் போன்ற தலைவர்களை அவர்களின் மரணத்தால் தோற்கடிப்பது மேற்குலகின் உபாயமாகும்.அராபாத்தை தேசிய மட்டத்தில் போற்றப்படும் தலைவனாகவும் சமாதானத்துக்கான நோபல் பரிசுக்குரியவராகவும் மாற்றிய மேற்குலகம் அவரால் பாலஸ்தீனத்தில் எந்த விடுதலையையும் ஏற்படுத்த முடியாதவராக ஆக்கியது.

## அர.ஃபாத்தின் நெருக்கடிகள்

அர.ஃபாத் தனது ஆயுதப்போராட்டத்திலும், அரசியல் செயற்பாட்டிணிலும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தார். இஸ்ரேலிற்கு அமெரிக்கா ஆதரவளித்தது போல் பாலஸ்தீனை வேறுநாடுகள் ஆதரிக்க வில்லை ரஷ்சியா கூட இஸ்ரேலையே ஆதரித்தது. அரபு நாடுகள் கூட ஆரம்பத்தில் பாலஸ்தீனத்தை ஆதரித்த போதும் 1948 யுத்தத்தின் பின் பாலஸ்தீனை கைவிட்டுவிட்டன.

அர.ஃபாத் சந்தித்த நெருக்கடிகளுள் பாலஸ்தீன அராபியரின் அரசியல் முதிர்ச்சியின்மையும், வன்முறைக் கலாசாரம் என்பன குறிப்பிடத்தக்கது. அர.ஃபாத் தூரநோக்குடன் செய்த ஒப்பந்தத்தை விளங்கிக்கொள்ள கூடியவர்களாக பாலஸ்தீன அராபியர்கள் இருக்கவில்லை. பாலஸ்தீன அராபியர்களிடம் இஸ்ரேலியர்கள் போன்று ஒரு கட்டுக்கோப்பு காணப்படவில்லை. இது அர.ஃபாத் தனது கனவான சுதந்திர பாலஸ்தீன தேசத்தை அடைவதற்கு பெரும் தடையாக இருந்தது.

பாலஸ்தீன விடுதலைக்கான ஆயுதப்போரிலும், அரசியல் போரிலும் தைரியத்துடனும் விசுவாசத்துடனும் அர.ஃபாத் தீவிரமாக ஈடுபட்டார். அவரது ஆளுமை பேசப்பட வேண்டியது. எனினும் அர.ஃபாத் எனும் மக்கள் தலைவன் வரலாற்றில் செய்த தவறுகளும் காணப்படுகின்றன. அரபாத் ஒரு தன்னிகர் அற்ற விடுதலை வீரன் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் ஒரு அரசியல் தலைவனாக பல சறுக்கல்களை சந்தித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபாத்தின் முதல் அரசியல் சறுக்கல் அவர் சதாம் உஷைனை ஆதரித்தது. அதுவும் குவைத்தை ஈராக் ஆக்கிரமித்து இனி இந்தத் தேசம் ஈராக்கின் 19வது மாநிலமாக இருக்கும் என்று சதாம் உசைன் அறிவித்திருந்த சமயம், ஒட்டுமொத்த மத்திய கிழக்கும் சதாமை எண்ணி அச்சம் கொண்டிருந்தன. அத்துமீறி குவைத்தை ஆக்கிரமித்ததால் அமெரிக்கா ஈராக் மீது போர் அறிவித்தது. உலகம் முழுவதும் சதாமுக்கு எதிராகத் திரண்டு நின்றன.

இப்படியொரு நெருப்படியான சந்தர்ப்பத்தில், சம்பந்தமே இல்லாத பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும் அதன் தலைவரான அர.்.பாத்தும் சதாம் உசானுக்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர். யாசிர் அர.்.பாத்தும் சதாம் உசைஷனும் சந்தித்த புகைப்படம் வெளியாகி பி.எல்ஓ மீது உலக நாடுகளுக்கு இருந்த கொஞ்சநஞ்ச அனுதாபத்தையும் அழித்துவிட்டது. உலகத்தின் பார்வையில் அன்று பி.எல்ஓ ஒரு போராளி இயக்கம் தான் அரசியல் முகமும் கொண்ட தொரு போராளி இயக்கம் ஆனால் சதாம் ஒரு சாத்தானாகவே மேற்கு நாடுகளால் அடையாளம் காணப்பட்டார்.

சதாம் மத்திய கிழக்கில் ஒரு பெரிய சக்தியாக வளர்ந்து கொண்டிருந்தார். அமெரிக்காவையே எதிர்க்கும் அளவிற்கு அவரிடம் வல்லமை இருந்தது. அமெரிக்கா இஸ்ரேலிற்கு ஆதரவு அளித்தது போல சதாம் நட்பைப் பெறுவது பாலஸ்தீன விடுதலைக்கு உதவும் எனக்கருதினார். இன்னொரு காரணம் சகோதர முஸ்லீம் தேசங்கள் அனைத்தும் யுத்தம் என்று வரும்போது சதாமையே ஆதரிக்கும் என நம்பினார். அமெரிக்காவிற்கு ஆதரவாக அரபு தேசமும் இருக்காது. இயங்காது என நம்பினார். அரபாத்தின் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட மாபெரும் சறுக்கல் இது. இந்தச் சறுக்கலுக்கு கொடுத்த விலை பாலஸ்தீன விடுதலை என்கிற முயற்சிக்கு ஏற்பட்டபலமான பின்னடைவு.

ஐ.நாவே கைவிடும் சூழ்நிலை ஏற்பட்டது எந்த ஒரு தேசமும் அப்போது அர.்.பாத்தின் நியாயங்களை யோசிக்கத்தயாராக இல்லை. மதம் கடந்து, அரசியல் கடந்து ஒழிக்கப்பட வேண்டியதொரு சர்வாதிகாரியாக மட்டுமே சதாம் உஷைனை உலகம் பார்க்கிறது என்பதை அரபாத் அவதானிக்கத் தவறிவிட்டார். சதாம் உஷைனை குவைத் யுத்தத்தில் அரபாத் ஆதரித்தன் விளைவாக பாலஸ்தீன் விடுதலைக்காக இதுவரை அவர் வகுத்து வைத்த அத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களையும் சர்வதேசம் நிராகரித்துவிட்டது. எந்தவொரு தேசமும், அமைப்பும் பி.எல்ஓவுக்கு ஆரதவு, அனுதாபம் தெரிவிக்கத்தயங்கியது.

இச்சூழ்நிலையில் தற்காலியமாக அர:.பாத் தனது ஆயுதப்போராட்டத்தை கைவிட்டு சர்வதேச ஆதரவைப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இதனால் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேசத்தின் அமைதிப்பேச்சு வார்த்தைக்குள் சிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அர:.பாத் தொடர்ந்து இரண்டாவது தவறு செய்தார். அது தான் ஒஸ்லோ உடன்படிக்கையினை இரகசியமாக செய்தமை. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ் ஒப்பந்தம் ரகசியமாகவே செய்யப்பட்டது. உலகுக்கு அறிவிக்கப்படவில்லை. பலஸ்தீனியர்கள் எப்படி ஒப்பந்தத்தை ஏற்பார்கள் என்ற சந்தேகத்தால் ரகசியமாக அர:.பாத் ஒப்பந்தம் செய்தார். ஒப்பந்தம் செய்த எட்டு நாட்களிலே செய்திவெளிவந்துவிட்டது.

பாலஸ்தீனியர்கள் மட்டுமல்ல ஓட்டுமொத்த உலகமே வியப்புடன் பார்த்த சம்பவமது. ஆண்டாண்டு காலமாக பாலஸ்தீனியர்களின் விடுதலைக்காக போராடிய அர:.பாத் பாலஸ்தீனிய மக்களுக்காக பேச்சுவார்த்தை நடாத்தி ஓர் ஒப்பந்தம் வரை போயிருக்கிறார். அதை ஏன் ரகசியமாகக் செய்ய வேண்டும்? மக்கள் மத்தியில் செய்திருக்கலாமே இதனால் அராபியர்கள், யாசிர் அர:.பாத்தை சந்தேகத்துடன் பார்க்க ஆரம்பித்தனர். பாலஸ்தீன மக்கள் அர:.பாத் இரண்டு நகரங்களின் ஆட்சி அதிகாரத்திற்காக அராபியர்களின் அகண்ட பாலஸ்தீன் கனவை சிதைத்து விட்டதாகவே கருதினர். மேலும் இஸ்ரேலை அர:.பாத் அங்கீகரித்தமை மக்கள் அரபாத்மீது கொண்ட நம்பிக்கையையும் மதிப்பையும் சிதைத்துவிட்டது. அர:.பாத் மக்களின் துயர் துடைக்கவும் நிதி கிடைக்கும் பாலஸ்தீனில் சமூக நலவசதிகளை மேம்படுத்தலாம் எனும் அராபியர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தலாம் எனும் மட்டுமே செயல்பட்டதாக மக்கள் கருதினர்.

## முடிவுரை

மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஓர் அரசியல் தலைவரான அர:.பாத் ஒப்பந்தத்திற்கு சம்மதித்தது சரியே. ஆயினும் அவர் மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிக்காமல் ஒப்பந்தம் செய்ததும். ஒப்பந்தத்தின் சிறிய நலன்களைப்பெற பாரிய விட்டுக் கொடுப்பையும் (இஸ்ரேலை அங்கீகரித்தமையும்) அவரது தவறானது. ஒப்பந்தம் கைச்சாத்திடமுன் அவரது பாலஸ்தீனியர்களுக்கு அது தொடர்பாக விளக்கம் கொடுத்திருப்பின் அரபாத் மக்கள் ஆதரவை இழக்க நேரிட்டு இருக்காது. அரபாத் செய்த ஒப்பந்தத்தால் பி.எல்ஓ வின் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது.

யசீர் அர∴பாத் நவம்பர் 11 2002 இல் மரணமானார் இவர் புதைக்கப்பட்ட இடம் ரமல்லா ஆகும். தற்போது அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டு ஜெருசலத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே இனங்களுக்கிடையிலான மோதல்களின்போது ஒரு இனம் மற்றைய இனத்தினை அடக்குவதும் அதற்கு எதிராக அதனை காக்க தலைமைகள் உருவாக்கப்படுவதும் காலம் கற்றுத்தந்த பாடம் எனவே அராபாத் போன்ற தலைவர்களின் உருவாக்கம் தவிர்க்க முடியாததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## மம்மூத் அப்பாஸ்[16]



பாலஸ்தீன நாட்டில் மம்மூத் அப்பாஸ் அவர்கள் பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதி யாகவும் பதவி வகுத்து வருகிறார். இவர் 1935ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி பிறந்த இவர் இளவயதில் சிறந்த முறையில் கல்வியைக் கற்று டமாஸ்கஸ் பல்கலைக்கழகத்தில் முதல் பட்டதத்தினைப் பெற்றுக்கொண்டார். மேலும் அவர் பல ஆய்வுகளை மேற்கொண்டு லுமும்பா பல்கலைக்கழகத்தில் அறிவியல் துறையில் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.இவர் அறிவியல் சார்ந்து புலமை வாய்ந்தவராகவும் அரசியலில் ஈடுபாடு கொண்டவராகவும் காணப்பட்டார். அதுமட்டுமன்றி சியோனிஸம் மற்றம் மார்க்ஸிஸம் என்பன பற்றி சிறப்பாக சிந்திப்பவராகவும் இவற்றின் மீது உறவுத் தன்மையினையும் கொண்டவராக விளங்கியிருந்தார்.

மம்மூத் அப்பாஸ்ன் தனிப்பட்ட வாழ்க்கையில் மனைவியாக அமீனாவும் மூன்று பிள்ளையும் கொண்டது. மூத்தமகன் மாசென் அப்பாஸ், இரண்டாவது மகன் யாசர் அப்பாஸ், இவர் முன்னாள் பொதுஜன முன்னணித் தலைவரும் ஒரு கனடியத் தொழிலதிபரும் ஆவார். மூன்றாவது மகன் நரீக் இவர் ஒரு வணிக நிர்வாக அதிகாரியாக பணிபுரிகிறார்

---

[1] பி.குகவரதா் ஆா்.ஜெசிந்தன் எஸ்.பானுரேகா எஸ்.லுக்சினி வி.ரதினி ஆகிய மூன்றாம் வருட அரசறிவியல் துறை மாணவர்களால் முன்வைக்கப்பட்ட அளிக்கையின் தொகுப்பு-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மம்மூத் அப்பாஸ் 1950களின் மத்தியில் எபிரோட்டின் சிவில் சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இயக்குனராக இருந்தார். பாலஸ்தீன நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட பாலஸ்தீன மக்கள் பலர் ஒன்று சேர்ந்து தம் நாட்டை முன்னெடுப்பதற்கான முயற்சியில் அரசியலில் பெரிதும் ஈடுபாடு காட்டியபோது முகமது அப்பாசும் துணையாய் நின்றார். அப்பாஸ் பாலஸ்தீனத்தில் பிரதமர் ஆக முன்னரே நாட்டின் விடுதலைக்காக அரசியலில் ஈடுபட்டார். அதாவது 1977ல் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக தீவிரமாக செயற்பட்டார். ஆனால் ஒரு சாதுரியமானவர் மட்டுமே யசீர் அரபாத்தினைப் போன்று துணிகரமான வீரர் அல்ல.

## மம்மூத் அப்பாஸ் பிரதமராக பதவி வகித்த சூழ்நிலை

2002ம் ஆண்டு ஜீன் 24ம் திகதி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புகூஷ் பாலஸ்தீன மக்களுக்கு ஒரு செய்தியை வெளியிட்டார். தன்னிடம் ஒரு திட்டம் தயாராக இருக்கிறது என்றும், அது பாலஸ்தீன மக்களின் பிரச்சனையை தீர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்ட திட்டம் என்றும் இது அரசியல் லாபங்கள் எதையும் பாராமல் முழுக்க முழுக்கப் பாலஸ்தீன் அமைதி என்பதை மட்டுமே நோக்கமாக வைத்து வரையப்பட்ட திட்டம் என்றார். ஆனால் இத்திட்டம் தொடர்பாக யசீர் அ்ரபாத்துடன் பேச முடியாது என்றும் ஜோர்ஜ் புஷ் குறிப்பிட்டார். தீவிரவாதத்தின் நிழல் கூடப்படியாத ஒருவரை உங்கள் தலைவராக முதலில் தேர்தெடுங்கள் பின்னர் அவருடன் தான் பேசுவதாகவும் புஷ் தெரிவித்தார். மேலும் அவர் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவராகவும் இருக்க வேண்டும். என்னுடைய தெரிவு மம்மூத் அப்பாஸ் என்றும் குறிப்பிட்டார்.

இப்பகிரங்க வேண்டுகோளெல்லாம் முன் கூட்டியே திட்டம் இடப்பட்டு இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனுடன் கலந்து பேசி விட்டுச் செய்யப்பட்டதுதான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. வேறு வழியில்லாமல் யசீர் அ்ரபாத் மம்மூத் அப்பாஸை பாலஸ்தீன அதிகாரசபையின் பிரதமராக அறிவிக்க வேண்டி வந்தது 2003 ஆண்டு மார்ச் 13ம் திகதி, அப்பாஸ் பிரதமரானார்.அமெரிக்கா இதை தனக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகக் கருதியது. ஜோர்ஜ்புஷ் உடனடியாக மம்மூத் அப்பாவை வாசிங்டனுக்கு அழைத்தார். மீண்டும் இருதரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு வார்த்தைகளைத் தொடங்குவதற்கான சூழல் ஏற்பட்டிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் முன் தெரிவித்தார்.

ஜீலை 25ம் திகதி அப்பாஸ் வாஷிங்டனுக்குப் பயணமானார். புஷ்யுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நான்கு நாள் இடைவெளியில் புஷ் ஏரியல் ஷரோனை அழைத்து 29ம் திகதி பேசினர். பின்னர் புஷ் இரு தலைவர்களுடன் தனித்தனி பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட பிறகு அனைவரும் சேர்ந்து பேசுவதற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்தார். தீர்வுக்கான வரைபடத்தை *(Road Map)* முன்வைத்துப் பேச்சுவார்த்தையை புஷ் தொடங்கினர். தீர்வுத் திட்டம் பாலஸ்தீனம், இஸ்ரேல் என்கிற இரு தனித்தனி தேசங்களுக்கான அவசியத்தையும் சாத்தியத் தியத்தையும் முன்வைத்து வரையப்பட்டது. ஒவ்வொரு கட்டப் பணி களையும் ஒழுங்காகச் செயல்படுத்துகிற பட்சத்தில் 2005ம் ஆண்டுக்குள் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு கண்டுவிடலாம் என்று புஷ் குறிப்பிட்டார்.

இருநாடுகள் சம்மந்தப்பட்ட ஒரு பிரச்சனையில் மூன்றாவதாக ஒரு நாடு தலையிட்டு அமைதிக்கான முயற்சி மேற்கொள்வதில் சில பிரச்சனைகள் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

2003ம் ஆண்டு அமைதிக்கான சாத்தியம் தென்பட்டது. அதாவது இஸ்ரேல் சிறையில் வாடும் 300 அராபியர்களை விடுவிக்க முடிவு செய்திருப்பதாக ஏரியல் ஷரோன் அறிவித்தார். மற்றும் ஜெருசலேம் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடைய அத்தனை போராளி களையும் கைது செய்ய உத்தரவிட்டார் முகமது அப்பாஸ். இதனை பாலஸ்தீனர்கள் எதிர்த்தனர்.

இதற்கிடையில் அப்பாஸ் பதவி விலக வேண்டும் என்கிற கோஷமும் உடனடியாக எழ ஆரம்பித்துவிட்டது. அ·ரபாத்தின் தீவிர ஆதரவாளர்களுக்கு அப்பாஸ் பிரதமராக இருப்பதில் துளிகூட விருப்பமின்மை காணப்பட்டது. யசீர் அ·ரபாத்தின் முழுச்சம்மதமில்லாமல் அமெரிக்க நிர்ப்பந்தத்தின் பேரில் பிரதமராக்கப்பட்ட ஒருவர் சக போராளிகளை கைது செய்யும் அளவுக்கு போய்விட்டார் என்றால் அவர் பதவியில் இருக்கக்கூடாது என்று கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாஸ் அடிப்படையில் கொஞ்சம் சாது அவருக்கு அரசியல் தெரியுமே தவிர ஆதரவாளர் பலமெல்லாம் கிடையாது. ஆளச்சொன்னால் ஆள்வார். வீட்டுக்குப் போகச் சொன்னால் போய்விடுவார். அவ்வளவு தான். யசீர் அரபாத்திற்கு தர்மசங்கடமான நிலைமை அப்பாஸ் மீது அவருக்கு தனிப்பட்ட வெறுப்புக்கள் கிடையாது. ஆனால் அப்பாஸின் அமைதி நடவடிக்கைகள் நிச்சயம் விபரீத விளைவுகளைத்தான் உண்டாக்கும் என்று அவர் திடமாக நம்பினார். எனவே அப்பாஸைக் கூப்பிட்டுத் தமது அதிருப்தியை நாசுக்காக தெரிவித்தார். அர.ஃபாத்தின் கீழே பணியாற்ற முடியாத சூழல் ஏற்பட்டு அப்பாஸ் பதவி விலகுவதை தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்து பதவி விலகினார். பின்னர் பாலஸ்தீன் அத்தாரியின் பிரதமராக முகமது குரோலை அரபாத்தின் ஆதரவாளர்கள் நியமித்தார்கள். அகமது குரே அப்பாஸைப் போல மிதவாதி அலலர்.

**ஜனாதிபதியாக மம்மூத் அப்பாஸ்**

அர.ஃபாத்தின் மரணத்திற்குப் பின்பு பாலஸ்தீன் அதிகார சபையின் தலைமைப் பொறுப்புக்குத்தேர்வு செய்யப்பட்டார் அப்பாஸ் பாலஸ்தீன் அதிகார சபையின் தலைவராகப் பொறுப்பேற்று இருபத்தி நான்கு மணி நேரம் கூட ஆகியிராத நிலையில் அப்பாஸ், ஹமாஸின் கோபத் தாண்டவத்தைக் கண்டு மிகவும் கவலை கொண்டார். அர.ஃபாத்தின் மரணம் நிகழ்ந்த சூட்டோடு பாலஸ்தீன் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கண்டுவிட முடிந்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் இன்னும் பல்லாண்டுக் கணக்கில் நீண்டு கொண்டேதான் போகும் என்று அவர் நினைத்தார்.

அர.ஃபாத்தின் இறுதி ஊர்வலம் நடந்ததற்கு மறுநாளே அப்பாஸ் சிரியாவுக்குப் சென்றார். சிரியாவின் எல்லைப்பகுதியில் முகாம் அமைத்துத் தங்கியிருந்த ஹமாஸ் தலைவர்களைச் சந்தித்து தாக்குதலை தயவுசெய்து நிறுத்துங்கள் என்று காலில் விழாத குறையாக கெஞ்சினார். ஆனால் ஹமாஸ் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

பிரச்சினைக்கு அமைதித்தீர்வு என்று இறுதிவரை சொல்லிக் கொண்டிருந்த அரபாத் மறைந்துவிட்டார். அமைதி ஏற்படாததற்கு காரணமே அர.ஃபாத்தான் என்று அமெரிக்க அதிபர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய அயோக்கியர்களுடன் நீங்கள் என்ன அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளப்போகிறீர்கள்? இதுவரை செய்து கொண்ட உடன்படிக்கைகள் எப்போத்ாவது நீண்ட நாள் நோக்கில் பலன்தரத்தக்கதாக இருந்திருக்கின்றனவா? அவர்களுக்காக நீங்கள் ஏன் வந்து எங்களிடம் கெஞ்சுகிறீர்கள்? என ஹமாஸ்கேள்வி எழுப்பியது. கேள்விகள் அனைத்தும் நியாயமானவைதான் என்பது அப்பாஸீக்குத் தெரிந்திருந்தது. ஆனால் பாலஸ்தீன் அதிகார சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஒருவர் இது நியாயம் என்று ஒப்புக்கொள்ள முடியாது. அமைதி நடவடிக்கை எது ஆரம்பமாவதென்றாலும் முதல்படி போராளி இயக்கங்களைத் தடுத்து நிறுத்துவதாகவும் போராளிகளைக் கைது செய்வதாகவும் மட்டுமே இருக்கும். இது ஹமாஸ் தலைவர்களுக்கும் தெரியும். ஆனால் தாக்குதலை நிறுத்தக்கோரி வந்த அப்பாஸ் மீது அப்போது அவர்களுக்குக் கோபம் மட்டுமே வந்தது. தயவுசெய்து போய்விடுங்கள் என்றுதான் சொன்னார்கள். வேறு வழியில்லாமல் அப்பாஸ் தோல்வியுடன் திரும்ப வேண்டியதாகிவிட்டது.

அப்பாஸ் வந்து போனதன் தொடர்ச்சியாக டிசம்பர் 12ம் திகதி ஹமாஸ் ஒரு மிகப்பெரிய தாக்குதலுக்கான ஆயுத்தங்களை உடனடியாகச் கொள்வனவு செய்தது. காஸாமுனையில், எகிப்து எல்லையோரம் அமைந்துள்ள ர:.பா என்கிற இடத்தில் ஒரு சுரங்கப் பாதையில 1.5 கிலோஎடையுள்ள வெடிபொருள்களைக் கொண்டு சேர்த்து அருகிலுள்ள இஸ்ரேலில் வெடிக்கச் செய்தார்கள்.

மூன்று வீரர்கள் பலி அதைக்காட்டிலும் பெரிய பாதிப்பு அந்தச் சுரங்கமே நாசமாகிவிட்டது. பல கட்டடங்கள் கடும் சேதத்துக்குள்ளாயின. குண்டு வெடிப்பு அதிர்ச்சியிலிருந்து இஸ்ரேல் ராணுவத்தினர் மீள்வதற்குள்ளாகவே துப்பாக்கி தாக்குதலையும் தொடங்கி கண்ணில் பட்ட அத்தனை வீரர்களையும் சுடத்தொடங்கினார்கள். பலியானது இரண்டு பேர்தான் என்றாலும் ஏராளமானவர்கள் மோசமான தாக்குதலுக்கு உள்ளாயினர்.

ஹமாஸ் இந்தத் தாக்குதலை:.பத்தா அமைப்புடன் இணைந்து மேற்கொண்டதாகப் பின்னால் தெரியவந்தது. யாசிர் அர:.பாத் இறக்கவில்லை. யூதர்கள் தான் கொன்றுவிட்டார்கள். அதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிதீர்க்கவே இத்தாக்குதலை நிகழ்த்தினோம் என்று அபர மஜாத் என்கிற ஃபத்தாவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

நிலைமை மேலும் மோசமடையத் தொடங்கியது. ஹமாஸின் கோபம் ஏனைய பாலஸ்தீன் போராளி இயக்கங்களுக்கும் பரவ ஒரு முழு நீள யுத்தம் தொடங்குவதற்கான அத்தனை சாத்தியங்களும் மிக வெளிப்படையாகத் தென்பட ஆரம்பித்தன. அப்பாஸ் கவலை கொண்டார்.காரணம் 2005 ஜனவரி 9ம் திகதி பாலஸ்தீன அதிகார சபையின் பொதுத்தேர்தல் திட்டமிடப்பட்டிருந்தது. தற்காலிக அதிபராக இருந்த மஃமூத் அப்பாஸை முறைப்படி தேர்தல் மூலமே பாலஸ்தீன் அதிகார சபையின் தலைவராக நியமித்து, பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டாக வேண்டிய நெருக்கடி இஸ்ரேலுக்கு இருந்தது.

ஆனால் தேர்தல் ஒழுங்காக நடைபெறுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக இருந்தது. ஒரு பக்கம் ஹமாஸை சமாதானபபடுத்தி அவர்களையும் ஜனநாயக அரசியலுக்குள் இழுபப்தற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்க இன்னொரு பக்கம் கைதாகிச் சிறையில் இருந்த பல பாலஸ்தீன் போராளிகளை விடுவித்தால்தான் உங்களது கருத்திற்கு செவி சாய்ப்போம். என்று ஹமாஸ் முரண்டு பிடிக்க இரண்டு பக்கமும் மாட்டிக்கொண்டு தவித்துக்கொண்டிருந்தார் அப்பாஸ்.

பல பிரச்சனைகள் இருந்தாலும் திட்டமிட்டபடி ஜனவரி 9ம் திகதி பாலஸ்தீன் அதிபர் தேர்தல் நடந்தது. மஃமூத் அப்பாஸ் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவதில் பிரச்சனை ஏதும் ஏற்படவில்லை.வெற்றி பெற்ற கையோடு அப்பாஸ் ஹமாஸ் உள்ளிட்ட அத்தனை போராளி இயக்கங்களுக்கும் ஒரு கோரிக்கை வைத்தார். தயவுசெய்து துப்பாக்கிகளைக் கீழே போடுங்கள். யுத்தத்தை நிறுத்துங்கள். இஸ்ரேலியப் படையிடம் இருந்து உங்களைக் காப்பாற்றுவது என்னுடைய பொறுப்பு. அதேபோல் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காணுவதற்கும் நானே பொறுப்பு எனக் குறிப்பிட்டார். இந்த கோரிக்கை இஸ்ரேலுக்குப் பிடிக்கவில்லை. போராளிகளிடம் அப்பாஸ் கெஞ்சுகிறார் என்று விமர்சித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Municipal Council
Batticaloa.

அதிபராகத் தேர்வான மம்மூத் அப்பாஸ் இன்னும் ஒருநாள் கூட பாராளுமன்றம் சென்று நடவடிக்கை எதையும் தொடங்கியிருக்க வில்லை. அதற்குள் இஸ்ரேலுடன்னான உறவை முறித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. பதவி ஏற்பதற்கு முன்னதாகவே போராளி இயக்கங்களை அமைதி காக்க வேண்டுகோள் விடுத்த அப்பாஸீக்கு இன்னும் அதற்கான பதில் கூட வரவில்லை. அவரது கோரிக்கை ஹமாஸ் உள்ளிட்ட இயக்கங்களின் தலைவர்களின் கரங்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்குமா என்பது கூட சந்தேகம்.

ஒருவார அவகாசம் கூடத் தராமல் உறவு முறிவு என்று அறிவித்தால் என்ன அர்த்தம்? ஆனாலும் அப்பாஸ் தன்னாலான அத்தனை முயற்சிகளையும் உடனடியாக மேற்கொண்டார். பாலஸ்தீன் அதிகார சபையின் காவல்துறையினரை மொத்தமாகத் திரட்டி காஸாவுக்கு முதலில் அனுப்பினார். அங்குள்ள யூதக் குடியிருப்புகளுக்கு வலுவான காவல் ஏற்பாடுகளை முதலில் செய்துவிட்டு, போராளி இயக்கங்களின் ராக்கெட் எதிர்ப்பு பீரங்கிகளையும் அங்கே கொண்டு நிறுத்தச் சொன்னார்.

இவற்றைச் செய்த கையோடு போராளி இயக்கங்களின் தலைவர்களுக்கும் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். தயவுசெய்து அமைதி காக்க வேண்டும். எனக்குச் சற்று அவகாசம் கொடுங்கள். ஏதாவது நல்லது நடக்குமா என்றுதான் நானும் பார்க்கிறேன். உங்கள் ஒத்துழைப்புடன் தான் எதுவுமே சாத்தியம் என்று கூறினார். இஸ்ரேல் என்ன கிண்டல் செய்தாலும், எத்தனையும் கருத்தில் எடுக்காமல் இயக்கங்களின் ஒத்துழைப்பு இல்லாமல் பாலஸ்தீனில் அமைதி இல்லை என்பது மீண்டும் அப்பாஸ் தெரிந்திருந்தார். அப்பாஸின் இந்த முயற்சிகள் ஓரளவு பலனளித்தன என்றுதான் சொல்ல வேண்டும். ஏரியல்ஷரோன் அப்பாஸீடன் அமைதிப்பேச்சை நடாத்த முன்வைத்தார்.

